


# பிரதேச சாகித்திய விழா
# ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල

## சிறப்பு மலர்
## විශේෂ කලාපය

பிரதேச செயலகம்
பட்டணமும், சூழலும்
திருக்கோணமலை

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය
නගර හා කඩවත්
ත්‍රිකුණාමලය

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சாகித்திய விழா

# 2006

**பட்டணமும், சூழலும் பிரதேச செயலகம்**
**திருக்கோணமலை**

## ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල

## 2006

**ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය**
**නගර හා කඩවත්**
**ත්‍රිකුණාමලය**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு, கிழக்கு மாகாண பிரதம செயலாளர்
திரு. சி. ரங்கராஜா அவர்களின்

# ஆசிச் செய்தி

சிந்திக்கும் ஆற்றல் ஒரு மிகச் சிறந்த மனிதவளம். இதை முழுமையாக நாம் பயன்படுத்துவதில்லை. இந்த ஆற்றலை அவரவர் மனோநிலைக்கும் சுபாவங்களுக்கும் ஏற்ற வகையில் பயன்படுத்துகின்றனர். ஒரு சிலர் தமது எழுத்தாற்றல், கவிதையாற்றல், கலையாற்றல் மூலம் தமது சிந்தகைளை வெளிப்படுத்துகின்றனர். அநேகமாக சமுதாயம் நற்பயன் பெற வேண்டுமென்ற நோக்கே அவற்றில் ஓங்கி நிற்கிறது. ஒரு பிரதேசத்திலுள்ள இத்தகைய சிந்தனையாளர்களை ஊக்குவிப்பது பிரதேச சாகித்திய விழாவின் முக்கிய அம்சமாகும்.

மேலும் இவ்விழா அப்பிரதேசத்துக்குரிய பாரம் பரியங்களையும், பண்பாடுகளையும் ஞாபகமூட்டுவதோடு புத்துயிரூட்டுவதாகவும் அமைகிறது.

இவ்விழா இனிது நிறைவேற இறையருள் வேண்டுவதோடு, இதை ஏற்பாடு செய்து நடாத்தும் திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலாளருக்கும், விழா ஏற்பாட்டாளர்களுக்கும் எனது மனமுவந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சி. ரங்கராஜா,
பிரதம செயலாளர்,
வ.கி.மா.
திருகோணமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு, கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சின் செயலகம்
திரு. ஆர். தியாகலிங்கம் அவர்களின்

# ஆசிச் செய்தி

ஒரு இனத்தின் பாரம்பரியமான பண்பாட்டின் துலங்கல்களை அப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் கலை இலக்கிய முயற்சிகளினூடாகவே அடையாளப்படுத்தப்பட முடியும். ஒவ்வொரு இனத்திற்குமென தனித்துவமானதும் சிறப்பானதுமான கலை இலக்கிய பாரம்பரியங்கள் உள்ளபோதும் அவை தொடர்ச்சியாக மீள் உருவாக்கம் செய்யப்பட்டுக் கொண்டுவரும் பொழுதே அவை வாழும் கலையாக நிலைபெற்று மற்றையவர்களுக்குப் பயன்படும்.

இத்தகைய வாழும் கலை இலக்கியப் பாரம்பரியங்களை இளம் தலைமுறையினரிடையே அறிமுகப்படுத்தி, அவர்கள் மத்தியில் ஆழப்பதிக்கும் முயற்சிகள், பாடசாலை மட்டத்தில் அல்லது கல்வி நிறுவனங்கள் மட்டத்தில் மட்டுமல்லாது பிரதேச ரீதியாகவும் நடாத்தப்பட வேண்டும்.

அந்த வகையில் திருகோணமலை நகரமும், பட்டினமும் பிரதேச செயலகம் கடந்த பல ஆண்டுகளாக திருகோணமலையில் இளம் தலைமுறையினரிடையே கலை இலக்கிய போட்டிகளை நடாத்திவருவது பராட்டுக்குரியது. அதனை ஒட்டிக் கொண்டாடப் பட்டுவரும் பிரதேச சாகித்திய விழாவில் இளம் கலைஞர்களும் எழுத்தாளர்களும் கௌரவிக்கப்பட்டு வருவதும் ஒரு முன் மாதிரியான ஊக்குவிப்புச் செயற்பாடாகும்.

இத்தகைய கலை இலக்கியப் போட்டிகளையும் சாகித்திய விழாவையும் தவறாது ஒரு ஒழுங்குமுறையில் நடாத்திவரும் திருகோணமலை பிரதேசசெயலாளர், கலாசார உத்தியோகத்தர்கள், மற்றும் அலுவலர்களின் இம்முயற்சிகள் தொடரப்படவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

R. தியாகலிங்கம்
செயலாளர்
வடக்கு, கிழக்கு மாகாணம்
கல்வி பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வடக்கு, கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளர் ஜனாப் எம். கே. எம். ஹனீபா அவர்களின்**

# ஆசிச் செய்தி

பட்டணமும் சூழலும் பிரதேசச்செயலகத்தினால் வருடாந்தம் சாகித்திய விழா நடத்தப்பட்டு வருவதையிட்டு பிரதேசசெயலாளர் அவர்களுக்கும் விழா அமைப்புக்குழுவினருக்கும் எனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இதே விழா இவ்வருடமும் மிகச் சிறப்பாக நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன் சாகித்திய மலர் வெளியீடும் நடைபெற இருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதிலும் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இம்மலர் வெளியீடானது எழுத்தாளர்களை நாடறியச்செய்யும் ஒரு நிகழ்வாகும். மேலும் அவர்களை எழுதுவதற்கும் உற்சாகப்படுத்துவதாக அமைகின்றது. அத்துடன் இலக்கிய வாசகர் நெஞ்சங்களுக்கும் ஒரு சந்தோசமான நிகழ்வாகும். இவ்வாறான நிகழ்வும் மலர்வெளியீடும் எழுத்தாளர்களையும் வாசகர்களையும் இணைக்கும் ஒரு பாலமாக அமைகின்றது. மேலும் இந் நிகழ்வுகள் சமூகத்திற்கும் சமூகசீர்திருத்தத்திற்கும் சமூகத்தின் சிந்தனையை தூண்டுவதற்கும் ஒரு சாதனமாக அமையும் என்பதில் ஐயமில்லை. எனவே தங்களால் இப்பணி தொடரவேண்டும், வளரவேண்டும் என்று வாழ்த்துவதுடன், எனது நல்லாசிகளையும் வழங்குகின்றேன்.

எம்.கே.எம்.ஹனிபா
சிரேஸ்ட உதவிச் செயலாளர்
வடக்கு, கிழக்கு மாகாணம்
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ත්‍රිකුණාමලය දිසාපති හා දිස්ත්‍රික් ලේකම් වී.වී.ආර් ද සිල්වා මහතාගේ සුභපැතුම් පණිවිඩය.

ත්‍රිකුණාමලය නගර හා කඩවත් ප්‍රාදේශිය ලේකම් කාර්යාලය මගින් 9 වැනි වරටත් ඉදිරිපත් කරනු ලබන සාහිත්‍ය කලා උළෙලේ සමරු කළාපයට පණිවිඩයක් නිකුත් කිරීමට ලැබීම ගැන මා අතිශයින්ම සතුටු වෙමි.

අප රටේ සිංහල දෙමළ හා මුස්ලිම් යන ජන කොටස්වල සංස්කෘතිය යම් තාක් ප්‍රමාණයකට හෝ ඉතිරිව පවතින්නේ නම් ඒ සාහිත්‍යය ඊට බද්ධවී තිබෙන බැවිනි. සාහිත්‍ය යනු විශ්ව භාෂාවකි. එයද දැන් අප අතරින් පිරිහෙමින් පවතින මෙවන් යුගයක අති දුෂ්කර වූ ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කයේ ත්‍රිකුණාමලය නගර හා කඩවත් ප්‍රාදේශිය ලේකම් කාර්යාලය මගින් සාහිත්‍ය කලාව නගා සිටුවීම සඳහා දක්වන උනන්දුව හා ඕනෑකම පිළිබඳව මාගේ කෘතඥතාව ප්‍රාදේශිය ලේකම් ඇතුළු කාර්ය මණ්ඩලයට පිරි නැමීමට මෙය අවස්ථාවක් කොට ගනිමි.

දිගු කලක සිට කුරිරු යුද්ධයෙන් පීඩා විඳි ත්‍රිකුණාමලය ප්‍රදේශයේ සිංහල දමළ මුස්ලිම් මැලේ හා බර්ග අදී ජන කොටස්වල ගිලිහී ගිය විශ්වාසය යලි ඇතිකර සාමකාමී මාවතකට පිවිසෙමින් සිටින මෙවන් අවධියක ඔබ කාර්යාලය මගින් සාහිත්‍ය උළෙලක් පැවැත්වීමෙන් ජාතීන් අතර සමගිය හා සහජීවනය ඇති කිරීමටත් ඒ තුලින් රටට සාමය උදා වීමටත් මෙය අත්වැලක් වේවායි ප්‍රාර්ථනා කරමි.

වී.වී.ආර් ද සිල්වා
දිසාපති හා දිස්ත්‍රික් ලේකම්
ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச சாகித்திய விழா
குழுத் தலைவரும் பிரதேச செயலாளருமாகிய
திருமதி. சசிதேவி ஜலதீபன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

பல்வேறு சமூக கலாசார யதார்த்தங்களை கலை, இலக்கிய, வடிவங்களினூடாக வருடம் தோறும் வெளியிட்டு வரும் சாகித்திய விழா வெளியீட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதையிட்டு பெருமையும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பல்வேறு இனத் தொகுதியினரின் விழுமியங்களை பிரதிபலிக்கும் ஊடகங்களாக கலை, இலக்கியங்கள் மிளிர்கின்றன. இவற்றைப் படைப்பவர்கள் தாம் வாழும் சூழல் காலம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே பெருமளவு படைப்புக்களை சமூகத்திற்கு வழங்குகின்றனர். ஒரு சமூகத்தின் பாரம்பரியங்கள் கால ஓட்டத்தினூடே கலை, இலக்கயங்களூடாக அடையாளப்படுத்தப்பட வேண்டியது. அச்சமுதாயத்தின் தேவையாக உள்ளது.

ஒரு பிரதேசத்தின் கலை இலக்கியப் படைப்பாற்றலை வளர்ப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் இவை தொடர்பில் விழாக்களும், போட்டி நிகழ்வுகளும், ஊக்குவிப்புக்களும், பாராட்டுக்கள், கௌரவிப்புக்கள் என்பன ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இந்த வகையில் பல்லின சமூகத்தை கொண்ட எமது திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலக பிரிவின் இவ்வாண்டிற்கான பிரதேச சாகித்திய விழாவும் மலர் வெளியீடும், ஒவ்வொரு சமூகத்தினரினதும் விழுமியங்களையும் கலாசார பாரம்பரியங்களையும் வெளிக்காட்டுவதற்கு கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு சிறந்த களமாகவும், போட்டி முயற்சியாகவும், ஊக்குவிப்பாகவும் அமைந்திருக்கும் என நம்புகின்றேன்.

இவ்வாண்டிற்கான விழாவினை சிறப்பாக நடாத்த முன்னின்று உழைத்த அனைவருக்கும் மலர் வெளியீட்டினை ஆக்கப்பூர்வமானதாக வெளியிடுவதற்கு உதவிய அனைவருக்கும் எனது பாராட்டை தெரிவிப்பதுடன் இவ்வாறான முயற்சிகளில் எதிர்காலத்தில் மேலும் சிறப்பாக வெளியிட வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**சசிதேவி ஜலதீபன்**
**பிரதேச செயலாளர்,**
**பட்டினமும், சூழலும்**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சுனாமி என்னும் பேரலை"

நாம் வாழுகின்ற இந்தப் பிரபஞ்சம் எல்லையற்றது. கற்பனையில் நாம் அதற்கொரு எல்லையை நிர்ணயித்தாலும் கூட எமது மனித மனம் அதற்கும் அப்பால்...? என்று கேட்டு நிக்குமே அல்லாமல் அந்த எல்லையுடன் நின்றுவிடாது.

அது போலவே எந்த ஒரு செக்கனும் தரித்து விடாமல் ஓடிக்கொண்டிருக்கும் காலம் கூட எல்லையற்றது. நேற்றைய தினம் என்று கூறி பின் நோக்கி போய்க் கொண்டே இருக்கலாம். அது போல நாளைய தினம் என்று கூறி முன் நோக்கி போய்க் கொண்டே இருக்கலாம். முடிவு என்று இல்லை! அப்படி ஒரு முடிவை கற்பனை பண்ணி பார்க்கவும் இயலாது. விரிந்து கொண்டே செல்லும். எமது அறிவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளமைக்கு இதுவே ஆதாரம்!.

இந்த பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கும் இற்றை வரைக்கும் இடைப்பட்ட காலத்தில் எத்தனை கோடி கோள் மண்டலங்களில் எத்தனை எத்தனை பிரளயங்கள் ஏற்பட்டிருக்கும். அதுவே இயற்கை... இயற்கை கொண்டிருக்கும் சக்தி!. அந்த இயற்கை படிப்படியாக ஒரு ஒழுங்கு முறைக்கு வந்த பின்னரே நட்சத்திரங்களும் கோள்களும் வால் நட்சத்திரங்களும் பெரும் பாறைகளும் தனக்கென ஒருபாதையில் நிலை பெற்றிருக்கும்.

அந்த வகையில் எமது பூமி முகம் கொடுத்திருக்கக் கூடிய விபத்துக்கள் ஓய்ந்து உயிரினம் தோற்றம் பெற்ற நிலையில் மனிதன் இயற்கைக்,கே சவால் விடும் விதத்தில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

**26.12.2004** ஞாயிறு தினம், தூங்கிக் கொண்டிருந்த இயற்கை சிறிது சிலிர்த்து மறு பக்கமாக திரும்பி படுத்து மீண்டும் படுக்கத்தொடங்கிவிட்டது. அந்த ஒரு சில நிமிடங்களில் உலகின் பல நாடுகளிலுமான மூன்றுலட்சத்துக்கும் மேற்பட்டோர் இறக்க நேரிட்டது. பல கட்டிடங்கள் தரைமட்டமாகின. ஏராளமான வாகனங்கள் இழுத்துச் செல்லப்பட்டு நொருக்கப்பட்டன. இன்னும் எத்தனையோ வகை பொருள் நட்டம் உயிர் நட்டம் மனித குலத்திற்கு ஏற்பட்டது!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவியின் அமைப்பு

புவி மூன்று பிரதான பகுதிகளாக விளங்குகின்றது. இதனை எவரும் உட்சென்று பார்த்து வரவில்லை. புவியின் ஆழத்தில் உருவாகும் அதிர்வுகளை ஆதாரமாகக் கொண்டே பூமிசாஸ்திர வல்லுனர்கள் அவ்வண்ணம் வரையறை செய்துள்ளார்கள். அவை கோளவகம், இடையோடு, புவியோடு என அமையும்.

கோளவகம் புவியின் நடுப்பகுதியாகும். இது நிக்கல், இரும்பு என்னும் உலோகங்களின் சேர்க்கையாலானது. இதன் விட்டம் 6944கி.மீ ஆகும். இதன் வெப்ப நிலை $2000^0$ செல்சியஸ். இதனை இரண்டாகப் பிரிப்பின் உட்கோளவகம் கடின தன்மை உடையதாகவும், வெளிக் கோளவகம் திரவ தன்மையுடையதாகவும் அமைந்துள்ளது.

கோளவகத்திற்கு மேலே மெல்லிய இடைவெளி உள்ளடங்கலாக இடையோடு அமைந்துள்ளது. இடைவெளியின் பருமன் 3.2 கி.மீ ஆகவும் எரிமலைக் குழம்புப் பாறைகளைக் கொண்ட இடையோடு 2900 கி.மீ பருமனையும் கொண்டுள்ளது.

புவியோடு புவியின் மேற்பரப்பாகும். 10 கி.மீற்றர்களில் இருந்து 50 கி.மீ வரையில் தடிப்பானது.

மொத்தத்தில் புவியோடு திடமானதாகவும் இடையோடு பாகுதன்மை கொண்டதாகவும் உருகிய பாறைக் குளம்பாகவும் அமைந்திருக்கின்றன. பாகுத் தன்மை கொண்டதும் $1000^0$ செல்சியஸ் வெப்பநிலை உடையதுமான இடையோட்டின் மேற்பரப்பில் புவியோடு மிதப்பதாகவும் இந்நிலையில் புவியோடு தாழ்வதையும், உயர்வடைவதையும் புவிசாஸ்திர வல்லுனர்கள் உறுதிப் படுத்தியுள்ளனர்.

புவியோடு பிரதானமாக 8 பெரும் கவசத் தகடுகளால் உருவாக்கப்பட்டுள்ளது. அவை வட அமெரிக்க கவசத் தகடு, தென் அமெரிக்க கவசத்தகடு, ஐரோ ஆசிய கவசத் தகடு, ஆபிரிக்க கவசத் தகடு. ஆகியனவாகும். இவை 125 கி.மீ. தடிப்பினதாக வழுக்கு நிலையில் அமைந்துள்ளன. இங்கே வெப்ப நிலையும் அமுக்கமும் மிக உயர்வாக இருப்பதால் கவசத்தகடுகள் வழுக்கி நகர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியின் கவசத் தகடுகள் ஒன்றை ஒன்று நெருங்கியும் விலகியும் அமிழ்ந்தும் மூன்று வித நகர்வுகளுக்கு உட்படுகின்றன.

## 2004.12.26 தினம் சுனாமி உருவாகிய விதம்.

2004.12.26 தினம் அதிகாலை 6.02 நிமிடமளவில் புவியோட்டின் கீழ் கிளர் மின் வீச்சுக்கள் ஏற்பட்டு இந்திய கவசத்தகட்டையும் ஐரோ ஆசியாக் கவசத் தகட்டையும் தாக்கியது. அதன் விளைவாக அடர்த்தி கூடிய இந்திய கவசத்தகடு அடர்த்தி குறைந்த ஆசியாக் கவசத் தகட்டோடு மோதி அமிழத் தொடங்கியது. அமிழத் தொடங்கிய சமுத்திர தகட்டினை புவியின் பலமான இடையோட்டு தளம் தடுத்து நிறுத்துகின்றது. அப்படி மோதுகையில் ஏற்பட்ட அதிர்வு அபரிமிதமான விசையோடு புவி நடுக்கத்தை தோற்றுவித்தது. இவ் விரு தகடுகளின் விளிம்பில் 100 கி.மீ. நீளத்திற்கு மேலாக ஏற்பட்ட அகழியானது அகன்று ஆழமாகியமையால் அப்பிளவினுள் ஆயிரமாயிரம் கிலோ மீற்றர் பரிமான சமுத்திர நீர் உட் புகுந்தது. அதனால் கடல் அடித்தளம் முதலில் வற்றித் தோன்றினாலும் அடுத்த கட்டமாக உள் நுழைந்த நீரை அதி பலத்துடன் உந்தி தள்ளிக் கொண்டு அகழியில் சிறைப்பட்டிருந்த வாயுக்கள் மேற் கிளம்பின. இதனால் சமுத்திர மட்டத்தில் நீர் திடீரென பொங்கி பிரவாகித்து இராட்சத அலையாகிய சுனாமியாக உருவாகியது. அது இலங்கைக் கரையோரங்களை வந்தடைய இரண்டு மணித்தியாலயங்கள் சென்றன.

## சர்வதேச ரீதியில் சுனாமி ஏற்படுத்திய சேதங்கள்.

சுனாமி, தான் உற்பத்தியாகிய இடத்திலிருந்து 800 கி.மீ. வேகத்தில் எல்லாத் திக்குகளிலும் பரவி கடலோரங்களிலும் பரவி கடலோரங்களில் 100 கி.மீ வரையிலான வேகம் குறைந்து உயரம் 30 கி.மீற்றராக அதிகரித்து பாய்ந்தது. மனித சக்திக்கு அப்பாற்பட்ட அதீத பலத்துடன் ஏற்பட்ட இயற்கையின் இந்த சீற்றம் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட உயிர்களை சர்வதேச ரீதியாக காவு கொண்டமையை மனித குலம் தனது வரலாற்று முடிவு பரியந்தம் மறக்கப் போவதில்லை! உறவுகள் இழக்கப்பட்டன. பலர் காணாமல் போயினர் காயமடைந்து உயிர் தப்பியோர் ஆயிரம் பேர். வாழ்நாள் பூராக வருந்தி சம்பாதித்த வதிவிடங்கள், கட்டடங்கள், தொழில் புரியும் வள்ளங்கள், படகுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களாக பயன்படும் நன்னீர் கிணறுகள், வயல் தோட்டங்கள் அனைத்தும் இழக்கப்பட்டன!.

## இலங்கை கரையோரங்களில் சுனாமி ஏற்படுத்திய சேதங்கள்.

சுனாமி பேரலையின் தாக்கத்தினால் இலங்கையில் பாதிப்புக்களுக்கு உள்ளானோர்களில் விகிதாசார அடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணத்தினரே அதிகமானவர்களாக இருக்கின்றனர்.

நாட்டின் வடக்கு கிழக்கில் இறப்பு எண்ணிக்கை 17,024 ஆகவும், தெற்கு மேற்கு பிரதேசங்களில் 10,403 ஆகவும் காணப்படுகின்றது.

காயப் பட்டவர்களின் எண்ணிக்கை வடக்கு கிழக்கில் 7,198 ஆகவும் தெற்கு மேற்கில் 7,794 ஆகவும் அமைந்துள்ளது.

3,44,803 பேர் வடக்கு கிழக்கில் இடம் பெயர்ந்துள்ளனர். 2,19,662 பேர் தெற்கு மேற்கில் இடம் பெயர்ந்துள்ளனர்.

பாடசாலைகளை கருத்தில் எடுக்கும் போது வடக்கு கிழக்கில் 128 பாடசாலைகளும் தெற்கு மேற்கில் 48 பாடசாலைகளும் சேதமடைந்துள்ளன.

வடக்கு கிழக்கில் 85,279 வதிவிடங்களும் தெற்கு மேற்கில் 35,757 வதிவிடங்களும் சேதமடைந்துள்ளன.

இவை தவிர காணாமல் போனோர் மனப் பாதிப்புக்கு உட்பட்டோர் ஆயிரம் ஆயிரம்!.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சுனாமியிலிருந்து எம்மை பாதுகாப்பது எப்படி?"

சுனாமி தாக்கிய பகுதிகளில் உயிர் வாழ்ந்த உயிரினங்கள் தம்மை தாமே காப்பாற்றியுள்ளன.... அவை இந்த விபரீத விளைவை முற்கூட்டியே புரிந்து இடம் மாறிருக்கின்றன.

ஆதி வாசிகளின் தலைவன் ஒருவன், நிலத்தில் வைத்து படுத்திருந்த சமயம் பூமியின் ஆழத்தில் பாறைகள் புரள்வது போன்ற விசித்திரமான ஒலியை கேட்டிருக்கின்றான். உடனே தனது கூட்டத்தினரையும் அழைத்துக் கொண்டு மலைப் பாங்கான இடத்திற்கு சென்றன். மூலம் அனைவரும் உயிர் தப்பியுள்ளனர்.

கடல் உள்வாங்கப் படுவதனை வரப்போகும் அனர்த்தத்தின் அறிகுறி என புரிந்து கொண்டு எம்மை நாம் பாதுகாக்க வேண்டும்.

கடற்கரையோரங்களில் நெருக்கமாக வதிவிடங்களை அமைப்பதை தவிர்க்க வேண்டும். தொழில் நிமித்தம் வாடிகளை தற்காலிகமாக அமைத்திருந்தாலும் நிரந்தர வீடுகளை 300 கி.மீ தூரத்திற்கு அப்பால் கட்டியிருத்தல் வேண்டும்.

சுனாமி எச்சரிக்கை நிலையங்கள் உலகின் பல நாடுகளில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. இந்து சமுத்திர கரையோரங்களில் முன்னர் சுனாமியின் தாக்கம் பெரிதாக அறியப்படவில்லையாதலால் இத்தகைய எச்சரிக்கை நிலையங்கள் இங்கு அமைக்கப் பட்டிருக்கவில்லை.

எதிர்வரும் காலங்களில் எச்சரிக்கை நிலையங்கள் வாயிலாக கிடைக்கப் பெறும் தகவல்களை நாளும் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிவகைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன!

தொகுப்பு :
திருமலை வீ.என்.சந்திரகாந்தி
527/A, ஏகாம்பரம் வீதி
திருகோணமலை.
0779586615


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2006ம் ஆண்டிற்கான கவிதைப்போட்டியில் (திறந்த மட்டத்திலானது)
1ம் இடம் பெற்றது - ஹெலீடா மஹ்ரூப்

# புகழ்மாலை சூட்டிடுவோம்

புதுப்பொழில்ப் பூவெடுத்து புத்தாரம் புனைந்துநிதம்
புன்னகையால் பண்ணிசைப்போம்!
புது உயிரினை உருவாக்கப் புனர்ஜென்மம் தானெடுக்கும்
புனிதையாம் அன்னைக்குப் புகழ்மாலை சூட்டிடுவோம்

உதரத்தில் மனைதந்து உதிரத்தால் உணவீந்து
உயிர்பகிர்ந்து என்னை உருவாக்கியளித்தவளே....
மகவாக நான் பிறக்க மரணவலி தான் பொறுத்து
மாதங்கள் பத்துமென்னை மகிழ்வோடு சுமந்தவளே!

துன்பத்தில் நான்சிக்கி துவண்டிடும் வேளைதனில்
துணைவியாய் என்துயர் துடைத்திடும் தேவதையே....
பாரினில் நான்சிறக்கப் பண்புகள் பல பழக்கி
பாசத்தின் அர்த்தமதைப் பறைசாற்றி நின்றவளே!

முன்னுரை நானெழுத முதலெழுத்து நீ தந்தாய்
முன்னேறி நானுயர முள்மீது நீ நடந்தாய்!
நானுறக்கம் கொள்வதற்காய் கண்ணுறக்கம் நீ தொலைத்தாய்
என் விழியில் நீர்கசிந்தால் உன் உயிரால் துடிதுடித்தாய் !

அன்பிற்கு நீயென்றும் அணையாத சுடரே!
ஆண்டவன் கூட உனக்கில்லை நிகரே!
கண்ணுக்குள் எனைவைத்துக் காத்திடும் தாய்மையே....
காணுமோ ஓர்யுகம் உன்புகழ் பாடவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2006 ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙලේ පද්‍ය රචනා තරගයේදී ප්‍රථම ස්ථානය ලැබූ පද්‍ය එස්.එච්. මයුමි නමාෂා නදීශානි

### දුක් විඳ හදන මව් තුමියනි ඔබව හැර -
### මා හට උතුම් වස්තුව කිම මේ සසර ....?

01. නිමි නැත සෙනෙහෙ රළ පෙළ සේ මහ සයුරේ
නිමි නැත සෙනෙහෙ තරු කැළ සේ නුඹ සයුරේ
නිමි නැත සෙනෙහෙ වැළි කැට සේ මිහි සයුරේ
නිමි නැත ඔබේගුණ කඳ මේ භව සයුරේ

02. දෙනෙතට නිමි නොදී දැක-දැක සොඳුරු පැතුම්
ගෙවමින් සතුට විඳ-විඳ දස මසක් උතුම්
විඳිමින් ලොවේ රුදුරුම දුක සිතා "විඳිමි"
මා බිහිකළ මව්නි දෙපයට පුදමි කුසුම්

03. තෙපළන්නට වදන් නැති මගෙ ළඳරු වියේ
හැඩුවා කඳුළු සළමින් ඒ සොඳුරු පැයේ
දිව චිත් සෙනෙහසින් සතපා ඔබගෙ ළයේ
කිරි කර රුහිරු පෙව්වා මට මතක තියේ

04. අයනු-හල් මයනු-මායනු "අම්මා" ය
පැන්සල් කොමලි අතැගිලි මැද උන්නා ය
මව් ගුණ වරුණ ලියනට බැහැ "නිම්මා" ය
මව්නේ ඔබෙ වෙහෙස මට සුව කැන්දා ය

05. සෙල්ලම වෙනට වෙනදා මෙන් දිව නොගිහින්
ඇඳටම වෙලා සිටියා මම ලෙඩින් - දුකින්
බොඳවී වැටුණු මිණි කැට ඒ පැයෙහි නෙතින්
මිළ කළ නොහැක අම්මේ කිසි දිනක ඉතින්


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. දෑසට කඳුළු දී මගෙ අත    රිදෙන්නට
පහරක් ගසා අම්මේ කළ    වරදකට
ඔබ සැලූ කඳුළු නොපෙනෙන්නට එය    මෙමට
කැන්දම් සිනා-කැන් මින් මතු ඔබ    වෙතට

07. අනියත බව කියා දිවි මග අපව    හැර
ගියදා ඉඳන් පියතුම නැති අප    හැරදා
දුක් විඳ හදන මව් තුමියනි ඔබව    හැර
මා හට උතුම් වස්තුව කිම මේ    සසර

08. මෙත් මුදිතාව ගෙළ පැළඳූ දමක්    ලෙසිනි
පෙනුනා මව්නි ඔබ දකිනා විටදී    හොඳින්
මා වෙනු වෙන් විඳින්නට දුක් මෙලෙස    තුටින්
කෙලෙසද හැකිවුනේ මව්නේ නිසල    සිතින්

09. ගිනි දැල් නැගේ බුරමින් ඔබෙ හද    දවමින්
කෙලෙසද ඉවසමින් ඔබ හිනැහෙන්නේ    තුටින්
දැන් මට දැනේ අසරණකම ඔබෙ    සොඳිනේ
සුවදයි මව්නි ඔබෙ දිරි පොද මෙමට    නිතින්

10. මව් සෙනෙහසින් සැමදා මා ළඟ    උන්න
පිරිමැද මගේ හිස මට සැනසුම    දුන්න
ආදර ඔවා-මිණි දී යහපත    දුන්න
අම්මේ ඔබට මතු බුදු බව අත් -    වෙන්න !

11. සිදුහත් වී මව්නි ඔබ මතු බුදු    වේවා !
රාහුල වී ඔබෙ සුදු පුතු මම    වේවා !
නිවනින් සැනසිලා ඔබ "සම්බුදු"    වේවා !
ඔබ පසු පසම එන්නට මට හැකි    වේවා !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2006ம் ஆண்டிற்கான சிறுகதைப்போட்டியில்
## (திறந்த மட்டத்திலானது)
## 1ம் இடம் பெற்றது.
## திரு- தம்பு சிவசுப்பிரமணியம்

# வாழ்க்கையின் வேதனைகளால்......!

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கியது. என் வேதனைக் குமுறல்களை அடக்கமுடியாமல் அங்கு போடப்பட்டிருந்த ஒரு கதிரையில் அமர்ந்து அழுது கொண்டிருக்கிறேன். கைகள் இரண்டிலும் முதுகிலும் சூட்டுக் காயங்கள். புண்கள் ஆறவில்லை. வேதனைகளின் ரணம் ஒருபுறம் எதிர்பார்ப்புகளின் ஏமாற்றம் மறுபுறம் இதயத்தையே வருடி நிற்கின்றன. என்றுமே ஆறாத வடுக்கள். என்னைப் போன்று ஏஜன்சிக்காரர்களால் பசப்பு வார்த்தைகளுக்கு அடிமையாகி அல்லல்பட்ட பெண்கள் இருநூற்றி ஐம்பத்து இரண்டு பேர் ஒரே விமானத்தில் வந்திறங்கி நிற்கிறோம். வீட்டுக்குச் செல்வதற்குக்கையில் ஒரு சதம் கூட இல்லை பொங்கி வழிந்த கண்ணீரைத் துடைப்பதற்கு கையில் கைக்குட்டை கூற இருக்கவில்லை. அந்த நிலையில் நான் எடுத்துவந்த பிளாஸ்ரிக் பையில் இருந்து ஒரு பாவாடையை எடுத்து கண்களிலிருந்து வழியும் அந்தச் சூடான நீரைத் துடைக்கிறேன். எதிர்காலம் எனக்குச் சூனியமாகப் போவது தெரிகிறது.

விமானத்தில் வந்திறங்கிய எங்கள் குழுவில் சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடில்லை. ஏமாற்றப்பட்ட வேதனைக் குமுறல்களின் சங்கமம் பலரும் அழுதபடி ஏதோ பெலமாகத் கத்திக் கொண்டிருந்தார்கள். எனக்குச் சிங்களம் தெரியாத படியால் அவர் சொல்லிக் கத்துவது எனக்குப் புரியவில்லை. நேரம் ஆக ஆக எனக்குப் பசி வந்துவிட்டது. கையிலில் காசு இருந்தால் தானே கன்டீனில் ஏதாவது வாங்கிச் சாப்பிடலாம். என் நிலையை எண்ணி எண்ணி ஏங்குவதைத் தவிர என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

சற்றுநேரத்தில் ஒருவர் என்னுடன் சவுதியிலிருந்து வந்தவர்களுக்கு ஏதோ சிங்களத்தில் பேசிக் கொண்டிருப்பது கேட்டது. அவர்பேசி முடித்து விட்டுப் போனதும் எனக்குப் பக்கத்தில் நின்ற சிங்களப் பிள்ளையிடம் அரபி மொழியில் ''அவர் என்ன சொன்னார்'' என்று கேட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வந்து கதைத்தவர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகப்பணிப்பாளராம் அவர் சொல்லுகிறார். நீங்கள் வெளிநாட்டுக்குப் போகும்போது தங்கள் பணியகத்தில் பதிந்துவிட்டுப் போவில்லையாம். அதனால் அவர்களால் எங்களுக்கு ஒருவித உதவியும் செய்ய முடியாதாம்''

''ஏஜன்சிக் காரருக்கு லையிசன்ஸ் கொடுத்து அவர்களை அரசாங்கம்தானே வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களாக வைத்திருக்கின்றது. நாங்கள் முறையாகப் பாஸ்போட், வீசா, ரிக்கற் எல்லாம் எடுத்துக்கொண்டுதான், இந்தக் கட்டுநாயக்கா விமானத்திலிருந்து ஏயர்லங்கா விமானத்திலதானே சவுதிக்குச் சென்றுள்ளேன் நாங்கள் சென்ற பதிவுகள் எல்லாம் இங்கு இருக்கத்தானே வேண்டும் களவாக நாங்கள் போகவில்லையே முறையாக எல்லாம் எடுத்துக் கொண்டு போனது அவர்களுக்குத் தெரியாதா? இவங்கள் என்ன புதுக்கதை சொல்லூறாங்கள்'' என்றேன்.

''அதுதானே எனக்கும் விளங்கவில்லை. ஏஜன்சிக் காரருக்கும் இந்த அதிகாரிகளுக்கும் உள்ளுக்குள் ஏதோ தொடர்பு இருக்க வேண்டும்.'' என்று அந்தச் சிங்களப்பிள்ளை சொல்லிற்று.

நாங்கள் இருவரும் கதைத்துக்கொண்டிருப்பதைக் கேட்டுக்கொண்டு நின்ற அந்தச் சிங்களப்பிள்ளை சொல்லிற்று.

''அரசாங்க அதிகாரிகள் ஊழல் செய்வதாகக் கூறி மஹிந்தசிந்தனையில் ஊழலற்ற ஆட்சி நடைபெறும் என்று பத்திரிகையிலும், வானொலியிலும், தொலைக்காட்சிகளிலும் கூறுகின்றார்களே தவிர எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.'' எங்களுடன் சவுதியில் இருந்துவந்த ஒரு முஸ்லிம் பெண்....

''நம்மடை உழைப்பாலை வரும் வெளிநாட்டுக் காசு மட்டும் அவங்களுக்குத் தேவை. ஆனால் எங்கடை கஷ்டங்களுக்கு அவங்க உதவி செய்யமாட்டாங்களாம். அல்லாவுத்தாலா! இந்த முஸ்லிம் ஏஜன்சிகாரர்களுக்கும் ஏமாற்றுகின்ற கைங்கரித்தைக் கொடுத்தாயே! ''என்று நொந்து கொண்டாள்.

வந்தவர்களை அவர்களுடைய கணவன்மார், தாய் தந்தையர், உறவினர்கள் வந்து அழைத்துப் போகின்றார்கள். எனக்கு யார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறார்கள். வந்து கூட்டிச் செல்வதற்கு......என்ன செய்வது என்று யோசித்தபடி கண்கள் இரண்டும் கண்ணீர் சொரிய வேதனையின் கொடூரத்தால் செய்வதறியாது குனிந்தபடி ஆசனத்தில் அமர்ந்திருதிக்கின்றேன்.

தோளில் யாரோ தட்டி ''கமலா'' என்று கூப்பிடுவது கேட்டு திடுக்கிட்டுப் பார்க்கின்றேன்.

''முகுந்தன்......'' என்னை அறியாமலே வாய் முணுமுணுத்தது. ''நீங்கள் எப்படி இங்கே? என்று கேட்டேன்.

''கமலா இன்று மத்தியானம் தொலைக்காட்சியில்...... பணிப்பெண்களாக சவுதிக்குச் சென்றவர்கள் அங்கிருந்து பல கஷ்டங்களுக்கு மத்தியில் தொடர்ந்து வேலை செய்ய முடியாமல் தூதுவராலயத்தில் தஞ்சமடைந்தவர்கள் திருப்பி அனுப்பப்பட்டு கட்டுநாயக்காவில் வந்திறங்கினார்கள் என்று தெரிவித்து வந்தவர்களின் படங்களும் காட்டினார்கள். உங்களைப் போன்ற ஒருவரைப் பார்த்தேன்.

நீங்களாக இருக்குமோ என்ற ஐயத்துடன் உடன்புறப்பட்டு வந்தேன்.''

''இந்த அனாதையைக் கூட்டிச் செல்ல யார் வரப்போகிறார்கள் என்று ஏங்கியபடி இருந்தேன். நீங்களாவது வந்துவிட்டீர்களே!என்று சொல்லிச் சொல்லி அழுகின்றேன்.

''கமலா அழாதேங்கோ! அதுதான் நான் வந்து விட்டேனே? என்று சொல்லி என்னை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தார். கையில் வைத்திருந்த கான்போனில் ஏதோ பேசினார். சற்றுநேரத்தில் கார் ஒன்று வந்து நின்றது நாங்கள் இருவரும் காரில் ஏறிக் கொண்டோம் கார்புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தது. சிறிது தூரம் சென்றதும்....

''முகுந்தன் எனக்குப் பசிக்கிறது எதாவது சாப்பிட வாங்கித் தாறீங்களா? '' என்று கேட்டேன்.

முகுந்தன் கார் றைவரிடம் சிங்களத்தில் ஏதோ சொல்லுவது கேட்டது. சற்றுத் தூரம் சென்று ஒரு ஹோட்டல் முன்பாகக் கார் நிறுத்தப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இறங்கி வாங்கோ'' என்று முகுந்தன் அழைத்தார். நானும் காரில் இருந்து இறங்கி அவருக்குப் பின்னால் ஹோட்டலுக்குச் சென்று அமர்ந்தோம் முகுந்தன் எனக்கு மட்டும் சாப்பாட்டுக்கு ஓடர் கொடுத்துவிட்டு இரண்டு கூல்றிங்ஸ் கொண்டு வரும்படி சொன்னார்.

''என்ன முகுந்தன் செய்கிறீர்கள்? குடும்பம் பிள்ளைகள் '' என்று கேட்டேன்.

''நான் கமலா ஜா- எலவில் உள்ள ஒரு கொம்பனியில் மனேச்சராக வேலை செய்கின்றேன். அந்தக் கொம்பனிதான் எனது பாவனைக்கு இந்தக் காரைத் தந்துள்ளது. வத்தளையில்தான் இருக்கிறோம்.

"மனைவி பிள்ளைகள் என்றேன்"

"நிலாவெளியில் எங்கள் வீட்டுக்குக் கிட்டவந்து குடியிருந்த குச்சவெளி ஆட்கள். ஒரு பிள்ளையுடன் இளம் குடும்பம். கணவன் வேலை விட்டு வரேக்கை சிறீமா புரத்தடியில் வைத்து வெட்டிக் கொலை செய்து போட்டாங்கள். பாவம் ஒரு பிள்ளையுடன் அந்தப்பெண் தவிச்சுப் போனாள். அந்தப் பெண்ணுக்கு மறுவாழ்வு கொடுத்திருகின்றேன். இதனால் எங்கள் வீட்டார் என்னை ஒதுக்கி வைத்து விட்டார்கள். இருந்தாலும் ஒரு பெண்ணுக்கும் ஒரு பிள்ளைக்கும் ஆதரவாக இருந்து வருகிறேன் என்பதில் என் மனதிற்கு ஒரு திருப்தி."

" உங்களுக்குப் பெரிய மனசு முகுந்தன்"

என்று கூறிய என்னை உற்று நோக்கியபடி ....................

" உங்கள் நிலை இப்படியேன் ஆகவேண்டும். உன் கணவர் பிள்ளைகள் உங்களை

ஏன் வெளிநாட்டுக்கு, அதுவும் பணிப்பெண்ணாக அனுப்பி சவுதி றியாலை பெறுவதற்காகவா? என்ன கமலா, வெளிநாட்டுக்குப் பணிப்பெண்களாக போனவர்கள் எவ்வளவு பாதிப்பு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். சிலர் வெளியில் சொல்ல வெட்கப்பட்டு மனதுக்குள் நொந்து கொண்டிருக்கின்றார்கள். பலர் பகிரங்கமாகவே தங்களுக்கு ஏற்பட்ட கொடூரங்களைப் பத்திரிகைகள் மூலமாகச் சொல்லியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் தெரியாமலா? போனாய்? என்று முகுந்தன் மிகுந்த பாரிதாபத்துடன் கேட்டான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முகுந்தன் நீங்கள் சொல்வதெல்லாம் உண்மை. நான் உண்மையாகவே உடல் உள ரீதியாக வேதனைகள் பல கொண்ட சோதனைகளைக் கண்டு ஆற்றாமையால் ஓடிவந்தவள். இங்கே பாருங்கள் என் சூடுபட்ட கைகளை என்று போர்த்திருந்து போர்வையை விலக்கிக் காட்டுகின்றேன்."

இரத்தமும் சதையுமாக நெருப்பில் வெந்த அந்தச் சூட்டுக் காயங்களை கண்ட முகுந்தன் பட்டபாடு உண்மையிலேயே என் மனத்தை உலுக்கி விட்டது.

சாப்பாடு முடிய மீண்டும் காரில்போய் ஏறினோம். முகுந்தன் கார்றைவரிடம் ஏதோ சொன்னார். கார் தனியார் வைத்தியசலை ஒன்றுக்குள் சென்று நிறுத்தப்பட்டது. காரிலிருந்து இறங்கி டாக்டர் எல்லாக் காயங்களையும் பார்த்துவிட்டு, புண், ஆறும்வரையும் வைத்தியசாலையில் தங்கவேண்டும் என்று சொன்னார். முகுந்தனும் அதற்கு உடன் பட்டு நான் தங்குவற்குத் தனியான ஒரு றூமும் எடுத்துத் தந்து என்னை அருகிலிருந்து கவனித்துக் கொள்வதற்கு ஒரு பெண்ணையும் ஒழுங்கு படுத்திவிட்டு, நாளைக்கு வந்து பார்ப்பதாகச் சொல்லிவிட்டுச் சென்றார்.

நன்றியுடன் அவர் முகத்தைப் பார்த்தேன். சோகம் நிறைந்தவராகக் காணப்பட்டார்.
கட்டிலில் படுத்திருந்து கண்களை மூடியபடி என் கடந்த காலத்தை எண்ணிப்பார்க் கின்றேன்.

செல்வநாயகபுரம் என்ற கிராமத்தில் ஒரு சாதாரணகுடும்பத்தில் பிறந்தேன். எங்கள் குடும்பத்தில் ஐயா, அம்மா, அண்ணா என்னுடன் நாலுபேர். உவர்மலை பாலசுப்பிரமணியம் கொன்றாக்டரிம் தான் ஐயா கூலிவேலை செய்து கஷ்டப்பட்டு உழைத்து எங்கள் குடும்பவண்டியை ஓட்டிக் கொண்டிருந்ததார்.

ஐயா அம்மாவின் சொந்த ஊர் புன்னாலைக்கட்டுவன். நாட்டுப்பிரச்சனை காரணமாக இடம் பெயர்ந்து வந்து செல்வநாயகபுரத்தைச் சொந்த ஊராக்கிக் கொண்டார்கள். ஐயா மூன்று பெண் சகோதரிகளுக்கு அண்ணன். அதனாலை சகோதரிமாரை கரைசேர்த்த பின்புதான், தாய்மாமன் மகள் என் அம்மாவைத் திருமணம் செய்தாராம். அப்படியாக ஐயா பட்ட கஷ்டங்களை அம்மா சொல்லும் போது உண்மையிலேயே கண்ணீர்வந்து விடும். ஐயா குடும்பநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகப் படிக்க முடியாமல் போனதை மனதில் வைத்து அண்ணாவையும் என்னையும் படிக்க வைக்கவேண்டுமென்று மிகவும் ஆசைப்பட்டார். திருகோணமலை நகரத்திலுள்ள பாடசாலைகளில் எங்கள் இருவரையும் சேர்த்துப் படிப்பித்தார்.

விடிய எழும்பி சாப்பிடாமலேயே வேலைத்தளத்துக்குச் சென்றுவிடுவார். அம்மா எனக்கும் அண்ணாவுக்கும் சாப்பாடுதந்து பாடசாலைக்கு அனுப்பிவிட்டு ஐயாவுக்குச் சாப்பாடு கொண்டுபோய் வேலைத்தளத்தில் கொடுத்துவிட்டு வருவா. ஐயாவும் அம்மாவும் எங்கள் இரண்டு பேரிலும் உயிர். கஷ்டங்கள் தெரியாமல் பிள்ளைகளை வளர்க்க வேண்டுமென்பதில் இருவரும் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

அண்ணா ஏ.எல். சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருந்தார். மின்சாரத்தடை அடிக்கடி இருந்தமையால் அரிக்கன்லாம்பு, குப்பிவிளக்கு வெளிச்சத்தில் தான் இரவில் படிப்போம் 1990 ஆம் ஆண்டு நேவிக்காரர் தமிழர்களு க்கு எதிரான கலங்கத்தை ஏற்படுத்தி பலரது உயிர்களும் உடமைகளும் சேதமாக்கப்பட்டன. இளம் பெடியன்மரை வெள்ளை வானில் கடத்திச்சென்றார்கள். பலர் பூசாவுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். அன்றுதான் எம்வாழ்க்கையில் மறக்க முடியாத சோகச்சம்பவம் நடந்து விட்டது. உப்புவெளிச் சந்தைக்குச் சாமான் வாங்கப் போன அம்மா ஷெல் விழுந்து இறந்துவிட்டார். அன்றுதான் என் ஐயா முதல்முதலாக "ஐயா! என்னையும் பிள்ளைகளையும் தவிக்கவிட்டுப் போய்விட்டியே ராசாத்தி. நான் தனிய இருந்து என்ன செய்வேன்" என்று ஒப்பாரி வைத்து குலுங்கிக் குலுங்கி ஆழுதார். அண்ணா அம்மாவுக்கு அருகிலிருந்து ஆவேசத்துடன் காணப்பட்டார் அந்த நேரம் எப்படி இருந்தேன். என்று எனக்கு நினைவில்லை. ஊரடங்குச் சட்டம் ஒரு இடமும் போகமுடியாத நிலை. சுடலைக்குக் கூட பிரதத்தை எடுத்துச்செல்லமுடியாத நிலை வீட்டு வளவுக்குள் தான் அம்மாவின் உடம்பை கிடங்குவெட்டித் தாட்டோம்.

அம்மாவின் அகால மரணம் எங்கள் குடும்பத்தை நன்றாகப் பாதித்து விட்டது. ஐயா வேலைக்குப் போகாமல் வீட்டின் ஒரு மூலையில் இருந்து யோசித்துக் கொண்டே இருப்பார். அண்ணாவின் போக்கில் மாறுதல்களைக் காணக்கூடிதாக இருந்தது. இருந்தால் போல் அண்ணாவைக் காணவில்லை. ஐயா பதறிப்போய் தேடாத இடமில்லை. இரண்டு மூன்று நாள் கழித்து அண்ணாவின் நண்பர்கள் வந்து குமரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்துக்குப் போய்விட்டான் என்று சொல்லிச் சென்று விட்டார்கள். இயக்கக் காரரிடம் சென்று கதைத்துப் பார்த்தும் பயன் ஒன்றும் கிடைக்கவில்லை. அம்மா இறந்து ஒரு வருடத்திற்கு உள்ளாகவே அண்ணாவும் இயக்கத்தில் போய்ச் சேர்ந்து விட்டார். எனது படிப்புக்கும் முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது. நான் படிக்கும் காலத்தில் கல்விப் பொதுத்தராதர உயர்வகுப்பு மாணவர்களுக்கு திருகோணமலை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சில பாடங்களுக்கான கருத்தரங்குளை வைத்தார்கள். அப்பாடக் கருத்தரங்கில்தான் முகுந்தனைச் சந்தித்தேன். இருவருடைய நட்பும் காதலாக மலர்ந்தது. எனது வேதனைகளுக்கு முகுந்தனின் அன்பு ஆறுதலைத்தந்தது என்றே கூறவேண்டும்

''1994 நடந்த யுத்தத்தில் அண்ணா வீரமரணம் அடைந்துவிட்டதாகவும் அவரது உடலைத்தரமுடியாமைக்கு வருந்துவதாகவும் எங்கள் குடும்பம் மாவீரர் குடும்பத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும்'' இருவர் வீட்டுக்குவந்து சொல்லிவிட்டுப் போனார்கள்.

ஐயா பட்டவேதனை என்னையும் ஆடவைத்துவிட்டது. ஐயாவின் வயோதிபம், வீட்டு நிலவரம் என்னை யாருக்காவது கட்டிவைக்கவேண்டும் என்ற அங்கலாய்ப்பு - இதன் நிமிர்த்தம் சம்பளத்துக்கு லொறிச்சாரதியாக வேலை செய்யும் கணேசுக்கு என்னைக் கல்யாணம் செய்து வைத்துவிட்டார்கள். மூன்று வருடத்திற்குள் இரண்டு பொம்பிளைப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தேன். சில வருடங்களுக்குப்பின் ஐயாவும் கண்ணை மூடிவிட்டார். ஆதரவாக இருந்த அந்த அன்பு ஜீவனும் என்னை விட்டுப் பிரிந்துவிட்டது. ஐயா உயிருடன் இருக்கும்போது நல்ல மனித ராகத்தெரிந்த என் கணவர் குடிக்கப்பழகிக்கொண்டார். இதனால் வீட்டில் நித்தச் சண்டை தினமும் குடித்துவிட்டு வந்து அடியும்உதையும் தான்.

பிள்ளைகள் ''அப்பா அம்மாவுக்கு அடிக்கவேண்டாம்'' என்று அழுதழுது கத்துவார்கள். வேலைக்குப் போகாமல் வீட்டில் இருந்து குடிக்கக்காசு வேண்டும் என்று நச்சரித்துக் கொண்டே இருப்பார். நான் காசுக்கு எங்க போவன்; யாரிடம் கேட்பன். இருந்த நகைநட்டு தாலிக்கொடி உள்பட எல்லாமே விற்றுக்குடிச்சு அழித்தாகிவிட்டது. சாப்பாட்டுக்குத் தினமும் திண்டாட்டம் வீட்டில் அடுப்பெரிவது நின்று விட்டது சிலவேளைகளில் பிள்ளைகள் பசி என்று கேட்டு அழுவார்கள். சில பாண் துண்டுகள் மட்டும் அவர்களின் பசியைப் போக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுடன் சேர்ந்து அழுவதைத் தவிர என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பக்கத்து வீட்டு பறுவதம்மாமி பிள்ளைகளுக்குச் சாப்பிட ஏதாவது கொண்டுவந்து கொடுப்பார். இதே காலப்பகுதியில் என் கணவர் குடிக்கப்போன இடத்தில் ஒரு பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டு வீட்டுக்கே வருவதில்லை. நான் மிகவும் நொந்துபோனன். வீடும். ஈடுவைச்சு அறுதியாகிப் போய்விட்டது. என்ன செய்யதென்று எனக்குத் தெரிய வில்லை.
பறுவதம் மாமி என்னையும் பிள்ளைகளையும் தன்வீட்டுக்குக் கூட்டிச் சென்றா.

''எடிபிள்ளை கமலா நீ தனிய இருந்து உந்தப்பிள்ளைகளை எப்பிடி கரைசேர்க்கப் போறாய். இஞ்ச பார் பேப்பரிலை வெளிநாட்டில் வேலை செய்ய பணிப்பெண்கள் தேவையெண்டு விளம்பரம் வந்திருக்கு நீ போனியெண்டால் நாலு காசு உழைச்சு பிள்ளைகளை வழக்கலாமல்லே யோயிச்சுப் பார் இந்தா பேப்பர்'' என்று சொல்லிவிட்டு மாட்டுக்கு தண்ணி வைக்கபோய்விட்டா.

போவமா? விடுவமா, என்ற அங்கலாய்பு பிள்ளைகளின் எதிர் காலம் மனக்கண்ணுள் வந்து நிற்க, வெளிநாட்டுப் பணிப்பெண் வேலைக்குப் போவதற்கான முடிவை எடுத்தேன்.

பறுவதம்மாமியிடம் கைச் செலவுக்கு கொஞ்சக் காசையும் வாங்கிக்கொண்டு பிள்ளைகளைக் கூட்டிச் சென்று கன்னியர்மடத்தில் சேர்த்துவிட்டு கொழும்புக்கு வந்தேன். மருதானையிலுள்ள எஜன்சிக் காரரிடம் என் விருப்பத்தைத் தெரிவித்தேன். அவர்கள் பாஸ்போட், வீசா, பிளேன்ரிக்கற் எல்லாம் எடுக்க வேண்டும் என்று சொல்லி என்னை ஒரு வீட்டில் தங்க வைத்தார்கள். அந்த வீட்டில் பெண்களும், திருமணமாகாத கன்னியர்களும் இருந்தார்கள். அவர்களும் பணிப்பெண்களாக வெளிநாடு போவதற்குத் தான் தங்கி இருந்தார்கள்.

நான் இருந்த வீட்டுக்கு இரவில் ஒருசில ஆண்கள் வந்து போவார்கள். அங்கிருக்கும் பெண்கள் இணங்காவிட்டால் வெளிநாட்டுக்கு போவது தாமதமாகும் என்று அங்குள்ளவர்கள் சொல்லிக் கேட்டிருக்கின்றேன். எனக்குப் பயம் பிடித்துவிட்டது. என்னிடமும் ஒரு சிலர் வந்தார்கள் மென்சஸ் என்று சொல்லிக் தப்பித்துக் கொண்டேன். இருந்தும் என் பெண்மையும் ஓர் இரு நாட்கள் ஒரு தமிழ்வியாபாரியினால் பறிபோய்விட்டது. என் தலைவிதியை எண்ணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி ஏங்குகின்றேன். என் கணவன் சரியாக இருந்திருந்தால் எனக்கு ஏன் இந்தநிலை ஏற்பட வேண்டும் என்று நொந்து கொண்டேன்.

**********

சவுதிக்கு வந்து ஒரு வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டேன். மாதா மாதம் சம்பளம் றியாலில் தருவார்கள் என்று ஏஜன்சிக்காரன் சொல்லி விட்டான். வீட்டு எசமான் நல்லவராகத் தெரிந்தாலும் அவருடைய கழுகுக் கண்கள் என் மேல் மேய்வதை அவதானித்திருக்கின்றேன். எசமானி எந்த நேரமும் அரபியில் திட்டிக்கொண்டே இருப்பாள். ஆரம்பத்தில் எனக்கு பாஷை புரியவில்லை. காலப்போக்கில் சிறிது சிறிதாக தெரியத் தொடங்கியது. என்னிடம் தினமும் நன்றாக வேலை வாங்குவாள். வீடு சுத்தம் செய்வது, சமைப்பது, பாத்திரங்கள் கழுவுவது, உடுப்புகள் தோய்ப்பது, அயன் பண்ணுவது, படுக்கைகளைத் தட்டிப் போடுவது, கக்கூஸ் பாத்றூம் கழுவுவது அப்படி ஓய்வின்றித் தொடர்ந்து வேலை. எப்படித்தான் வேலை செய்தாலும் வயிற்றுக்குப் போதுமான சாப்பாடு தரமாட்டார்கள். மாதம் முடிய எசமானிடம் சம்பளம் கேட்டேன் அடுத்தமாதம் தருவதாக சொன்னார். நானும் பொறுத்திருந்து வேலைகளைப் பார்த்து வந்தேன். எசமானியின் ஏச்சும் பேச்சும் அதிகரித்து கொண்டே சென்றது. நானும் பொறுமை இழந்து ஒரு நாள் ஏதோ சொல்லிவிட்டேன். சுடு நீரை கையில் ஊற்றி விட்டாள் அந்த பாதகி. வேதனையுடன் பொறுத்துக் கொண்டேன். உழைத்து சம்பாதித்துக்கொண்டு ஊருக்குபோய் பிள்ளைகளுடன் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதற்காக எல்லாக் கஷ்டங்களையும் பொறுத்திருந்தேன். ஒரு நாள் தவறுதலாக கோப்பை விழுந்து உடைந்ததற்காககம்பி காச்சி தோளிலும் தொடைகளிலும் சூடு வைத்தாள் எஜமானி. வேதனை தாங்காமல் துடித்துவிட்டேன். கேட்பதற்கு எவரும் இல்லை என்ற இறு மாப்பில் எனக்குப் பலவழியிலும் தொல்லை கொடுத்துக் கொண்டே இருந்தாள். ஏஜமானி வீட்டில் இல்லாத நேரம் பார்த்து எஜமான் என்னை பலாத்காரம் பண்ணிக் கெடுத்துவிட்டான். அவனது முறட்டுக் கரங்களிலிருந்து என்னால் விடுபட முடியவில்லை. என் நிலையை எண்ணி அழுதேன். மாதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடமாகிவிட்டன சம்பளம் தந்தபாடில்லை. பொறுமை இழந்தேன். எஜமானியிடம் சம்பளத்தை தரும்படிகேட்டேன். அவள் தரமுடியாது என்று சொல்லிவிட்டாள். பொலிஸ்காரரிடம் சொல்லப் போகிறேன் என்றேன். அவள் புருசனை கூட்டி வந்து அவன் உதவியுடன் எரிந்து கொண்டிருக்கின்ற காஸ் அடுப்பில் என் இரண்டு கைகளையும் இழுத்து வைத்து சுட்டார்கள். சம்பளமும் இல்லை நித்திரைக் கொடுமை. வீட்டை விட்டுப் புறப்பட்டு இலங்கை தூதுவராலயத்தில் தஞ்சமடைந்தேன்.

அடுத்த நாள் முகுந்தன் மனைவி பிள்ளையுடன் என்னை பார்ப்பதற்கு வைத்தியசாலைக்கு வந்தார். எனக்கு அவர்களை பார்த்தது மனத்திற்குச் சற்று ஆறுதலாக இருந்தது. ஒரு கிழமை கழித்துவந்து என்னைத் தன் வீட்டுக்கு முகுந்தன் அழைத்துச் சென்றார். அவருடைய மனைவி என்னுடன் மிகவும் அன்பாகப் பழகிக்கொண்டார். என்னையும் தங்கள் வீட்டில் தங்கும்படி வற்புறுத்தினார். நான் இங்கு இருப்பது கஷ்டம் என்றதும்...........

எங்களுக்குள் எந்த உறவும் இல்லை. இவர் தான் விரும்பிய கமலா என்னும் பெண் கிடைக்கவில்லை என்ற வேதனையில் தனக்குக் கருத்தடை அறுவைச் சிகிர்ச்சை செய்து கொண்டார்.'

என்ன அனியாயம். இப்படியும் ஒருவரா?

என் கண்கள் பனித்துவிட்டன. இதயத்தால் அழுகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006 ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙලේදී විවෘත තරඟයෙන් ප්‍රථම ස්ථානය දිනාගත් කෙටිකථාව G.W. සසංකා චාමලී

## දුප්පතුන්ගේ කඳුළු බිඳු

වැලිකඩ බන්ධනාගාරය වෙනදාට වඩා ශාන්ත පරිසරයකින් යුක්ත විය. බන්ධනාගාරය පුරා හමා ගියේ දහම් සුවඳින් ඔපවත් වූ සුළං රොදකි. බණකට වැඩි ස්වාමීන් වහන්සේගේ සුමධුර හඬ බන්ධනාගාරය පුරා රැව්දෙන්නාක් මෙනි. සුමනාවතීගේ හිතට දැනුනේ අපිරිමිත වූ සැහැල්ලුවකි. ශාන්ත බවකි. අමිහිරිවූත් කර්කශවූත් යටගියාවූ අතීතය හදවත පාරවමින් යලිත් මතකයට එබුණේ සන්සුන් සිතේ නිහඬ බව බිඳිමිනි. සුමනාවතී දිගු සුසුමක් පිටකලාය. ඇගේ සිත නතර වූයේ අතීත මතකයන් තුලය. කෙතරම් කර්කශ වවුද මිනිසෙකුට සිය අතීතය අමතක කල නොහැක.

"පුතේ... පුතේ...... නැගිටපං ඉන්මන් කරලා ඉස්කෝලෙ යන්න පරක්කු වෙනවනෙ"

පැදුරැ කඩමාල්ලේ වකුටු වී සරම්කොටයේ උණුසුමට ගුලිවී සිටින පුතු අසලට ගිය සුමනාවතී පුතුට ඇඩ ගැසුවාය.

"බෑ.... බෑ..... අම්මෙ මට ඉස්කෝල යන්න" ඇලි මැලි කඩමින් නිදිපැදුරේ උණුසුමින් මිදෙන්නට අකමැති වූ වරුණ අම්මාට කීය.

"අර මොකෝ එකපාරටම උඹට ඉස්කොලෙ යන්න බෑ කියන්නෙ.. කම්මැලිකම අතැරලා නැගිටපං පුතේ.." සුමනාවතී ආදරයෙන් පුතුගේ හිස පිරිමදිමින් පැවසුවාය.

"බෑ කිව්වනේ එක සැරයක්. මට බෑ අම්මෙ ඉස්කෝලෙ යන්න ළමයි මට අනං මනං කියනව. මට හොරාගෙ පුතා කියනවා. "කසිප්පු හොට්ටා" කියල කියනවා. මට දැං ඇතිවෙලා අම්මෙ.."

අනෙක් ඇලයට හැරී සරංකොටයට එබුනු වරුණ නැවතත් නිදන්නට විය. සුමනාවතීගේ හදට දැනුනේ කියාගත නොහැකි අසරණකමකි. දොරකඩ ඇණතියා හිස් අහස දෙස බලා සිටි පීනදාසට නුදුරින් සුමනාවතී හිඳගත්තාය.

"ඇහෙනවද පුතංඩියා කියන කථාව. උගේ ඉස්කොල ගමනත් ඕං නැවතුනා. අනේ මංද කරුමේ තමා" ඈත අහසේ නැගෙනහිරැ දෙස බලමින් සුමනාවතී කීවාය.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"දැං ඉතින් ඔහෙ මොනවද කරන්න හිතන් ඉන්නේ ? "

"මංදා මොනව කරන්නද කියලා. ආයෙනම් සැම්සන් මුදලාලිගෙන් බඩු ගන්නවා බොරු. මිනිහා එදා මට සැහෙන්න දොස් කීවා. මූං දෙන්නා ගැන හිතනකොට තමයි පපුව හෝස් ගාල යන්නේ. කොල්ලට බැරිනං ඉස්කෝලෙ යන්න. ඔන්න ඔහෙ හිටපුදෙන්. ඒවට යන වියදමවත් අඩුවේවිනේ. බලමු මොනවහරි කරන්න;" පනිවිට්ටුව අතට ගෙන වතුර පයිප්පය දෙසට යෑමට හැරෙමින් පීනදාස කීය. "දැම්මම ගියෙ නැත්නම් දහයටවත් වතුර ටිකක් තෙමා ගන්න බැරිවේවි" වැසිකිලි පෝලිම, වතුර පයිප්ප පෝලිම, ඔවුනට හුරුපුරුදුය. මේ ඔවුනට හිමි ජීවිතයය.

රේල් පාර අයිනේ පිහිටි ලෑලි ගෙවල් පේලියක විසූ සුමනාවතී දෙදරු මවකි. වැඩිමහල් දියණිය මාලතීය. පුතා වරුණය. සුමනාවතීගේ සැමියා වූයේ පීනදාසය. සුමනාවතී කුරුඳු වත්තේ පිහිටි බංගලාවක බැල මෙහෙවෙරකම් කරන්නීය. පීනදාසටද ස්ථිර ආදායමක් නොවීය. ඔහු කසිප්පු විකිණීමෙන් ජීවත් වූවෙකි. එකපිට තෙවතාවක් පොලීසියට කොටුවූ පීනදාසට දැං එම රස්සාවද අහිමි වී ඇත. පීනදාස විකිණීමට කසිප්පු ගන්නේ සැම්සන් මුදලාලිගෙනි. මේ ලෑලි ගෙවල් පේලියේ යමක් කමක් තිබුණේ සැම්සන් මුදලාලිටය. කසිප්පු, මත්කුඩු වැනි නීති විරෝධී ජාවාරම් ගසක් ඔහු සතු විය.

ඇල්වතුර කෝප්පයක් බඩට හලාගත් සුමනාවතී රේල් පාර පැන කුරුඳු වත්තේ බංගලාව දෙසට පිය මැන්නාය. මේ සුවිසල් මැඳුර දකින වාරයක් පාසා සුමනාවතීගේ හද කෑ ගසා හඬන්නීය. බංගලාවේ කුස්සි අම්මා වූ සුමනාවතීට මේ කුස්සියම පමණක් සුරපුරයක් විය. ටයිල්ස් අල්ලා දිලිහෙමින් ඇති මේ බිමෙන් ඇය ඇගේ දිරාගිය රූපය දෙස බලන්නීය. මේ ආත්මයේ නම් මෙවැනි සැපක් සැනසීමක් ගැන සිතීම මෝඩකමකැයි සිතීම සුමනාවතී වටහාගෙන අවසානය.

"ආ...... සුමනාවති ආවද? අද ටිකක් නින්ද ගියා. ඊයෙ රෑ වෙනකන් වැඩකරපු නිසා මං හිතුවෙ සුමනාවතී තව පරක්කු වෙයි කියලා." තරප්පු පෙල බැස කුස්සියට එමින් හාමු නෝනා පැවසුවාය. "ඒක නෙමෙයි සුමනාවතී; මං මේ කියන්නමයි හිටියේ අපේ මල්ලී රණවීර මන්ත්‍රීතුමා, සුමනාවතී දන්නවනේ නේද? එහෙ වැඩට හිටපු ගැහැණු ළමය ගෙදර ගිහිං. ඉතිං වැඩට ගෑනු ළමයෙක්ව හොයනවා මට මතක් උනා උඹේ දුවව උඹට පුළුවන් නේද කෙල්ලව එවන්න තුන්වේල කාලා දෙය්යනේ කියලා ඉඳිවිනේ බං. උඹ කැමතිද? සුමනාවතී කල්පනා කරන්නට විය. "තුන්වේල හරියට


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කාපු කාලයක් මතක නැතිව ඇති. කිච්ච වගේ දෙය්යනේ කියලා කාල ඇඳල මයෙ කෙල්ල ඉන්නැනෑ'. සුමනාවතී තනිවම සිතුවාය.

"හිතන්න දෙයක් නෑ බං. ඔන්න ඔය කෙල්ලව එවපං".

"පිනදාසගෙනුත් අහල බලල මම කියන්නම් නෝන හාමු". සුමනාවතී කීවාය.

"ආයෙ මොනවට පිනදාසගෙන් අහන්නද? ඒ මිනුස්සයා අකමැති වෙන්නෑ විකාර නැතුව හෙට ගිහින් ඔය කෙල්ලව ඇරලපන්".

හාමු නෝනා තරප්පු පෙල නැග උඩුමහලට ගියාය. සුමනාවතී නවතවත් කල්පනා කරන්නට විය. හිතේ පොරබඳන සිතිවිලි සමුදායක් රැගෙන සුමනාවතී ගෙදර ගියාය. හාමුනෝනා කියූදේ පිනදාස සමග පැවසූ ඇය ඔහුගේද කැමැත්ත ඇතිව පසුදා මාලනීව රණවීර මන්ත්‍රීතුමාගේ නිවසට ගොස් ඇරලීය.

"කෙල්ල නැති පාළුව මුළු ගේ පුරාම. කෙල්ලට යහපතක් වෙයිනේ කියලා දහවතාවකට වැඩිය හිතලයි ඕං කැමැත්ත දුන්නෙ. නැත්තං මගේ හිතේනම් ඒ හැටි කැමැත්තක් තිබුණේ නෑ.." පිනදාස සුමනාවතී සමග පැවසීය.

"පූරුවෙ කරුමෙකට මේ අපායෙ උපන්නා. මොනව කරන්නද වරුණත් දැන් අර රස්තියාදු කල්ලියට වැටිල. ඌටත් අනාගතයක් නැතිවුනා.. අනේ මන්දා මේ නරකාදියෙන් එගොඩ වෙන්න ආත්ම හතක් පිං කෙරුවත් මදිවේවි." සුමනාවතීගේ දුක්බර හඬ අනුමත කරන්නාක් මෙන් උඩරට මැණිකේ හූ හඬ තලමින් දුම්රිය පොළ වෙත ඇදුනි. "මෙතනින් යන කෝච්චිවල යකඩ බරට පැද්දෙන මේ ලෑලි ගෙවල් වගේ තමයි මේ අපේ ජීවිතත්. සල්ලි ඉස්සරහ එහෙටයි මෙහෙටයි පැද්දෙනවා. උදේ ඉඳන් මාර්කට් එකේ කරක් ගැහුවා. ඒත් නෙමේ එක කුලියක් හම්බවුනේ උපන් ගෙයි කරුමෙ තමා" එලා තිබූ පැදුරට බරවෙමින් පිනදාස පැවසීය.

"දෙනෝදාහක් ගැවසෙන මේ කොළඹ රටේ මුඩුක්කු පේලියක හරි ඉන්න ලැබිච්ච එකත් මදෑ. මහපාරට නොවැටී මෙහෙම හරි ඉන්න ලැබුනේ මොකක් හරි පෙර පිනකට වෙන්ඩ ඇති" පාළු අහස දෙස බලා සිටි සුමනාවතී එසේ සිතන්නට විය. වරුණ එන තෙක් බලා සිටි ඇය ඔහු පැමිණි පසු කුප්පි ලාම්පුව නිවා දමා නිදන්නට විය. මන්ත්‍රීතුමාගේ නිවසට



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ගොස් මාස දෙකක් ඉක්ම යන්නටත් පෙර මාලතීව    රැගෙන යන ලෙස දන්වා පණිවිඩයක් එවා තිබුණි.

"ඇයි නෝන හාමු... කෙල්ල අතින් වරදක් වත් වෙලාද? ඇයි හදිසියේ එක්ක යන්න කියන්නෙ? තව මාස දෙකක් වත් ගතවුණෙ නැනෙ.." සුමනාවතීගේ හඬ බියාදුය.

"නෑ.. නෑ... බං එහෙම මුකුත් නෙමෙයි. කලින් හිටපු කෙල්ල ආයෙත් එනවලු. ඉතින් උඹේ කෙල්ල තියන් ඉඳල වැඩක් නැනෙ. ඒකයි. මෙච්චර දවස් කරපු වැඩ වලට ඒකිට කීයක් හරි ලැබේවි.." නෝන හාමු කිවූ වදන් තුල යම් කුකුසක් ඇතැයි සුමනාවතීට සිතුනි. එහෙත් ඇය ඒ පිළිබඳව වැඩි සැලකිල්ලක් නොදැක්විය.

"මොකෝ දුවේ උඹ මාස දෙකක්වත් හරියට එහෙ හිටියයැ. උඹ අතින් මොකක් හරි වැරැද්දක්වත් උනාද" පීනදාස මාලතීගෙන් ඇසුවේය.

"න්... නෑ.. නෑ... තාත්තෙ එහෙම මුකුත් නෑ"

"කමක් නෑ. උඹ ආ එකත් හොඳයි. මන්ත්‍රීවරයෙකුගෙ ගෙයක් කියපුහම ඕන එකයි, එපා එකයි හැම එකාම ඉන්නවානේ.. ඔය ලොකු තැන් අපට ඕන්නෑ.. ඔය හිටිය විදිහට වේලක් හරි කාල ඉමු. ඒක සැපක්" පීනදාස ඒ වදන් කීවේ සැබෑ දරු සෙනෙහෙසින්මය.

වරුණ දැන් දැන් ගෙදර එන්නේද සතියකට වරක් හෝ දෙකක් පමණි. ඔහුද සම්පත් මුදලාලි ලඟ සුළු සුළු දෑ කරන්නේ යැයි සුමනාවතීටත් පීනදාසටත් ආරංචි වී ඇත. බඩු කරත්තයක් තල්ලුකර හෝ එළවළු ගෝනියක් උස්සා යන්තං කුලියක් හොයා ගන්නා පීනදාස දිනකට එක් වෙලක් හෝ සරිකර ගන්නේ බොහෝ අමාරුවෙනි. සුමනාවතීද දැන් බංගලාවට යන්නේ නැත. ඊට හේතුව වූයේ බංගලාවේ උදවිය විදෙස්ගත වීමයි. මාලතී, රණවීර මන්තීතුමාගේ නිවසේ සිට පැමිණි දිනවල සිටම අසනීප තත්වයකින් පෙලෙමින් සිටින්නේයැයි සුමනාවතීට දැනී ඇත. කැරකැවිල්ලක් නිසා නිදි පැදුරෙන් නොනැගිටින ඇය කෑමකටද ප්‍රියතාවයක් නොදක්වයි. නිතරම ඔක්කාරයෙන් පසුවන මාලතී තවතවත් කෙසග වී ඇත.

"මොකද බං කෙල්ලට වෙලා තියෙන්නේ.. ඒකිට මොන අසනීපයක් හැදිලද.. දැන් දවස් කීයක්ද? ඉස්පිරිතාලෙටවත් එක්ක පලයල්ලා." බලා සිටිය නොහැකි තැන පීනදාස කීය. පසුවදා උදෑසන සුමනාවතී මාලතී කැටුව රෝහලට ගියාය. මාලතීව පරීක්ෂා කර බැලූ දොස්තර මහතා පැවසුවේ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඇය මවක විමට යන බවය. එය ඇසූ සුමනාවතීට කිසිවක් කර කියා ගත නොහැකි විය. මුළු ලෝකයම තමා වටා කැරකෙන්නාක් මෙන් ඇයට දැනිණි. "මේ මොන කරුමයක්ද දෙයියනේ; කියපං දුවේ කවුද උඹට මේ අපරාදෙ කළේ.. කියපං.." සුමනාවතී වේදනාවෙන් කෑ ගසයි. නොනවත්වා අඬනවා මිස මාලතී කිසිවක් නොකියයි "කියපං.. යකෝ කවුද උඹට මේ අපරාදෙ කරපු නරුමයා. කවුද කියපං" සුමනාවතී වියරුවූවෙකු මෙනි. අවසානයේ මාලතී සියල්ල පැවසුවාය.

"ඒක තමයි ඒක තමයි ඕකුං කිවුවේ ඇවිත් උඹව එක්ක යන්න කියලා. සංජය රණවීර මහලොකු මන්ත්‍රී තාත්තගෙ පුතා. අනේ මූං වගේ තිරිසනුන්ටත් හරියනවනෙ." සුමනාවතීගේ හඬ හිස් අහස පුරාවට පැතිරි යයි. කිසිවක් කර කියා ගත නොහැකි පිනදාස වියරු වූවෙකු මෙනි. ලැබූ මේ ජීවිතය පුරාවට කුමක් හෝ දෙයක් එකතු කර ගත්තද එයද උඩු හුලගේ ගියාබඳු වේදනාවක් පිනදාසට දැනුනි. නිවසින් පිටවූ පිනදාස රේල්පාර දිගේ යන්නට විය. හිරු බැස ගොස් ඝන අන්ධකාරය මුළු පරිසරයම ගිල ගත්තේය. එහෙත් නොනිදන නගරයේ හඬනම් අඩු නොවීය. සුමනාවතීගේ හිතේ බර එන්න එන්නම වැඩිවිය. පිනදාස තවම නිවසට පැමිණ නැත. රාත්‍රී දොළහට පැමිණෙන සීඝ්‍රගාමී දුම්රිය වෙනදාට වඩා තදින් තිරිංග දැම්මා නොවේදැයි සුමනාවතීට සිතුනි. පැදුරු කඩමාල්ලේ වැතිරුනු සුමනාවතීගේ ඇහැ ඇරුනේ වරුණගේ හඬිනි.

"අම්මේ... අම්මේ... අම්මේ...." හතිලමින් දොරකඩ සිටින වරුණ දුටු සුමනාවතීගේ හදගැස්මද වැඩිවිය.

"මොකද පුතේ මේ පාන්දර උඹ කෑ ගහන්නෙ...;"

"අම්මෙ... අම්මෙ.. තාත්ත.. තාත්ත... කෝච්චිය., තාත්තා යට., වරුණ ගොත ගසමින් කීවේ එපමණකි. සුමනාවතී උමතුවෙන් මෙන් කෑගසමින් රේල්පාර දිගේ දිව ගියාය. "ඇයි දෙය්යනේ අපටම මේ දුක් දෙන්නේ.." සුමනාවතීගේ හඬ රේල්පාර දිගේ ඇසෙයි. ඈතින් ඇහෙන සුමනාවතීගේ හැඬුම් හඬ සුළඟට මුසුවී හිස් අහස පුරාවට පැතිර ගියාය.

පිනදාසගේ අවසන් කටයුතු සිදුවී තුන් මසක්ද ඉක්ම ගොසින්ය. මාලතීගේ මෝරා වැඩෙන කුස දෙස බලමින් සුමනාවතී සුසුම් හෙළන්නීය. ඇට පැදුනු මාලතීගේ කෙසඟ සිරුරට ඒ කුස බර වැඩිය. වරුණගේ ජීවිතයද විනාශ වී හමාරය. මත්කුඩු වලට ඇබ්බැහි වී සිටි ඔහු දැනට සිටින්නේ පුනරුත්ථාපන මධ්‍යස්ථානයකය. කුමක් හෝ කුලී වැඩක් සොයා ගන්නා සුමනාවතී වේලක් හෝ මාලතීට කන්නට දෙයි.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"මොකද අම්මේ මේ දාඩිය පෙරගෙන. ඇයි ? මොකද උනේ" දහඩිය පෙරාගෙන ගෙට ගොඩවූ සුමනාවතීගෙන් මාලතී ඇසුවාය.

"මට ඇල් වතුර කොප්පයක් අරන් වරෙන් මාලතී ඉස්සෙල්ලාම.." බිම හිඳ ගනිමින් සුමනාවතී කීය. මාලතී ගෙනා වතුර කෝප්පය එක හුස්මට බිවූ සුමනාවතී කථාව ඇරඹුවාය.

"දැන් ඉතිං ඔක්කොම ඉවරයි දුවේ. හිසට සෙවනක් වෙච්චි මේ ලෑලි ටිකත් නැතිවෙනවා ඕං"

"ඇයි අම්මෙ මොකද උනේ? කියන දෙයක් තේරෙන විදිහට කියන්නකො අම්මෙ"

"සතියක් ඇතුලත මේ ලෑලි ගෙවල් වලින් යන්න කියල. මේව අනවසර ඉදිකිරීම්ලු. දැන් ඉතිං කොහේ කියල යන්නද දෙවියනේ අපි. බඩකුත් උස්ගෙන ඉන්න උඹව මම කොහාට කියල එක්කගෙන යන්නද. මොන කරුමයක්ද දෙය්යනේ මේ.." සුමනාවතීට හැමදාම ඉතිරිවුනේ මෙසේ හීල්ලීම පමණි.

අවසානයේ සුමනාවතීගේත් මාලතීගේත් මාවත වැටුනෙ බස්නැවතුම්පල වෙතටය. රාත්‍රී බස්නැවතුමේ ගෙවන ඔවුන් හිරු නැගෙත්ම කොහේ හෝ සෙවනක් කරා යති. නැවත අඳුරු වැටෙත්ම බස් නැවතුම වෙතට ගාල්වේ. කාට හෝ අතපා ලැබෙන දෙයකින් කුස පුරවා ගනී. මහ මග යනෙන මිනිසුන්ගේ අවලාද අපහාස වලට ලක්වන වාර නම් අනන්තය අප්‍රමාණය.

"ෂික්.. උදේ පාන්දර පාරට බැස්සාම මූනට මුලිච්චි වෙන්නේ මේ හිගන හැත්ත.. ඉතිං දවසම ඉවරයි."

ඒ ඇතැමෙකුගේ හඬය. "ඉන්න හිටින්න තැනක් නැති උනාට මොකද හරි කාලෙට බඩක් නම් උස්සගෙන ඉන්නව. අනේ මෙහෙමත් ජාතියක්" එසේ කියමින් ඔවුහු සමච්චලයට සිනහ වෙති. ඒ සෑම අවස්ථාවකදීම සුමනාවතීගේ පපුව හරහා කිනිස්සක් ඇනෙන්නාක් බඳු වේදනාවක් ඇයට දැනේ. සුදුමැලි වී කෙඬෑරි වී සිටින මාලතී දෙස බලන්නටත් බැරි තරම්ය. දරුවා ලැබීමට ආසන්න වූ බැවින් මාලතීව රෝහල් ගත කෙරිනි. සූතිකාගාරයෙන් ඇසන මාලතීගේ වේදනාත්මක හඬ සුමනාවතීගේ හද ගැස්ම නවතවත් වැඩි කරයි. විනාඩි කීපයකට පසුව ඇසුනු බිළිඳෙකුගේ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඇඬුම් හඬින් සුමනාවතීට නව පනක් ලැබුනා සේ විය.

"දොස්තර මහත්තයෝ මගේ දුවට කොහොමද?" සුමනාවතීට ඉවසුම් නැති විය.

"ආ එයාට පුංචි දුවෙක් ලැබුනා. ඒත් කණගාටුයි. අපට අම්මව බේරගන්න බැරිඋනා. අම්මා හිටියේ හුගාක් දුර්වල මට්ටමක. අපට දරුවා ගැනත් විශ්වාසයක් තිබුනේ නෑ.. ඒත් වාසනාවකට දරුවා බේරගන්න අපට පුළුවන් උනා."

දොස්තර මහත්තයාගෙ වදන් හමුවේ සුමනාවතීට දැනුනෙ මුළු ලෝකයම නැති වූවාක් බඳු හැගීමකි. "මොන වාසනාවක්ද, තවත් බරක් මේ ලෝකෙට ඉතිරි කරලා දුවේ උඹ යන්න ගියා නේද? අම්මා අප්පා නැති මේ කිරි දරුවට යන කල මොකක්ද?" සුමනාවතී වැලපුනාය. සුමනාවතීට වෙනදා නොදැනෙන තරමේ ධෛර්‍යයක් උපන්නාය. කුමක් හෝ බලවේගයක් ඇයව හසුරවන්නාක් මෙන් සුමනාවතීට දැනුනි රෝහලින් පිටත් වූ ඇය මාවත දිගේ යන්නට ගියාය. අවසානයේ ඇය නැවතුනෙ යකඩ ගේට්ටුවක් දැමූ සුවිසල් මැදුරක් ඉදිරිපිටය. ඇය වැරෙන් ගේට්ටුවට තඩි බෑවාය.

"කවුද යකෝ මේ පට්ට දවල් ගේට්ටුවට ගහන්නේ.." ගේට්ටුව විවර කර මුරකරු, පැමිණ සිටියේ කවුරුදැයි හඳුනා ගත්තේය. "ආ.. මේ සුමනාවතීනේ. මං බැලුව කවුද කියල". "හාමු නෝනා ඉන්නවද ජේම්ස් අයියේ?" සුමනාවතී මුරකරුගෙන් ඇසුවාය. "බංගලාවේ කවුරුත් නෑ බං. හැමෝම ෂොපිං කරන්න කියලා ගියා. ඇයි දන්නැද්ද සංජය බේබි කසාද බඳිනවානෙ. සුමනාවතීට හාමු නෝනා එන්න කියන්න ඇත්තෙ එහෙනම් ඔය වැඩවලට උදව්වෙන්න වෙන්ඇති."

"ආ.. ඔව්! ඔව්!" සුමානවතී පටලවා ගත් බොරුවක් කීවාය.

"සංජය මහත්තයා නම් ඉන්නවා. අද මහත්තයගේ යාළුවෝ වගයක් එනවලු රට ඉඳන්. ඉතින් මහත්තයා එයාපෝට් යන්න ඉන්නෙ. තව ටිකකින් යයි. සුමනාවති හාමු නෝනා එනකන් කුස්සියට වෙලා ඉන්න." එසේ කියූ ජේම්ස් යකඩ ගේට්ටුව වසා දැම්මේය. කුස්සියෙන් ගෙට ගොඩවූ සුමනාවති තරප්පුව නැග සංජයේ මහත්තයාගේ කාමරය අසලට ගියාය.

"සංජය මහත්තයෝ... සංජය මහත්තයෝ... කාමරයේ දොරට තට්ටු


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කරමින් සුමනා සංජය බේබී මහත්තයාට කථා කලාය.

"කවුද.." කාමරය තුලින් ඇසුනි.

"මම මේ සුමනාවතී මහත්තයෝ.. රෙදි වගයක් තියෙනවා කියලා, නෝන හාමු කිවුවා ඒවික හෝදලා දාන්න කියලා. කසාදෙ වැඩ වලට උදව් කරන්න මට එන්න කිව්වෙ"

"දොර ඇරලා තියෙන්න ඇවිල්ලා අර ගනින්"

සුමනාවතී දොර විවර කර කාමරය තුලට ගියාය. කාමරයට ඇතුළු වූ වහාම දොරගුලු ලෑවාය. ලේ වලින් සුමනාවතීගේ දෙනෙත් නලියන්නට විය. සුමනාවතීගේ හැසිරීමෙන් සංජය මහත්තයා කලබලයට පත් විය.

"මගේ කෙල්ලව අමාරුවේ දාපු තිරිසනා... උඹ දන්නවද? අද මගේ කෙල්ල උඹට දාව දූවෙක් වදල.. මේ ලෝකෙන් යන්න ගියා. උඹ නිසා මගේ පවුලම විනාශ වුනා. දුප්පත්කම නිසයි මම මේ ඔක්කොම ඉවසුවෙ. දැන් මට උන්නත් එකයි.., මලත් එකයි.., උඹල වගේ යක්ෂයින්ට මේ ලෝකෙ කැප නෑ... අහිංසක අපිව විනාශ කරලා ඔබලට මගුල් ගන්නනේද?.. ඒකට මං ඉඩ තියන්නෑ.. උඹලට" සුමනාවතී වියරුවෙන් කෑ ගැසුවාය. මෙතෙක් වේලා ඉනේ සඟවා සිටි පිහිය අමෝරාගෙන අංජය බේබී මහත්තයා වෙත පැන්න සුමනාවතී කේන්තිය නිවෙන තුරු සංජයට ඇන්නාය. සුමනාවතීගේ මුවහත් පිහිතලය සංජය මහත්තයගේ පපුවේ ලේ රස දහ දොලොස් වතාවකට වඩා බලන්නට ඇත.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006ம் ஆண்டிற்கான கட்டுரைப்போட்டி (சிரேஷ்ட பிரிவு)
1ம் இடம்பெற்றது. ஜீவானந்தன் கஜீபன்

# செழிப்பு நிறைந்த சமூகம் நாட்டினது அபிவிருத்தியின் அடிப்படையாகும்

எழுத்துக்களின் புணர்ச்சி தான் சொல் ஆகின்றது; சில சொற்களின் புணர்ச்சி தான் வாக்கியம் ஆகின்றது; பல வாக்கியங்களின் புணர்ச்சி தான் மொழி என்று வழங்கப்படுகின்றது. எழுத்தின், சொல்லின், வாக்கியத்தின் புணர்ச்சி மொழி என்ற பரிணாம வளர்ச்சியைத் தோற்றுவித்திருக்க, மொழியானது தனது சகாக்களிடம் கொண்டிருக்கும் சமத்துவமும், சமாதானமுமே தக்க சான்றாகும் என மொழியியல் நிபுணர்கள் நிருபணப் படுத்தி உள்ளார்கள். ஒரு மொழி தன்னை செழுமைப்படுத்திக் கொள்ள, பழமையில் இருந்து தன்னை விடுவித்து புதுமைப் படுத்திக் கொள்ள, தனக்குள் சமத்துவம் செய்து அபிவிருத்தியைத் தருவித்துக் கொள்ள ஒவ்வொரு கணமும் எத்தனிக்கின்ற வேளையில், இன்றைய யுகத்தின் மனிதன் சமத்துவம் கற்பிக்கும் மொழியில் நின்று கொண்டு, இனம் என்றும், மதம் என்றும், ஜாதி என்றும் பிழவு பட்டு நிற்பது வேடிக்கைக்கும் வேடிக்கை செய்கின்றது.

"ராபட்டும், லில்லியும் இணைந்தால் ஒரு கிறிஸ்தவன் பிறக்கிறான்!
குசைனும், பாத்திமாவும் இணைந்தால் ஒரு இஸ்லாமியன் பிறக்கிறான்!
பண்டாரவும், புஞ்சினோனாவும் இணைந்தால் ஒரு பௌத்தன் பிறக்கிறான்!
கண்ணனும், லக்ஷமியும் இணைந்தால் ஒரு இந்து பிறக்கிறான்! ஆனால் யாரும், யாரும் இணைந்தால் ஒரு மனிதன் பிறப்பான்?" என்ற வினாவை உச்சரித்தால் வார்த்தைகள் உதட்டோடு உறைந்தும், தொண்டைக்குழிக்குள் கரைந்தும் மௌனித்து விடுகின்றது. எங்கே நல்ல மனிதனும், நல்ல மனிதனால் உருவாக்கப்படும் சமுதாயமும் உருவாக்கப்படுகின்றதோ அங்கே தான் அபிவிருத்தியை காண முடியும். ஒட்டு மொத்த மனிதர்களும் "மனிதனாக வாழ வேண்டும் மனதில் வையடா தம்பி, நீ வளர்ந்து வரும் உலகத்திற்கே வலது கையடா" என்கின்ற தாரக மந்திரத்தை உதட்டில் மட்டும் இருத்திக் கொள்ளாமல் செயலிலும் நடாத்திக் காட்டுவார்களேயானால் நிச்சயம் செழிப்பு நிறைந்த சமூகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்டு நாட்டின் அபிவிருத்தி உறுதி செய்யப்படுவதாய் அமையப்பெறும் என்பதில் அணுவளவேனும் ஐயமேதுமில்லை.

"ஒண்ணா இருக்கக் கத்துக்கணும் - அந்த
உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும்
காக்காக் கூட்டத்தைப் பாருங்கடா - அதுக்கு
கத்துக் கொடுத்தது யாருங்கடா" என்று நாம் சொல் வடிவம் கொடுத்தோமே தவிர செயல் வடிவம் கொடுத்ததாய் வரலாறுகள் இல்லை. மனிதர்களிடையே பிழவு இருக்கின்ற வரையில் செழிப்பு நிறைந்த சமூகம் உருவாக்கப்பட்டு நாடு அபிவிருத்திப்படுவது என்பது நடைமுறைக்குச் சாத்தியம் இல்லாத ஒன்று. இல்லை. அதனைச் சாத்தியப்படுத்துவோம் என்று உரைப்பது கல்லில் நார் உரிப்பதற்கு ஒப்பாக அமையப் பெறும்.

ஜனனம் தாய், தந்தை நமக்குக் கொடுத்தது. மரணம் இறைவன் நமக்கு அளி(ழி)ப்பது. இதுதான் உலக நியதியும் கூட இந்த ஜனனத்திற்கும், மரணத்திற்கும் இடையிலான இடைவெளி மிகச்சிறியது. கிடைத்தற்கு அரியபெரும் பேறான இந்த உலகியல் வாழ்விலே உயிரினங்கள் ஒவ்வொன்றும் பிறப்பில் கூடி வாழும் பண்பினையே கொண்டிருப்பதற்கான சான்றுகள் ஏராளம், ஏராளமாய் உள்ளது. அதாவது உயிரினத்தோற்றத்தோடு உடன்பிறந்த உவகை, அச்சம், பயம் போன்ற உணர்வுகள் இயல்புணர்வுகளாகக் கணிக்கப்படுகின்றன. அச்சம், பயம் என்பவற்றில் இருந்து மீளக் கற்றுக்கொண்ட ஒரு தற்காப்பு உயர்வு தான் கூடிவாழும் பண்பு. கூடிவாழும் பண்போடு உயிரினத்திடம் கூடி உழைக்கும் செயலும் பிறந்து விட்டது. ஈ, எறும்புகள், பறவைகள், நீர்வாழ் பிராணிகள், மிருகங்கள் முதலிய உயிரினங்களிடையே கூடி வாழ்தல், கூடி உழைத்தல் ஆகிய செயற்பாடுகள் இருந்து வந்ததை உயிரியல் ஆராச்சியாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். உலகியல் வாழ்வில் இச் செயல்களை நாமும் கண்களால் காணக்கூடியதாக உள்ளது. எனவே உயிரினத் தோற்றத்தோடு உடன்பிறந்ததுதான் கூட்டு உணர்வான கூடி வாழ்கின்ற பண்பு. இந்தப் பண்பினை மரணத்தின் மைல்க்கல் வரையிலாக மனிதன் தொடர்ச்சியாக கடைப்பிடிப்பானேயானால் நிச்சயம் செழிப்பு நிறைந்த சமூகம் உருவாக்கப்பட்டு நாடு அபிவிருத்தி அடைந்திருக்கும். ஆனால் துர்அதிர்ஷ்ட வசமாக இலங்கை போன்ற நாடுகளில் பிறப்பில் நல்ல பண்புகள், கூடி வாழும் பண்புகள் வாய்க்கப் பெற்றிருந்தாலும் கூட காலத்தின் வளர்ப்பில் பல கசப்பான வாழ்க்கை நடைமுறைகள் வாழ்க்கையில் கைகோர்த்து வருவதினாலேயே மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் செழிப்பு இன்றி. அபிவிருத்தியும் குன்றிவிடக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு நாட்டை புதைகுழிக்குள் அமிழச் செய்து விட்டிருக்கின்றது.

இலங்கைத் தாய் பெற்றெடுத்த மக்களாகிய நாம் அனைவரும் சிக்கனச் சிலுவையில் ஏற சீர் தூக்கியிருக்கும் ஆயுதம் மதம்! இன்று நாட்டின் அபிவிருத்தி சீர்குலைந்திருப்பதற்கான சூட்சுமம் மதம்! என்றவாறாக மதத்தினை முன்னிலைப்படுத்தி மனிதர்களாகிய நாம் வெவ்வேறு திக்குகளில் பிழவுபட்டிருப்பதற்கு சாட்சியம் மதம்! சாமியைப் படைத்தது பூமியா? இந்த பூமியைப் படைத்தது சாமியா? தினம் ஏழைகள் கூழுக்கும், பாலுக்கும் அழுகையில் ஆயிரம் கோயில்கள், விகாரைகள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் தேவையா? மனிதனை சீர்படுத்துவது தான் மதம்! அதை விடுத்து சீர் குலைப்பது அல்ல மதம்! இன்று இலங்கையிலே மட்டுமல்லாது பல்வேறு நாடுகளிலும் சீர் குலைத்துக் கொண்டிருக்கும் ஒரே ஒரு ஊடகம் மதம். ஆதலினால்த்தான் தாயுமானவர் சுவாமிகள்,

'நட்ட கல்லே தெய்வம் என்று
நாலு புஸ்பம் சாத்தியே
சுத்தி வந்து தொண தொணன்று
சொல்லும் மந்திரம் ஏதடா?
நட்ட கல்லும் பேசுமோ?
நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம்
கறிச்சுவை அறியுமோ?' என்று உலகியலது, தெய்வத்தினது உண்மையை பாடலாகப் பாடியிருக்கிறார். மனங்களிலே தெய்வத்தை வைத்துக் கொண்டு வெளியிலே தெய்வத்தைத் தேடும், அந்த தெய்வத்தை வைத்தே சண்டையிடும் மதவாதிகளை எள்ளி நகையாடுகின்றார் தாயுமானவர் சுவாமிகள். அதே போல்,

'கறுப்பில் வெளுப்புமில்லை
கனவுக்கு உருவமில்லை
கடலுக்குள் பிரிவு மில்லை
கடவுளில் பேதமில்லை'

என்று எல்லா மதத்தினரும் ஒரு தாய் பெற்றெடுத்த மனிதர்கள் என்கின்ற சமத்துவ நெறி என்று தோற்று விக்கப்படுகின்றதோ அன்று செழிப்பு நிறைந்த சமூகம் உருவாக்கப்பட்டு நாட்டின் அபிவிருத்தி உறுதி செய்யப்பட்டதாய் அமையப் பெறும் என்று சொன்னால் அதில் பொய் ஏதுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து செழிப்பானதொரு நாட்டின் அபிவிருத்தியில் கைகோர்த்து நிற்கும் குறிகாட்டி யாதெனின், கார்ல் மார்க்ஸினால் தோற்றுவிக்கப்பட்டு, லெனின் ஸ்டாலின் போன்றோர்களால் உலகின் அந்தம் வரையிலாக எடுத்துரைக்கப்பட்ட, வழி நடத்தப்பட்ட திவ்வியமான குறிகாட்டி 'பொது உடமை'. ஆளும் வர்க்கம் ஆளும் மற்றையோர் அடிமைகளாக்கப்படுவர்' என்கின்ற மொசோலியின் பாசிசக் கொள்ளைக்கும், ஹிட்லரின் நாசிசக் கொள்ளைக்கும், ராஜதந்திரிகளின் தனியுடைமைக் கொள்கைக்கும் அறுதியிட்டு முற்று புள்ளி வைக்கவும், செழிப்பான நாட்டினை உருவாக்கி அதனை அபிவிருத்திப் பாதையில் ஈட்டுச் செல்லும்.

'ஏவுகணை வேகத்தை நெஞ்சில் கொண்டு
கூவுகின்ற குயிலாகப் பறந்து சென்று
மேவுகின்ற சமூகக் கொடுமைகளுக்கு
சாவு மணி அடிப்பதற்காக உருவான மக்கள் உடைமையை! பொது உடைமை!. பொது உடைமைச் சித்தார்ந்தம் ஒரு நாட்டின் குடி மக்கள் மனங்களிலே குடிகொள்ளுமெனில் வன்முறைகள் களையப்படும். இனஅழிப்பு களையப்படும். அதனை நன்குணர்ந்த, தற்கால கவிச்சக்கரவர்த்தி என்றும், தமிழின் கவியரசரென்றும் தமிழ் நல்லுலகம் வாயாரப் போற்றிய கவியரசு கண்ணதாசன் பொதுவுடைமையை மலியப்படுத்த வேண்டும் என்கின்ற நல்லெண்ணத்தில்.

'எல்லோரும எல்லாமும் பெற வேண்டும் - இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்
வல்லான் பொருள் குவிக்கும் தனியுடமை - நீங்கி
வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடமை.' என்று முத்தாய்ப்பாக திரையிசைப் பாடலுக்குள் செழுந்தமிழ் செய்துள்ளார். எனவே பொது உடமை, மக்களின் உடைமையாக்கப்படும் சந்தர்ப்பத்திலே நிச்சயமாக வளம் மிக்கதொரு நாடு உருவாக்கப்பட்டு அபிவிருத்தி என்கின்ற ஒரே இலட்சியத்தில் பயணித்து வெற்றிகளை அண்மிக்கக் கூடிய வாய்ப்புக்கள் ஏராளம் என அரசியலின் தந்தை அரிஸ்டோட்டிலும், சாக்ரடீஸ் உம், பிளேட்டோவும் கூறியிருப்பது வெள்ளிடை மலையாகவும், உள்ளங்கை நெல்லிக்கனிதாகவும், குன்றிலிட்ட தீபம் போலிருப்பதும் புலனாகின்றது.

'பாலென அழுவோர்க்குப் பால் தருவோம் - பசுங்
கூழெனத் துடிப்போர்க்கு சோறிடுவோம்
தாயகம் காப்போரின் தாழ் பணிவோம் - யாவும்
தனக்கென நினைப்போரை சிறையிடுவோம்' என்றவாறாக எல்லாமும் எல்லோருக்கும் சொந்தம். இயற்கை அள்ளித் தந்திருக்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை பிழவு படுத்தாமல், பாகுபாடு காட்டாமல் நாமனைவரும் ஒருதாய் வயிற்றுக் குழந்தைகள் என்ற எண்ணத்தினை மனதளவில் தோற்றுவித்துவிட்டால், செழிபான நாடு உருவாகி அபிவிருத்திப் பாதையில் சென்று வெற்றி காண்பது திண்ணம்.

மேற்கத்திய நாடுகளில் கறை படிந்த காரிருள் சூழ்ந்த, கசப்பான நினைவுகளாக அன்றைய காலத்திலே ஆளும் வர்க்கமான மன்னன், பிரபுக்கள் பாட்டாளி வர்க்கமான சாதாரண குடி மக்களை நசுக்கியதனாலேயே அன்று மேற்கத்திய நாடுகளிற்கு அபிவிருத்தியும், செழிப்பும் கேள்விக் குறியாகவே இருந்தது. இது கண்டு கிளர்ந்தெழுந்த சாக்ரடீஸ்,

'ஏதென்ஸ் நகரத்து எழில் மிக்க வாலிபர்களே!
ஓடி வாருங்கள்! ஓடி வாருங்கள்!
நாற்றமெடுத்த சமுதாயத்தில் நறுமணம் கமழவைக்க,
ஓடி வாருங்கள்! ஓடி வாருங்கள்!
வீரம் விலைபோகாது விவேகம் கதைக்குதவா விட்டால்
தீட்டிய வாளும், தினவெடுத்த தோள்களிலே தூக்கிய
ஈட்டியும் போதாது இதோ நான் தரும் அறிவாயுதத்தையும்

பயன்படுத்துங்கள்' என்று பாட்டாளி வர்க்கமான, உழைத்து உழைத்து உழுத்துப்போன உழைக்கும் வர்க்கத்தினையும், நாளைய தலைவர்களான வாலிபர்களையும் தனது கூரிய அறிவாயுதமான 'பொதுவுடமை' என்னும் நல்ஆயுதத்தால் சமாதானத்திற்கான யுத்தம்' புரிந்து செழிப்பு நிறைந்த நாட்டை உருவாக்கி அபிவிருத்திப் பாதையில் ஈட்டுச் செல்ல முனையுங்கள் என்று அன்றே சாக்ரட்டிஸ் மேற்கத்திய, குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு பொதுவுடமை எனனும் போஷாக்கினை ஊட்டிவிட்டதனாலேயே இன்று உலகின் அபிவிருத்தி அடைந்த நாடுகள் வரிசையில் ஐரோப்பிய நாடுகளே முதன்மை பெறுவனவாகவும், செழிப்பு நிறைந்த நாடுகளாகவும் திகழ பொதுவுடமைத் தத்துவமே ஏதுவாக அமையப் பெற்றுள்ளது.

உலகத்தின் வல்லரசுகளையே வசியப் படுத்தவல்ல இந்தப் பொதுவுடமைச் சித்தாந்தம் இன்றைய இலங்கைக்கும் ஏதுவான தொன்றாகவே அமையப் பெறுகின்றது. நாம் அனைவரும் மனிதர்கள். இனம் என்றோ, மதம் என்றோ, நிறம் என்றோ நமக்குள் பேதம் இல்லை என்று கூறவல்ல எளிமையான பொதுவுடமைக் கொள்கையை இலங்கைத் தாய் தனது வலதுகுறைவிற்கான போசாக்கு மருந்தாக உட்கொள்வாளே யானால் நாளை நிச்சயம் செழிப்பு நிறைந்த சம்பூர்வ அபிவிருத்தியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையும் நாடாக இலங்கைத் திருநாடு அமையப்பெறும் என்று கூறின் அது மிகை ஆகாது.

அடுத்ததாக செழிப்பு நிறைந்த சமூகம் உருவாக்கப்பட்டு, நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமெனில் இன ஒற்றுமை, மத ஒற்றுமை, ஜாதி ஒற்றுமை, மொழி ஒற்றுமை எல்லாவற்றையும் தாண்டி பால் ரீதியான ஒற்றுமை நிச்சயம் தோற்றுவிக்கப்பட வேண்டியதொன்றாகும். அவ்வாறு தோற்றுவிக்கப்படுமேயானால் நாட்டின் செழிப்பும், நாட்டின் அபிவிருத்தியும் கால் கோல் ஊன்றுவதாக அமையப்பெறும். இன்றைய யுகத்தினை உற்று நோக்கையில் ஐரோப்பிய நாடுகளின் அதிதுரித வளர்ச்சிக்கு ஆண், பெண் என்கின்ற பால் ரீதியான பாகுபாடின்மையே முக்கிய காரணமாக அமைகின்றது. இதனாலேயே அந்த நாடுகள் அபிவிருத்திப் பாதையில் செழிப்பாக பயணம் செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் கீழைத்தேய நாடுகளை எடுத்து பார்க்கின் ஆண், பெண், என்கின்ற வர்க்க பேதம் ஆண்டாண்டு காலமாக நிலவி வருவதன் காரணத்தினாலேயே செழிப்பு நிறைந்த சமூகமோ, அபிவிருத்தி அடைந்த நாடோ பெரும் பாலும் உருவாகாமைக்குரிய காரணமாக அமைகின்றது. அதிலும் குறிப்பாக எம் போன்ற கலாச்சார இறுக்கம் மிகுந்த நாட்டில் ஆண், பெண் பாகுபாடு துரித அளவினிலே காணப்படுவது வெள்ளிடை மலையே ஆதலினால்த்தான் தமிழ் கலாச்சார அரிச்சுவட்டில் பெண்ணைப் புறந்தள்ளுகின்ற ஆக்கிரமிப்பு நிறைந்த சமூகத்தினை, 21ம் நூற்றாண்டின் இணையற்ற கவிராஜனான பாரதி,

'ஆணும் பெண்ணும் சரிநிகர் சமமெனக் கொள்வதில்
அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைத்திடும்' என்றவாறாக

அறியாமைக்கு அறிவு ஊட்டுகின்றார். ஒரு பெண்ணால் சாதிக்க முடியாதது எதுவுமேஇல்லை. அதற்கும் மேலாக ஒரு பெண்ணும் இந்த உலகில் மனிதனாகவே அவதரிக்கிறாள். ஆகவே பெண்களை இணைத்து தூரநோக்குடனாக அபிவிருத்தியினை நோக்கிப் பயணிப்பதுவே செழிப்பான நாட்டிற்கான அஸ்திவாரம். ஆனால் இன்றைய நூற்றாண்டிலும் கூட பெண்களை அடக்கி ஒடுக்கி வைத்திருப்பதுவும் கூட வளமான அபிவிருத்திக்கு குந்தகமாகவே அமையப்பெறுகின்றது. பெண்ணானவள் புதுமைப் பெண்ணாகக் கிளர்ந்து வந்து நாட்டின் அபிவிருத்தியில் கைக்கோர்க்க வேண்டும் என்று கனவு கண்ட புரட்சிக்கவி,

'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்.
வீட்டினுள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.' என தன் புரட்சிக்கவிதைக்குள் உணர்ச்சி கூட்டிப் பாடியிருப்பது தெட்டத் தெளிவாகப் புலனாகின்றது.

இந்த உலகத்தில் பெண்வர்க்கத்தினை இருபெரும் கூறுகளாக தமது ஊனக் கண்களால்ப் பார்க்கின்றது ஆண்வர்க்கம். முதலாவதாக, பெண்வர்க்கத்தினையே 'அடிமைகளாகப்' பார்க்கின்றது முதலாவது ரக ஆண்வர்க்கம். இரண்டாவதாக, பெண்வர்க்கத்தினையே 'தெய்வத்தின் சிருஷ்டிகளாக' பார்க்கின்றது இரண்டாவது ரக ஆண்வர்க்கம். ஆனால் ஒன்றை மட்டும் உணர மறுக்கின்றது இந்த ஒட்டுமொத்த ஆண்வர்க்கமும் அதாவது பெண்ணைப் பெண்ணாகப் பார்ப்பதற்கு முற்றாக மறுக்கின்றது. ஆதலினாலேயே குடும்ப அளவிலான சர்ச்சைகள், கிராம அளவிலான சர்ச்சைகள், நகர அளவிலான சர்ச்சைகள் எனப் படிப்படியாக வளர்ந்தும் தேசிய அளவிலும் சர்ச்சைகளைக் கொண்டு வந்து நாட்டின் செழிப்பும், நாட்டின் அபிவிருத்தியும் வேரோடு பயனேதுமில்லாமல் வெட்டி வீழ்த்தப்படுகின்றது. ஆகவே செழிப்பு நிறைந்ததும், அபிவிருத்தி அடைந்ததுமான நாட்டை உருவாக்கவேண்டுமெனில், அன்று பிறந்த பெண்ணாக இருக்கட்டும், நாளை பிறக்கும் பெண்ணாக இருக்கட்டும் ஒட்டுமொத்த பெண் வர்க்கத்தின் மனங்களிலே,

'அடுக்களை எரிப்பதும், படுக்கையை விரிப்பதும்
அது பெண்ணின் தொழில் இல்லையே!
தரித்திரம் துடைக்கவும், சரித்திரம் படைக்கவும்
பெண்கள் வருவதில்த் தவறில்லையே!' என்ற வளர்ச்சி

விதை விதைக்கப்பட்டு, அவை நன்றாக உழப்பட்டு செழிப்பான நாட்டையும், அபிவிருத்தி, என்கின்ற உச்ச வெள்ளாமையைப் பெற ஆண்களோடு சேர்ந்து ஒட்டுமொத்த பெண்களும் கைகுலுக்கி, கை உயர்த்தி வருவார்களேயானால் நிச்சயம் செழிப்பு நிறைந்த சமூகம் மலர்ந்து, அபவிருத்தி என்கின்ற கனியும் என்று கூறின் அது மிகை ஆகாது.

அடுத்ததாகப் பார்ப்பின் செழிப்பு நிறைந்த சமூகம் உருவாக்கப்பட்டு நாடு அபிவிருத்தியினை எய்த வேண்டுமெனில் அடிப்படையிலேயே கூட்டுறவுச் சிந்தனை மனித மனங்களிலே விதைக்கப்பட வேண்டும். ஏனெனில் கூட்டுறவின் மூலமாக நாட்டுயர்வினை அடைந்த வரலாறுகள் சரித்திரங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. மக்களை கொத்தடிமைகளாக நடாத்திய ரோஜ் டேல் அரசிற் கெதிரான கண்டன அறிக்கையும், அதில் இருந்து கிளர்ந்தெழுந்த மக்களின் ஒட்டு மொத்தக் கூட்டுணர்வுமே இன்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழிப்பும், அபிவிருத்தியும் அந்நாடுகள் பெற்றிருப்பதற்கான தோற்றப்பாடாக அமைகின்றது. 1844ம் ஆண்டு மண்டியிட்ட 28 நெசவாளர் கூட்டமொன்று அந்தக் கூண்டை உடைத்து தமக்கென தனித்துவமாக உருவாக்கிக் கொண்டு, நாட்டின் அபிவிருத்தியையே முழு மூச்சாக கொண்டு பயணித்த கொள்கை வடிவம் தான் கூட்டுறவே நாட்டுயர்வு என்கின்றதாரக மந்திரம் கூட்டுறவு ஒன்றினால்த்தான் நட்புறவு வளர முடியும். மனிதர்களிடையே நிலவுகின்ற கூட்டுறவுதான் நல்லாட்சிக்கு வித்திடுகின்றது. நாடுகளிடையே நிலவுகின்ற கூட்டுறவுதான் உலக அமைதிக்கே வழிகோலுகின்றது. இதனையே தன் சிந்தனையில் ஏற்றிய மகாத்மா காந்தி அடிகளும், தன்னுடைய 'அஹிம்சை' என்னும் பயணத்தில் கூட்டுறவு என்னும் கருது கோளும் நல்லதொரு விடயமென்றறிந்த காந்தியடிகளின் கமியூனிஸ்கேளும் கூட்டுறவோடே இறுதி வரையிலும் பயணித்தமை. நாட்டின் செழுமைக்கும் கூட்டுறவின் கருதுகோள்கள் மிக மிக இன்றியமையாத ஒன்றெனத் தெளிவாகின்றது. அதனை நன்குணர்ந்த காந்தியடிகள்,

'கூட்டுறவு முற்றிலும் சமூக சேவை
இன்றைய காலத்தில் மனித தேவை' என்று

கூறியிருப்பதும் கூட்டுறவினால் நாட்டுயர்வை எய்த முடியும் என்கின்ற எண்ணப்பாட்டையே காட்டி நிற்கின்றது. 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பது பழமொழியே ஆயினும் எக்காலத்திற்கும் ஒத்துவரக்கூடிய பழமொழியாகும். இந்த கூட்டுறவின் கருதுகோள் எமது தாய்நாடாகிய இலங்கை திருநாட்டிற்கும் ஏற்றத்தான கருதுகோளாகவே அமைகின்றது. பல்லின சமூகங்கள் வாழும் நமது நாட்டில் கூட்டுறவை புரிந்து பல்லின மக்களும் கைகோர்ப்பார்களேயானால் செழிப்பு நிறைந்த நாடு உருவாக்கப்பட்டு நாடு அபிவிருத்தியை எய்தும் என்பதில் துளியளவேனும் சந்தேகமில்லை. அதன் காரணத்தினாலேயே,

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில்
ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு
நன்று இது நேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாலப் பின் நமக்கேது வேண்டும்.' என்று

கூட்டுறவின் பணியினால் நாட்டின் பிணி போகலாம் என்று நினைந்த பாரதி கூட்டுறவினால் வெற்றிகள் பல புரியலாம் என அறுதியிட்டும், உறுதியோடும் கூற முனைந்தார். 'தனி மரம் தோப்பாவதில்லை' எனவே செழிப்பு நிறைந்த வளமான நாடு ஒன்று உருவாக்கப்பட்டு அது அபிவிருத்தி என்கின்ற எண்ணனக்கருவை அடைய சதா பணியும் கருதுகோளான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுக் கருதுகோளை மக்கள் பின் பற்றினால் நிச்சயம் நாடு செழிப்புற்று அபிவிருத்தி என்பது உறுதி செய்யப்பட்ட ஒன்றாக அமையப்பெறும் என்பதில் ஐயமேதுமில்லை.

அடுத்து செழிப்பு நிறைந்த நாட்டினை உருவாக்கவும், நாட்டினை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லவும் ஒரு நாடு தன் நாட்டு மக்களுக்குச் செய்ய வேண்டியதும், நாட்டு மக்கள் தம் நாட்டுக்குச் செய்ய வேண்டியதுமான அளப்பரிய சேவை என்னவென்றால்,

'நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி!
இந்த நாடே இருக்குது தம்பி!
சின்னஞ் சிறு கைகளை நம்பி!
ஒரு சரித்திரம் இருக்கிறது தம்பி!' என்றவாறாக நாளைய சரித்திரத்தின் நாயகர்களும், நாளைய நாட்டின் தலைவர்களும், நாளைய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக மாறவிருக்கும் இன்றைய குழந்தைகளுக்கு, செழிப்பான நாடும், வளமான அபிவிருத்தியும் கிடைக்கப்பெற வேண்டுமெனில் பசுமை நிறைந்த உள்ளங்களில் 'சமாதானத்தின் தேவை' சதா அவர்களுக்கு உரைக்கப்பட்ட வண்ணமாக இருத்தல் வேண்டும். 'மண்வளம் நிறைந்த இடத்தினிலே தரமான விதை விதைக்கப்பட்டது போல மனவளம் நிறைந்த இடத்திலே சமாதானத்திற்கான விதை விதைக்கப்பட வேண்டும்' அவ்வாறு பச்சிளம் பாலகர் மனங்களில் சமாதானமும், சமத்துவமும் குடி கொள்ளுமெனில் போராட்டம், இனஅழிப்பு, கிளர்ச்சிகள், வன்முறைகள், பால் ரீதியான பாகுபாடுகள் அனைத்தும் முற்றாக களையப்பட்டு செழிப்பு நிறைந்த நாடு உருவாகி வளமான அபிவிருத்தி நாட்டுக்கு வரப்படுவதாய் அமையப்பெறும் நாளைய நாட்டின் தலைவர்களாக சிறுவர்களிடம் ஒற்றுமையினையும், சமாதானத்தின் தேவையினையும் பள்ளிப்பராயத்திலேயே, வழிநடாத்தியும், கற்பித்தும் வந்தால் நிச்சயம் வளமான எதிர்காலம் வீட்டிற்கும் உண்டு, இந்த நாட்டிற்கும் உண்டு. பள்ளிப் பராயத்திலேயே,

'யாரு மேல கீறினாலும் ரெத்தம் ஒண்ணுதான்!
ஆக மொத்தம் பிறந்ததெல்லாம பத்தாம்மாசம்தான்!' என்று கற்பிப்பார்களேயானால் இனமென்ற, மொழி என்ற பிரிவினை அவர்களுக்குத் தெரியாமல் போய் நாடு சுபீட்சம் பெறும்

'சுடுகாட்டு எலும்பதனைச் சோதித்துப் பார்த்ததிலே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடநாட்டு எலும்பென்று வந்த எலும்பு இல்லையடி!

தென்னாடு எலும்பென்று தெரிந்த எலும்பு இல்லையடி!

எந்நாட்டு எலும்பென்று எழுதிவைக்கவில்லையடி!' என்று கற்பிப்பார்களே ஆனால் நிற மென்ற, ஜாதி என்ற பிரிவினை அவர்களுக்குத் தெரியாமல் போய் நாடு விருட்சம் போல வளரும். எனவே நடந்தவை நடந்ததாகவே இருக்கட்டும் ஆனால் இனி நடைபெறப் போவது நல்லனவாகவே அமையப் பெறட்டும் என்கின்ற முத்தாய்ப்பான வரிகளுக்கிணங்க, மாணவர்களிடம் கல்வியோடு சமத்துவத்தையும், செய்முறையாக சமாதானத்தையும் கற்பித்தால் நாட்டின் சூன்யம் களையப்பட்டு ஜீவகாருண்யம் தழைத்தோங்கும். இதன் மூலமாக வளமானதும், செழிப்பானதும், அபிவிருத்தி அடைந்ததுமான நாட்டைக் கட்டி எழுப்ப முடியும். இவ்வாறான கற்கை நெறியும், அணுகு முறையும் பின்பற்றப்படுமேயானால் செழிப்பிற்கும், வளத்திற்கும் குந்தகமாக இருக்க வல்ல வறுமையை வேரோடு களையலாம். இந்த வளம் இருக்கின்றது. அதேநேரத்தில் வறுமையும் இருக்கின்றது. அதனாலேயே,

'தேனாறும் பாயுது, செங்கதிரும் சாயுது - ஆனாலும்
மக்கள் வயிறு காயுது.
வசதி படைச்சவன் தரமாட்டான் - அதை
வயிறு பசிச்சவன் விடமாட்டான்' என்ற எண்ணப்பாடு

நடைமுறையின் தோற்றப்பாடோடும் ஒத்தே காணப்படுகிறது. 'தனியொருவனுக்கு உணவில்லையேல் ஜகத்தினை அழித்திடுவோம் என்கின்ற கூற்றிற்கு அமைவாகவே, எண்சாண் உடம்பில் ஒரு சான் வயிறே சத்தியமானதும் உணவை வழங்குவதே சாத்தியமாக்கினோ மெனில் அடிப்படை பிரச்சனைகள் முற்றாக களையப்பட்டு தேசியத்தின் பிரச்சனையும், நாட்டிலேற்படும் சர்ச்சைகளும் அடியோடு வேரறுக்கப்பட்டு செழிப்பு நிறைந்த சமூகம் உருவாகி நாடு அபிவிருத்திப் பாதையில் பயணம் செய்யும் என்பதில் துளியளவேனும் சந்தேகமில்லை. அதற்காக இன்றைய தலைமுறையான குழந்தைகளை, இளைஞர்களை நன்றாக வளப்படுத்த வேண்டும். அடிப்படை அறிவை வழங்குவதில் காட்டும் ஆர்வத்தினைக் காட்டிலும், நாட்டின் அபிவிருத்திக்கு அடிப்படையாக அமையவல்ல சமத்துவக் கல்வியை இளம்பராயத்திலேயே வழங்குவதாக அனைவரும் முயலவேண்டும்! முனைய வேண்டும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நெஞ்சை நிமிர்த்துங்கள் தோழர்களே! தோழிகளே!
ஆற்றும் கடமையை மறக்காதே,
புயல்க் காற்றுக்கும், மழைக்கும் தயங்காதே.
போற்றும் மனிதர்கள் போற்றட்டுமே,

உலகம் நம்மை வாழ்த்தட்டுமே!' என்ற நம் ஒவ்வொரு நாட்டு வைப்பும், தரித்திரம் கலைந்து சரித்திரம் களைந்து சரித்திரம் படைப்பனவாக அமையப் பெறல் வேண்டும். நிச்சயம் மதமென்ற வெறியைக் களைந்தும், பொதுவுடமைச் சித்தாந்தத்துள் நுழைந்தும், பெண்அடிமையைத் துறந்தும், வறுமைப் பிணியை மறந்தும், சமத்துவத்தை ஏற்றியும், கூட்டுறவினைத் தோற்றுவோமெனில் நிச்சயம் செழிப்பு நிறைந்த சமூகம் தோற்றுவிக்கப்பட்டு நாட்டினது அபிவிருத்தியின் அடிப்படை என்று நாமனைவரும் திடசங்கற்பம் பூணுவோம்.

'ஒன்றே செய்யினும் நன்றே செய்வோம்!
நன்றே செய்யினும் அதை இன்றே செய்வோம்!' நாட்டினை செழுமைப்படுத்தி, அபிவிருத்தி அடையச் செய்ய ஆவன செய்ய ஆவன செய்வோம்! ஆகுதி செய்வோம்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006 ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙලේදී (ජ්‍යේෂ්ඨ අංශයේ) රචනා තරඟයෙන් ප්‍රථම ස්ථානය ලැබූ රචනාව

එම්.එම්.එන්. ජූලියට් සිරිවර්ධන

## ශ්‍රව්‍ය දෘශ්‍ය මාධ්‍ය කියවීමේ රුචිය කෙරෙහි ඇති කරන බලපෑම්

සාක්ෂරතාවය අතින් ශ්‍රී ලංකාවට ඉතා වැදගත් තැනක් හිමිවේ. අප රටේ ඒක පුද්ගල ආදායම ඉතා පහළ මට්ටමක පැවතුනද, අකුරු හැකියාව අතින් නම් ජපානය හැර සෙසු ආසියාතික රටවල් අභිබවා යන්නට අපට හැකිවී තිබේ. අකුරු හැකියාවක් තිබේය යනු මෙම පිරිසට අයත්වූ හැම කෙනෙකුටම පොත් පත් කියවීමට හැකි වීමයි.

අප රටේ මහා ගත්කරු ලෙස සම්මානයට ලක්වූ මාර්ටින් වික්‍රමසිංහ මහතා තම "උපන්දා සිට" නම් ආත්ම කථාවෙහි කියා ඇති පරිදි ඔහු බොහෝ දේ දැන උගෙන ගෙන තිබෙන්නේ වැඩි වැඩියෙන් කියවීමෙනි. කියවන්නට හැකි අයට හා ඒ ගැන උනන්දු වන අයට කියවීමට බොහෝ දේ දැන් අප රටෙහි තිබේ. එදා මෙන් නොව මෙදා දිනපතා සතිපතා විවිධ පුවත් සඟරා පළ වෙයි. ඊට අමතරව වසරක් පාසා අළුත් පොත පත කීපයක් හෝ මුද්‍රණයෙන් කල එළි දකී. දිවයින පුරා නාගරික හා ග්‍රාමීය මට්ටමින් පිහිටුවා තිබෙන පුස්තකාල සංඛ්‍යාවද ඉතා විශාලය. සෑම පාසලකම වාගේ පාසල් පුස්තකාලයද ක්‍රියාත්මක වෙයි. මීට අමතරව මුදල් ඇති අයට පොත් පත් මිලට ගෙන කියවා පෞද්ගලික පුස්තකාල ගොඩනගා ගන්නට වුවද අවස්ථාව තිබේ.

කියවීමෙන් පිරුණු මිනිසෙකු විය හැකි බව "ප්‍රැන්සිස් බේකන් සාමිවරයා" පෙන්වා දී තිබේ. ඔහුම සඳහන් කොට ඇති පරිදි අප කියවිය යුත්තේ යම් යම් පොත පත බේරා ගනිමිනි. අතට අහුවුන හැම දෙයක්ම කියවිය යුතු නැත. සමහරවිට ඉතා වැදගත් වූ කරුණක් නම් නැවත නැවත කියවා රස විඳිම හෝ අවබෝධ කර ගැනීම වැදගත් විය හැකිය. දිනපතාම පුරුද්දක් හැටියට පොත්පත් කියවූ විට එය තම දෛනික චර්යාවේම අංගයක්


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

බවට පත්වෙයි. එවිට කියවීමේ රුචිය නිතැතින්ම වැඩි දියුණු වන අතර අලුත් අලුත් දේ කියවන්නට හිත යොමු වෙයි. කියවීමේ පිපාසය ඇති කෙරෙයි. සොය සොයා වුවද කියවන්නට සිත පෙළඹෙයි. මාතෘ භාෂාවෙන් ලියවී ඇති දෙය පමණක් නොව, වෙනත් භාෂාවන්ගෙන් ලියවී ඇති පොත පත ගැනද එවිට අපට අවධානය යොමු කල හැකිය. විශේෂයෙන් ඉංග්‍රීසි වැනි භාෂාවකින් ලියවී තිබෙන කෘති සමුදාය ඉතා විශාලය. එයින් කීපයක් හෝ තෝරා බේරා ගෙන කියවන්නට එබඳු භාෂාවක්ද දැන උගෙන තිබිය යුතුය. මෙසේ දිගින් දිගටම කියවන්නට නැඹුරු වූ විට එවැනි වෙනත් භාෂා දැන ඉගෙන ගන්නටද සිත යොමු වන අතර, එමගින් භාෂා කෞශල්‍යයද සංවර්ධනය වෙයි.

පොත් පත් එක් අතකින් අපගේ හිත මිතුරෝ වෙති. තවත් පැත්තකින් අපට ගුරුහරුකම් දෙන ගුරුවරු වෙති. හිත මිතුරන් ඇසුරු කරන විට අපි විනෝදයෙන් හා සතුටින් යුතුව ඔවුන් සමග පිළිසඳරේ යෙදෙන්නෙමු. ඔවුන් සමග අපගේ සිත් තුල විවිධ ප්‍රශ්ණ ගැටළු අත්දැකීම් ගැන කථාබහ කරන්නෙමු. ඇතැම් පොත් මිතුරන් සේ ක්‍රියා කරනුයේ අපට විවිධ අත්දැකීම් සහ තොරතුරු ඉදිරිපත් කරමිනුයි. ඒ සමගම ඇතැම් පොත් පත් ගුරුවරුන් සේ ක්‍රියා කරනුයේ අපට වැදගත් ගුරුහරුකම් හා උපදේශ ලබාදෙමින් අපගේ ජීවිතය යහමගට යොමු කරන්නට ආධාර වෙමිනුයි. මේ අනුව පොත් පත් කියවීමෙන් සතුට ප්‍රීතිය ආස්වාදය පමණක්ම නොව දැනුම හා බුද්ධිමත් භාවයද අපට නිතැතින්ම උරුම වන්නේය.

පොත පත කියවීම තුළින් ඉතා ගැඹුරුම සිතීම හා සිතීමේ හැකියාවද වර්ධනය වේ. මෙයින් අප තුළ ඇති කියවීමේ රසාස්වාදයද වැඩි වේ. එමෙන්ම අප කියවන කථා පොතේ සඳහන් කතා පුවත පිළිබඳව ඉතා ගැඹුරින් සිතීම හා එයින් ඉතා අලංකාර චිත්ත රූපයක් මවා ගැනීම නැතහොත් සිහිනයක් මවා ගැනීම අපට කල හැකි වේ. අප මවා ගන්නා චිත්ත රූපය තුළ දැහැමි පරිසරයක් හා අලංකාර පරිසරයක් මෙන්ම සිත් ඇද ගන්නා සුළු දර්ශණද මවා ගත හැකිය. මෙයින් අප මනස තුළ ඇති රසාස්වාදය ඉතා ගැඹුරු අර්ථය සොයා එළි පෙහෙලි කරගෙන එය තේරුම් ගැනීම වැනි හැකියාවක් ලැබේ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අතීතයේ ලොවෙන් පිදුම් ලද්දෝ "බහුශ්‍රැතයා"ය. එනම් බොහෝ ඇසූ පිරූ තැන් ඇති තැනැත්තාය. අද මෙන් මුද්‍රිත පොත පත නැති වූ, නැතිනම් හිඟ වූ එකල දැනුම ලබා ගන්නට ක්‍රියාත්මක වූ මාධ්‍යය වූයේ දේශනාවලට සවන් දීමයි. නැතිනම් සාකච්ඡා වලට සවන් දීමයි. භාරතයේ උපනිෂද් යුගය පිළිබඳ මදක් විමසා බැලීමෙන් එම තත්වය අපට සංවාද වල යෙදුනු බව අසන්නට ලැබේ. බෞද්ධ දර්ශණයේ උපතටද එබඳු සංවාද රැකුලක් වූ බව පෙනේ. එදා මෙන් නොව අද ලේඛන කලාව මෙන්ම මුද්‍රණ කලාවද මහත් දියුණුවකට පත්වී තිබේ. මේ නිසාම දිනෙන් දින නව ලොවට එක්වන පොත් පත් සංඛ්‍යා ප්‍රමාණය ඉතා විශාලය. අපගේ ජීවිත කාලය තුලදී මේ හැම දෙයක්ම කියවා නිම කල නොහැකි වුවත් කියවිය යුතු දේ කියවා නොසිටීමට හැකිතාක් වලබලා ගත යුතුය.

අප තුළ ඇති කියවීමේ ඥාණය වැඩි වීමත් සමග ගැඹුරු ආකල්ප අදහස් චිත්‍ර වැනි විශේෂ කුසලතාද මතුවනු ඇත. අප කියවන පොත පත අනුව අපට පැමිණෙන අදහස් විවිධය. එම නිසා ඉතා විශාල වශයෙන් පොත් පත් කියවීම දැඩි ආශාවක් ඇති වුවහොත් එයින් විවිද තරඟාවලි සඳහා සහභාගී වීමටත්, විවිධ රචනා, කවි, නිසඳැස් වැනි දේ ලිවීමටත් අප තුළ අර්ථවත් අදහස් ගැනීමක් සිදුවන්නේ.

මේ වන විට තරුණ පරපුරෙන් සෑහෙන පිරිසක් ගොදුරු කරගෙන සිටින මත්ද්‍රව්‍ය ව්‍යසංගතයෙන් රටේ ළමා පරපුර ආරක්ෂා කර ගැනීමේ කාර්යක්ෂම පිළිවෙලක් රටේ ජනමාධ්‍ය මගින් ක්‍රියාත්මක කල හැකිය. මේ සඳහා විවිධ වැඩසටහන්, නාට්‍ය ආදිය විකාශණය වේ. මෙහිදී පෙරමුණ ගත යුත්තේ රූපවාහිනියයි. මේ හැරුණු විට බාලාපචාරි ක්‍රියාවන්ට ගොදුරු වන ළමයින් එයින් මුදවා ගැනීමේදීද රූපවාහිනිය ශ්‍රේෂ්ඨ මාර්ග උපදේශකයෙකු ලෙසද ක්‍රියාකල හැකිය.

රූපවාහිනිය තුල නරක පැත්තක් තිබුණද එය අප රටේ ළමා පරපුරට ඉටු කරන සේවය සුළු පටු නොවේ. එමෙන්ම ඉගෙනීමට අවශ්‍ය වාද විවාද තරඟ, ප්‍රශ්ණ විචාරාත්මක තරඟ, නාට්‍ය තරඟ, ගීත තරඟ, නැටුම්


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

තරඟ සඳහාද ළමයින් පාසැල් වශයෙන් ඉදිරිපත් කර ගනී. මෙයින් ළමයින්ගේ තරඟකාරීත්වය වැඩි දියුණුවේ. රූපවාහිනිය අද වන විට සැම ගෙදරකම වාගේ තිබෙන ජනමාධ්‍යයකි.

අපගේ ඇසත්, දෙසවනත් එකවිටම ආකර්ෂණය කර ගනිමින් රූපවාහිනී මගින් ප්‍රදර්ශනය කරන ලබන විවිධ වැඩසටහන් මගින් ළමා සිත් සතන් කෙරෙහි අසීමිත බලපෑමක් ඇති කෙරෙන බැව් පෙනේ.

මෙය ශ්‍රව්‍ය දෘශ්‍ය මාධ්‍යයක් වන නිසා පොතට පතට නෙත යොදනවාට වඩා රූපවාහිනියට නෙත සිත යොමු කරන්නටද කුඩා ළමයා වඩාත් කැමතිය. මෙහිදී අප කල යුත්තේ රූපවාහිනියෙන් ළමයා ඈත් කොට තැබීම නොව, ළමයාගේ මානසික සංවර්ධනයට අදාල වන පරිදි රූපවාහිනිය ළමයාට සමීප කිරීමයි. මෙසේ රටේ සංවර්ධනයට අත්‍යවශ්‍ය බුද්ධිමත් ළමා පරපුරක් බිහිකිරීමේ කාර්යයේදී රූපවාහිණිය වඩාත් ප්‍රබල මාධ්‍යයක් සේ ප්‍රයෝජනයට ගන්නට විධිවිධාන යෙදිය යුතුව ඇත.

ගුවන් විදුලියද විශාල සේවයක් ඉටු කර ඇත. විවිධ ගීත එමෙන්ම අප මීට පෙර අසා නොමැති පැරණි ගීතද අද ඇසිය හැකිය. එහිදීද විවිධ අධ්‍යාපනික වැඩසටහන්ද විකාශණය වේ. මෙහිදී පැරණි ගීත නිර්මාණය පද රචනය කළ අය පිලිබඳවද අපට දැනගත හැකිය.

ගුවන් විදුලිය මගින් ලබා ගත හැකි දැනුම කොතෙක් වුවත් එහි නරක පැත්තක්ද ඇත. නූතන සමාජයේ ළමා පරපුර වැඩි වශයෙන් ගුවන් විදුලිය උපයෝගී කර ගනු ලබන්නේ වින්දනයක් ලබාගැනීම සඳහාය. එම වින්දනය නම් නූතන පරපුර විසින් රචිත විකෘති ගීත හා සංගීතයන්ය කිසිඳු රසාස්වාදයක් නොදෙන එහෙත් ඒවා තුළම ජීවත්වීම නූතන ළමා පරපුරෙහි අහිතකර පුරුද්දකි.

විවිධ ළාශ්වාද ගෙන දෙන ගීත තුල ජීවත් වන අයගේ සිත ඉගෙනීමට යොමුවීම ඉතා අඩු වශයෙන් කෙරෙන කාර්යයකි. එමෙන්ම රූපවාහිනියටද



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සිත ඇති දෙසවන ආකර්ශණය කර ගැනීමට සමත් වී ඇත. එම නිසා අද පොත පත කියවීම පිණිස වැඩි පිරිසක් ඉදිරිපත් නොවේ. ළමා සිත් තුල තම ඕනෑ එපාකම් සියල්ල රූපවාහිනිය තුලින් ඉටුකර දෙනු ඇති බව පළවී ඇති සිතුවිල්ලකි. මේ තුලින් කියවීමේ රුචිය ළමයා තුල අඩු වී යන බව අපට පෙනේ.

කියවීම මාධ්‍යයක් කර ගත්තෝ අද ප්‍රවීන උගත්තෝ වෙති. නමුත් ශ්‍රව්‍ය දෘෂ්‍ය මාධ්‍ය අද අපට එරෙහි වී ඇත. අද රූපවාහිනිය නැරඹීම හේතුකොට ගෙන අප මනස තුල සිතිමේ හැකියාව අහිමි වී ගොස් ඇත. වැඩි වශයෙන් පොත පත ඇල්ලීම පවා අප්පිරියාවක් දක්වයි. ගෙදර පොත් පත් නොවීම නිසා හා රූපවාහිනියතුල විවිධ නරක වැඩසටහන් අදවන විට විකාශනය වන නිසා ළමයින්ගේ සිත් තුල වෙනත් හැඟීම් පහළවීම නිසා පොත් කියවීම අඩුවී ඇත. අද ළමයි පුස්තකාලය දෙස බැලීමද පාපයක් ලෙස සිතයි. වැඩි වශයෙන් යම්කිසි දෙයක් අපගේ නිර්මාණයක් ලෙස කර නිමකල නොහැකි තත්වයක් කියවීමේ රුචිය නැති බැවින් වී ඇත. මේ දේ සිදුවී ඇත්තේ අද සමාජ ළමුන් ශ්‍රවශ දෘශ්‍ය මාධය කෙරේ වැඩි අවධානයක් යොමු කර ඇති නිසාය. වැඩි වශයෙන් ළමයින් හුරුවී සිටින්නේ අලුත් තාලයට වැඩ කිරීමටය. එමෙන්ම අමුතු ආකාරයේ ආශ්වාදයක් රසවින්දනයක් දෙන ගීත ඇසීමටද ප්‍රිය කරයි. එම නිසා පොත පත අතට ගෙන එයට නමස්කාර කර එහි ඇති පාඩම් ආශ්‍රිත පැරණි අර්ථවත් ගීත කියවීමට කැමැත්තක් නොදක්වයි. එම නිසා ශ්‍රව්‍ය දෘශ්‍ය මාධ්‍ය කියවීමේ රුචිය කෙරෙහි ඉතා විශාල බලපෑමක් ඇති කරයි.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006 ஆண்டிற்கான கட்டுரைப்போட்டி (கனிஷ்ட பிரிவு)
1ம் இடம் பெற்றது
ஜெட்ரி ஜெராட் லப்பன்

# சூழல் மாசுபடுத்தல் மற்றும் உயிரினங்களின் எதிர்காலம்

நாம் சூழல் என்னும் பதத்தினை இருவகைகளில் நோக்க முடிகிறது பௌதிகச் சூழல், கலாசாரச் சூழல் என்பனவே அவையாகும். பௌதிகச் சூழல் எனபது நீர், வளிமண்டலம், மண், தாவரங்கள், ஏனைய உயிரினங்களை உள்ளடக்கிய சூழலே பௌதிகச் சூழலாகும். அதாவது கலாசாரச் சூழல் என்பது மனிதனால் தனது தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் உருவாக்கப்பட்டவைகளே கலாசாரச் சூழல் ஆகும். அதாவது வீதிகள், கட்டடங்கள், பயிர்கள், சமயம், கலை நிர்மாணங்கள் போன்ற காரணிகள் கலாசாரச் சூழலாகும். மேற்கூறப்பட்ட இருவகைச் சூழல்களும் மாசடையும் நிலை தற்போது காணப்படுகின்றது. இதனால் உயிரினங்களின் எதிர்காலம் தற்போது கேள்விக்குறியாயுள்ளது.

சூழல் மாசுபடுதல் என்பதை நாம் விபரித்தால், மனிதன் தனது நடவடிக்கைகளினால் சூழலின் சமநிலைக்கு புறம்பாக சூழலினுல் எதனையாவது புகுத்தி அதனால் சூழலின் சமநிலை குழம்புதல் சூழல் மாசடைதலாகும். இதன் காரணமாக சூழல் தனது இயல்பான நிலையிலிருந்து மாற்றமடைந்து புவியில்வாழும் அங்கிகளுக்கு பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. சூழல் மாசடைதலை நாம் பொதுவாக நான்கு கோணங்களில் விபரிக்க முடியும். நீர் மாசுபடுதல், நிலம் மாசுபடுதல், வளிமாசுபடுத்தல், ஒலிமாசுபடுத்தல், என்பனவே அவையாகும். சூழல் மாசுபடுவதற்கு முற்றும் முழுதாகவே பொருப்பேற்கவேண்டியவன் மனிதனே ஆவான். பொதுவாக மனிதன் சூழலை மாசுபடுத்தும் முறைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். சனத்தொகையானது நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே செல்லும் ஒரு காரணியாகக் காணப்படுகின்றது. சனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க தேவைகளும் அமிகரித்துக்கொண்டே செல்கின்றன. இத்தேவைகளை நிறைவு செய்ய பொருட்களும் சேவைகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படுகின்றன. இப் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்ய வளங்கள் தேவை இதனால் மனிதன் வளங்களை சூழலிலிருந்து வரையறையின்றி நுகர்வதால் சூழல் தன் இயல்பிலிருந்து மாறி சூழல் மாசுபடுகின்றது. பொலிதீன், இறப்பர், பிளாஸ்டிக், உலோகங்கள் போன்றவற்றின் பாவனையால் சூழல் பெருமளவில் மாசுபடுகின்றது. இதுதவிர அகழ்வுக் கைத்தொழில்கள், தொழிற்சாலை, நகர்நிர்மாணம், கிருமிநாசினிகள், டி.டி.ரி என்பவற்றின் உபயோகத்தால் சூழல் பெருமளவில் மாசுபடுகின்றது. சூழல் மாசுபடுத்தலுக்கு இலங்கை விதிவிலக்கானதல்ல, இலங்கையிலும் சூழல் மாசுபடுத்தும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதாவது அகழ்வுக் கைத்தொழில்கள், தென்மேல் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இரத்தினக்கல் அகழ்வுகள் மற்றும் ஏனைய கனிய வளங்களின் அகழ்வுகளால் சூழல் பெரும்பாலும் மாசுறுகின்றது. வளங்கள் அழிக்கப்படுதல் தென்பகுதிக் கடற்கரையோரங்களில் சுண்ணாம்புக்கல் அகழ்தல் போன்றவையாகும்.

நீரானது பலவழிகலும் மாசடைகின்றது சாயங்கள், அமிலங்கள், விவசாய இரசாயனப் பொருட்கள் நீருடன் கலப்பதனால் நீர் மாசுபடுகின்றது. இரசாயனங்கள் உற்பத்தி செய்யப்படும் போது அவற்றினால் கிடைக்கும் கழிவுப் பொருட்கள் நீருடன் கலக்கின்றது. இதனால் பல நோய்கள் ஏற்படுகின்றது. இத்துடன் எண்ணெய்க் கப்பல்கள் கடலில் விபத்துக்களை எதிர்நோக்கும் போது கடல் நீருடன் எண்ணெய் கலக்கப்படுகின்றது. இதனால் நீர்வாழ் உயிரினங்கள் பெருமளவில் பாதிப்பினை எதிர்நோக்குகின்றன. திண்மக்கழிவுகள், சூடான திரவங்கள் போன்றவை நீர் நிலைகளில் கலப்பதனால் ஏற்படும் விளைவுகளுக்கு மனிதனும் ஏனைய அங்கிகளும் முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. அத்துடன் இறந்த அங்கிகளின் உடல்கள் நீருடன் சேர்வதனாலும் நீரில் குப்பைகளை போடுவதனாலும் மிருகங்களை நீர் நிலைகளில் கழுவுவதனாலும் மீன்களுக்காக டைனமோ அடிப்பதாலும் திட்டமிடப்படாத இறால்ப் பண்ணைகளாலும் நீரானது மாசடைகின்றது. மனிதன் நீரை மாசுபடுத்திய தகவல்கள் முக்கியமானவையாக பின்வருவன காணப்படுகின்றன. 50000 தொன் எணணெய் நீருடன் கலக்கும் வண்ணம் ஏற்பட்ட வடகடலில் தோரோ கன்யன் என்னும் எண்ணெய் தாங்கிக் கப்பலின் விபத்து, ஹிணுப்பிட்டி உரத்தொழிற்சாலையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலக்கீழ் நீர் மாசடைதமை, 1972 இல் ஜப்பானில் ஏற்பட்ட மின்மாற்ற நோய், தேம்ஸ் நதி, களனிகங்கை, வடஅமெரிக்காவின் சில ஏரிகள் மாசடைதமை, 1988 இல் சப்புகஸ்கந்த எண்ணெய்த் தொழிற்சாலையின் எண்ணெய்க் குழாயில் கசிந்த எண்ணெய் நீரை மாசுபடுத்தியமை நாம் குறிப்பிடமுடியும்.

மனிதன் தனது செயற்பாடுகளினால் வளியையும் பல வழிகளிலும் நாளுக்கு நாள் மாசுபடுத்துகிறான். வளிக்கோளம் சிதைவடைவதால் வளி அசுத்தமடைந்து தன் இயல்பிலிருந்து மாற்றமடைதல் வளி மாசடைதலாகும். சுத்தமான சுவாசத்திற்கு உகந்த வளியைத் தருவதில் தாவரங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. மனிதன் என்னும் திட்டமிடுபவன் தனது அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக காடுகளை வரையறையின்றி அழிப்பதனால் வளிமண்டலம் மாசடைகின்றது. அதாவது தாவரங்கள் காபனீரொட்சைட்டு வளியை தனது ஒளித்தொகுப்பு செயற்பாட்டுக்கு பயன்படுத்தி விளைபொருளாக ஒட்சிசன் வளியை சூழலுக்குத் தருகின்றது. இதன் காரணமாக சூழல் என்பதில் தாவரங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. ஆனால் நாம் தாவரங்களை அழிப்பதனால் புவியில் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிப்பதால் புவியின் வெப்பநிலை அதிகரிக்கின்றது. இது உயிரினங்களுக்கு அசௌகரியமான நிலையினை ஏற்படுத்துகின்றது. அணுப்பரிசோதனைகள், யுத்த ஆயுதங்கள் போன்றவற்றின் உபயோகத்தினால் விளைவிக்கப்படும் நச்சு வாயுக்களினால் வளிமண்டலம் மாசடைகின்றது. குளிரூட்டிகள், வாசனைத்திரவியங்கள் போன்றவற்றினால் வெளியிடப்படும் குளோரோ புளோரோ காபன்வாயு (CFC) ஆல் வளிமாசடைந்து ஓசோன் படையில் துவாரம் ஏற்படக்கூடிய நிலையினைத் தோற்றுவிக்கின்றது. இதனால் புவியின் வெப்பநிலை அதிகரிக்கின்றது. போக்குவரத்து தொழிற்பாட்டுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களினால் சூழல் மாசடைகின்றது. அதாவது அவற்றினால் வெளிவிடப்படும் புகைப்பணி, நச்சுவாயுக்கள், போன்றவற்றால் பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. சுப்பசொனிக் விமானங்கள், ரொக்கட்களிலிருந்து வெளிவரும் நச்சு வாயுக்கள் அபாயகரமான நிலையை தோற்றுவிக்கின்றன.

நிலம் மாசுபடுதலில் மனிதன் பெரும் பங்கினை வகிக்கின்றான். கைத்தொழில் நடவடிக்கையாலும், விவசாயச்செயற்பாடுகளினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய பல நடவடிக்கைகளாலும் நிலம் தனது தூய்மையை இழந்து தற்போது மாசடைந்த நிலையில் காணப்படுகிறது. நிலம் மாசடையும் வழிககளிலும் மனிதன் என்னும் அழிக்கும் வல்லயுடையவன் பெரும் பங்கு வகிக்கிறான். அதாவது விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதற்காக பயன்படும் கிருமிநாசினிகள், களை, பங்கசுகொல்லிகள், என்பவற்றின் மூலமாக நிலம் மாசு அடைகின்றது. பொலித்தீன் உறைகள், கொள்கலன்கள், உலோகப்பொருட்கள், பிலாஸ்டிக் பொருட்கள் போன்றவை நிலத்தில் சேர்வதால் நிலம் பாதிக்கப்படுகிறது. நிலத்தில் ஏற்படுத்தப்படும் அணுப்பரிசோதனைகளால் நிலம் பாதிக்கப்படுகிறது. அதாவது இவ்வாறான அணுக்கதிர் வீச்சுக்களினால் அந்நிலமானது மனிதர்களின் வாழ்க்கைக்கோ, அல்லது தாவரங்களின் நிலைத்தலிற்கோ உதவாது போகின்றது. அத்தோடு காடுகளை அழிப்பதனாலும், தொழிற்சாலைக் கழிவுகளை நிலத்தில் போடுவதாலும் அகழ்வுக்கைத்தொழில்களாலும் நிலம் மாசடைகிறது. இது தவிர குப்பை கூழங்களை நிலத்தில் போடுவதாலும் அபிவிருத்தித் திட்டங்களாலும் சேனைப் பயிர்ச் செய்கையாலும் நிலம் மாசுபடுத்தப்படுகின்றது. நிலத்தில் மலசலம் கழிப்பதனாலும் கட்டுப்பாடற்ற முறையில் நிலத்தில் விலங்குகளை மேய்ச்சலுக்கு விடுவதனாலும் போர் நடவடிக்கைகளாலும் நிலம் மாசுறுகின்றது. இச்செயற்பாடுகள் நிலத்தின் தூய்மையை மாற்றுவனவாக காணப்படுகின்றன.

மனிதனானவன் நிலத்தை மாசுபடுத்திய சந்தர்பங்களை காலச்சுவடுகள் இன்னும் எங்களுக்கு நினைவுறுத்திக் கொண்டிருக்கின்றன. அவை பின்வருமாறு 2 ம் உலக மகாயுத்தத்தில் அமெரிக்காவால் யப்பானுக்கு போடப்பட்ட அணுகுண்டுகள் இன்னும் அதன் விளைவை ஏற்படுத்திய வண்ணம் காணப்படுகின்றன. அதாவது ஹிரோசிமா, நாகசாகி நகரங்கள் மீது வீசப்பட்ட அணுகுண்டால் உயிர்கள், தாவரங்கள் மற்றும் ஏனைய வளங்கள் அழிந்தன. சேர்னோபின் அணுஉலைக் கழிவு (1986) வியட்நாம் யுத்தத்தால் களைக்கொல்லிகள் போர்க்கருவிகளாக பயன்படுத்தப்பட்டன. டி.டி.ரி கிருமிநாசினி கண்டு பிடிக்கப்பட்டமைக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டமை. இதன் மூலம் டி.டி.ரி பயன்பாடு மூலம் மண் மாசுறத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தவிர மண் மாசடைதலில் கடலரிப்பு முக்கிய இடத்தைப் பெருகின்றது. கரையோரங்களில் கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக அதாவது சுண்ணாம்பு உற்பத்தி என்பனவற்றுக்காக முருகைக்கற்பாறைகள் அதிகளவில் அகழப்படுவதனால் கடல் அலையின் வேகம் கூடி கரையோரம் கடல் நீரினால் அரிக்கப்படுகின்றது. இதனால் நிலப்பரப்பு குறைவடையக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. அதனால் கடல் அலையின் வேகம் கூடினால் கடல்நீர் ஊருக்குள் வந்துடைக் கூடிய அபாயம் காணப்படுகின்றது. இவ்வாறான பாதக நிலைமைக்கு காரண கர்த்தா அறிவாற்றல் மிக்க செயல்திறன் மிக்க மனிதனே.

இன்றைய இக்கால கட்டத்தில் ஒலி மாசடைதல் இன்று பல்வேறு பட்டவர்களின் கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு ஒரு பெரும் பிரச்சனையாக மாற்றமடைந்துள்ளது. இதற்கு காரணகர்த்தாவாக காணப்படுபவன் மனிதனே ஒலி மாசடைதலானது அங்கிகளுக்கு ஒரு அசெகரியமான நிலையினைத் தோற்றவிக்கின்றது. ஒவ்வோர் அங்கிக்கும் ஒரு குறிப்பிட்ட கேள்தகவு எல்லை காணப்படுகிறது. இது எல்லை மீறிச் செல்லுகின்ற போது அது அங்கிகளுக்கு பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. கல்லுடைக்க டைனமோக்களை பயன்படுத்துவதன் மூலம் வெளிப்படும் அதிக ஒலி பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. தொழிற்சாலைகளின் உற்பத்திப் தொழிற்பாடுகளினால் வெளிப்படும் ஒலியும் வீதியில் செல்லுகின்ற வாகனங்களினால் ஏற்படுத்தப்படும் ஒலியும் பாரிய அசௌகரியத்தை அங்கிகளுக்கு ஏற்படுகின்றன. இவை தவிர விமானங்கள் போன்றவற்றாலும் விழாக்காலங்களிலும் விசேடவைபவங்களிலும் பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிகள் மூலம் ஏற்படும் ஒலியாலும், புகையிரதங்களாலும் ஒலி மாசடைதல் துரிதப்படுத்தப்படுகின்றது. இதனால் மனிதனும் ஏனைய அங்கிகளும் பாதிப்பிற்குட்படுகின்றன. யுத்தங்கள் ஒலி மாசடைதலில் பெரும் பங்கினை ஆற்றுகின்றன. அணுகுண்டுகளால் மேற்கொள்ளப்படும் ஒலிகள் பெருமளவிலான மாசுக்கள் இச் சூழலிற்கு ஏற்படுத்தப்படுகின்றது.

இவ்வாறான பல காரணிகளால் இன்றைய சூழலானது மாசடைந்த வண்ணம் காணப்படுகின்றது. எந்தவோரு உயிரினமும் தமக்கு உரிய நாளை எனும் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைப்பாடு உடையவனாக காணப்படுகின்றது. அந்தவகையில் இவ்வாறான சூழற் பிரச்சனைகளால் நாளை எனும் எதிர்காலம் கேள்விக்குறியாயுள்ளது. சூழலியலாளர்கள் அவ்வப்போது எதிர்காலத்தை எதிர்வுகூறிக் கூறும் சில செய்திகள் எம்மை திடுக்கிடவைக்கின்றன. மனிதன் எவ்வளவிற்கு எவ்வளவு தூரம் சூழலை வருத்துகின்றானே அவ்வளவு விரைவில் சூழலால் அவன் வருத்தப்படுவான். அந்தவகையிலே நாம் எமது எதிர்காலத்தைப் பற்றி நோக்குவோம். குளிரூட்டிகளாலும் வாசனைத் திரவியங்களாலும் வளிமண்டலத்திற்கு வெளிவிடப்படுகின்றன. குளோரோ புலோரோ காபன் (CFC) மற்றும் ஏனைய தீய வாயுக்களினால் வளிமண்டலம் மாசுபடுத்தப்படுவது நாம் அறிந்ததே! ஆயினும் இவ்வாயுக்களால் மாற்றரிப்பெல்லைக்கு அடுத்ததாக காணப்படும் ஓசோன் படையில் துவாரங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்நிலை மேலும் தொடருமானால் துவாரங்கள் பெரிதாவதுடன் புதிதாக துவாரங்கள் ஏற்படலாம் என்னும் கருத்துத் தெரிவிக்கின்றனர். சூரியனிலிருந்து வெளிவரும் வெப்பத்தில் பெரும்பகுதியை புவிக்கு வரவிடாமல் தடுப்பதில் ஓசோன்படை பெரும் பங்களிப்பினை ஆற்றுகின்றது. ஆனால் துவாரங்கள் ஏற்பட்டால் பூமிக்கு நேரடியாக சூரிய வெப்பம் வருவதால் புகையினுடைய வெப்பநிலை கூடும் இந்நிலையானது மனிதனுக்கோ அல்லது ஏனைய உயிரினங்களுக்கோ தாவரங்களுக்கோ ஏற்றதல்ல. மேலும் இதனுடைய இன்னொரு அபாயகரமான நிலையாக வெப்பநிலை அதிகரிப்பதால் புவியின் துருவப்பகுதிகளில் காணப்படும் பனிக்கட்டிகள் உருகும். உருகிய பனிகட்டிகளால் கிடைக்கும் நீரானது கடலுடன் சேர்ந்து கடலின் நீர்மட்டமானது அதிகரிக்கும். இவ்வாறு கடலின் நீர்மட்டம் அதிகரிப்பதனால் கடலின் பரப்பளவு அதிகரிப்புடன் இலங்கை உட்பட்ட சிறிய தீவுகள் கடலில் மூழ்கிவிடக்கூடிய நிலைகாணப்படும். இந்நிலையானது மனிதர்களின் கைத்தொழில் விருத்திக்காக காடுகள் வெட்டப்படுவதாலும் குளிரூட்டிகள் பயன்படுத்தப்படுவதாலுமே ஏற்படுகின்றது.

மனிதன் இவ்வாறான செயற்பாடுகளால் சூழலை மாசுறச் செய்தது. மட்டுமல்லாமல் விலங்குகளை அளவிற்குஅதிகமாக வேட்டையாடி அவற்றின் இனமறிந்து போகம் வண்மைலுர் மறைமுகமான தாக்கத்தை சூழலின் மீது ஏற்படுத்துகின்றான். இனங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்து போவதால் உணவுச்சங்கிலிகளும் உணவு வலைகலும் பாதிப்பிற்குள்ளாவதால் சூழல் சமநிலை குலைகின்றது. உலகில் அழிந்து போகும் ஆபத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் அங்கிகள் பற்றிய தகவல்கள் அடங்கிய நூல் ஒன்று இயற்கைக் காப்பிற்கான சர்வதேச சங்கத்தினால் வெளியிடப்படுக்கின்றது. அங்கு கூறுவதன் படி ஏற்கனவே அழிந்து போயுள்ள அங்கிகள் டைசோனர்கள், கம்பனியானைகள், டோடோபறவைகள், மரப்பன்னங்கள் போன்றவை அமிந்து போகும் ஆபத்தை எதிர்நோக்குகின்ற அங்கி இனங்களாக நிலத்திமிங்கிலம் கடலாமை யானை, புழுகுபூனை, டொல்பின் போன்றவையும் அழிந்து போகும் ஆபத்தை குறைந்த அளவை எதிர்நோக்கும் இனமாக மடுப்பன்னம் எம்மை தாவர இனம் காணப்படுகின்றது. இவற்றுக்கெல்லாம் காரணம் எதிர்காலத்தை பற்றி சிந்திக்காத மனிதனே எனவே நாம் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும் போது அதாவது 2300 ம் ஆண்டளவில் மேற்கூறப்பட்ட விலங்கினங்கள் காணப்படுமா என்பதும் ஓர் ஐயப்பாடு கொண்டதாகவே காணப்படுகின்றது. எனது எதிர்கால சந்ததினருக்கு மேற்கூறப்பட்ட விலங்குகினங்கள் காணப்படுமா என்பது ஓர் ஐயப்பாடு கொண்டதாகவே காணப்படுகின்றது. எமது எதிர் கால சந்ததியினருக்கு மேற்கூறப்பட்ட விலங்குகளை காட்டுவதற்கு நாம் படங்களை கீறியே காட்ட வேண்டும். நாம் அளவுக்கு அதிகமாக வேட்டையாடியதால் பாதிக்கப்படுவது எமது எதிர்காலச் சூழ்நிலையும் அதில் வாழப்போகின்ற எதிர்காலச் சந்ததியினருமேயாகும் இவ்வாறே காடுகளை வெட்டுவதனால் எதிர்காலத்தில் மரங்கள் அல்லாத நிலை கூட ஏற்படக்கூடும். சில வேளை மரங்கள் வாழ்வதற்கு சூழ்நிலை அற்றுபோய் மரங்களை "அருங்காட்சியகத்தில் அதிகளவு செலவு செய்து காப்பாற்றி வருவார்களோ தெரியவில்லை! எமது எதிர்காலத்தினர் மரங்களை பார்க்க அருங்காட்சியத்திற்கு செல்ல வேண்டிய நிலை கூட ஏற்படக்கூடும். சோலைவனமான இப்பூமி எதிர்காலத்தில் பாலைவனமாகி விடக்கூடும்.

மனிதனானவன் தற்போது நீரை அதிகளவில் மாசுப்படுத்தி வருகின்றான். அதிலும் தற்போது நிலத்தடி நீரானது அதிகளவில் உறிஞ்சப்பட்டு வருகின்ற வேளை நிலத்தடி நீரானது மாசுப்பட்டும் காணப்படுகின்றது. சிலர், 3ம் உலக யுத்தமானது உலகில் நீருக்காகவே தோன்றலாம் என எதிர்வு கூறுகின்றனர். அக்காலத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவசப் பண்டமாயிருந்த நீர் தற்போது பொருளாதாரப் பண்டமாக மாறிவிட்டது இனி???. வளியும் சிலிண்டர்களில் அடைக்கப்பட்டு அதே நிலையை பெற்று விட்டது. இனி??? தற்போதைய நிலையில் மாசடைந்த வளியே பெருமளவில் காணப்படுகிறது. இம் மாசடைந்த வளியினை சுவாசித்தால் எதிர்காலத்திலோ, இக்காலத்திலோ புற்றுநோய், இருதயநோய், கண்பார்வை பாதிப்பு, தொண்டைநோய், சுவாசப்பை நோய் முதலியன ஏற்படும். இவ்வாறான நோய்கள் மனிதனை பலவீனமாக்கிவிடும்.

இவ்வாறான நிலைகள் எமது எதிர் காலத்தில் நேரவிடாமல் தடுப்பது எம்கையிலேயே உள்ளது. நீர் மாசடைதலை தடுப்பதற்காக சாயங்கள், அமிலங்கள், விவசாய இரசாயன பொருட்கள் போன்றவற்றை நீருடன் அகற்றாது வேறுவழிகளில் அதனை அகற்றுதல். திண்மக் கழிவுகள் சூடான நீர் போன்றவற்றை நீருடன் கலக்கப்படுவதனை தடைசெய்தல். மிருகங்களை நீர் நிலைகளில் கழுவுவதனையும், மீன்களுக்கு டைனமோ அடிப்பதையும் சட்டநடவடிக்கை மூலம் தடை செய்தல். திட்ட மிட்டு நீரை பயன்படுத்துவதுடன் நீரைக் கொண்டு திட்டமிட்ட கைத்தொழில்களை மேற்கொள்ளுதல் போன்றவற்றை மேற்கொள்ளவேண்டும். அத்துடன் கைத்தொழில் கழிவுகளை தக்க முறையில் மருந்திட்டு பதனாக்கிய பின் நீருடன் சேரவிடல். குப்பை கூழங்களை (உக்கக் கூடிய) குழிகளில் தோண்டி புதைத்து நீருடன் சேர்வதனை தடைசெய்தல் வேண்டும்.

வளி மாசடைதலைத் தடுப்பதற்காக நாம் பல பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். அதாவது காடுகளை வெட்டுவதனை தடைசெய்தல் மற்றும் மரவளர்ப்பு நடவடிக்கையை துரிதப்படுத்தல். அணுப்பரிசோதனையை இயன்றளவு குறைத்தல், குளிரூட்டிகள், வாசனைத்திரவியங்களின் பாவனையை இயன்றளவு தடைசெய்தல். அல்லது புதியரக குளிரூட்டிகள் அதாவது CFC வாயுவை வெளியிடாத குளிரூட்டிகள் போன்றவற்றையும் குறைந்தளவில் புகையை கக்கக்கூடிய இயந்திரங்களையும் அறிமுகப்படுத்தல் வேண்டும். தொழிற்சாலைகள் புதிய ரக இயந்திரங்களை பயன்படுத்தி வெளிவரும் புகையை கட்டுப்படுத்த வேண்டும். அத்துடன் புகைபோக்கிகளை உயரமாக அமைத்தல் வேண்டும். சுப்பசொனிக் விமானங்கள் மற்றும் ரொக்கட் போன்றவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனையை குறைத்துக் கொண்டால் வளி மாசடைதலை இலகுவாக்கிக் கொள்ளலாம். அத்துடன் சட்டங்கள் மூலம் புகைக்கும் வாகனங்களை தடைசெய்தல், அனல் மின்சார உற்பத்தியை குறைத்துக் கொள்வதன் மூலமும் சூரிய சக்தியை பயன்படுத்தி வலு உற்பத்தியை அதிகரித்தால் சிறப்பான வளிமண்டலத்தை நாம் பேண முடியும்.

இத்துடன் நின்றுவிடாது நிலத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளையும் நாம் கைக்கொள்ள வேண்டும். கிருமி நாசினிகள் பங்கசுக் கொல்லிகள் போன்றவற்றின் பாவனையை குறைப்பதன் மூலமும் பொலித்தின் உறைகள், கொள்கலன்கள், உலோகப்பொருட்கள், பிலாஸ்டிக் பொருட்கள் போன்றவற்றை நிலத்தில் சேர்வதை தடைசெய்வதன் மூலமும் நாம் நிலத்தை பாதுகாக்க முடியும். அணுப்பரிசோதனையை கட்டுப்படுத்தல், காடுகளை வளத்தல், தொழிற்சாலைக் கழிவுகள் நிலத்தில் சேர்வதைக் குறைப்பதன் மூலமும், அகழ்வுக் கைத்தொழில்களை திட்டமிட்டு வரையறையுடன் பயன்படுத்துவதன் மூலம் நிலம் மாசடைதலை இயன்றளவு குறைத்துக் கொள்ளலாம். மேலும் அபிவிருத்தித் திட்டங்களை வறையரையுடன் நடத்துதல், சேனைப் பயர்ச் செய்கையை குறைத்தல் போன்றவற்றால் நாம் நிலத்தை பாதுகாத்துக் கொள்ளமுடியும். இவை தவிர கடற்கரையோரங்களில் முருகைக் கற்பாறைகளை அகழ்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாலும் கரையோரங்களில் நீர்த்தாவரங்களை நடுவதாலும் கரையோர அதிகரிப்பை குறைத்துக் கொள்ளலாம்.

ஒலி மாசடைதல் என்னும் பிரச்சனையை ஓரளவாவது குறைப்பதற்காக குறைந்தளவு ஒலியை வெளிவிடும் இயந்திரங்களை பயன்படுத்தல், குறையாத சத்தத்தை வெளிவிடும் வாகனங்களை உற்பத்தி செய்தல், புதிய ரக விமானங்களை அறிமுகம் செய்தல், விழாக்காலங்களில் ஒலிபெருக்கிகளின் பாவனையை இயன்றளவு குறைத்தல், யுத்தங்களின் போது குண்டுகள், அணுகுண்டுகள் போன்றவற்றின் பாவனையை இயன்றளவு குறைத்தல் போன்றவற்றையும் சூழலில் ஏதேனும் அதிக சத்தத்தை ஏற்படுத்தும் உபகரணங்கள் காணப்பட்டால் அவற்றை வைத்திருப்போருக்கு எதிராக சட்டநடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும் ஒலிமாசடைதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயன்றளவு குறைக்கலாம். மேலும் சத்தம் அதிகமான இடங்களில் காதுக்கவசங்களை பயன்படுத்துவதன் மூலமும் ஒலி மாசடைதலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளவும் முடியும்.

பொதுவாக சூழலை பாதுகாக்க தொழிற்சாலைகளில் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு வரி அறவிடல், சட்ட நடவடிக்கைகள் மூலம் சூழலைப் பாதுகாத்தல், கலாச்சாரம் மாசுறுவதை தடுப்பதற்காக சட்டங்களை இயற்றுதல், பொது மக்களின் மனநிலையில் சூழலைப் பாதுகாப்பது பற்றி அறிவினை ஊட்டல். சூழல் மாசுறுதலைத் தடுப்பவர்பளுக்கு சலுகைகளை வழங்குதல் மூலம் நாம் சூழல் மாசுறுதலை தடுக்கலாம்.

சூழலை பாதுகாக்கச் சட்டங்களை விதித்தல் முக்கியத்துவம் உடையதாக காணப்படுகின்றது. இலங்கையில் சூழல் பாதுபாப்பு தொடர்பாக நடைமுறையில் உள்ள சட்டங்களாக பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம். சூழற்பாதுகாப்புச் சட்டம், தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டம், கடற்கரை பாதுகாப்புச்சட்டம், வன பரிபாலன கட்டளைச்சட்டம், வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை தவிர சர்வதேச ரீதியில் சூழல் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டு வருகின்றன. சூழல் பாதுகாப்பு தொடர்பான மாநாடுகளும் நடத்தப்பட்ட வருகின்றன. அவற்றுள் 'புவி மாநாடுகள்' முக்கியத்துவம் உடையதாக காணப்படுகின்றன. இம் மாநாடுகள் ரியோபுஜெனிரோ, மஞ்செல்டர் போன்ற இடங்களிலும் நடத்தப்பட்டன. இவற்றின் மூலம் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எவ்வளவு தான் சூழற் பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்யப்பட்டு வந்தாலும் ஒவ்வொருவனும் தனது சூழல், தனது எதிர்காலச் சந்ததிக்குரிய சுற்றாடல் என்பதை மறந்து செயற்பட்டால் இத்திட்டங்கள் தோல்வியடைந்துவிடும். எனவே ஒவ்வொருவரும் தமது சூழல் என்ற கருத்துடன் சூழலைப் பாதுகாத்தால் இவ்வுலகை பெரும் அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

**சூழல் காக்க கரம் கோர்ப்போம்!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006 ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙලේ (කනිෂ්ඨ අංශයේ) රචනා තරඟයෙන් ප්‍රථම ස්ථානය ලැබූ රචනාව
මෙත් අනූපම බෝගහවත්ත

# පරිසර දූෂණය හා සත්ත්ව සංහතියේ අනාගතය

"පරිසරය ජාලයක් නම්, මිනිසා යනු එහි නිමැවුම්කරුවා නොව, එහි නූල් පොටක් පමණයි"

යන රතු ඉන්දියානු නායක සියැටල්ගේ එම විදග්ධ ප්‍රකාශයෙන්ම අප හට පරිසරය යනු කුමක්දැයි මනාව පසක් වේ. මානවයා, සියළුම සත්ත්වයන් හා තුරුලිය ඇතුළු මෙදියත ජනිත වී ඇති සියල්ලදෑ මනා අන්‍යෝන්‍ය සබඳතාවයකින් බැඳී පවතී. ගසට පොත්ත සේ සත්ත්වයා හා පරිසරය එකිනෙකට වෙන්කල නොහැකි ලෙස වෙලී ඇත්තේ සත්ත්වයා තමාගේ සියළු අවශ්‍යතාවයන් සපුරා ගන්නේ කරුණා සාගර වූ පරිසර මාතාවගෙන් නිසාවෙනි.

මිහිතල මාතාව මත දෙපයින් නැගී සිටින සත්ත්ව ගණයාට හා සදාහරිත වෘක්ෂලතාවන්ට තම ජීවනාලිය බඳුවූ ජලය යනු පරිසර මාතාවගේ දූ දරුවන්ගෙන් එක් අගනා වටිනා දරුවෙකි. සත්ත්ව සංහතියට හා තුරුලිය හට තම ජීවය පවත්වා ගැනීම සඳහාත්, මිනිසාට වගා කටයුතු කිරීමටත්, තම දෛනික අවශ්‍යතා ඉටුකර ගැනීමටත් මෙම ජලය ඉවහල් වේ.

තවද, දසතින් හමා එන මදනල අපගේ සිත හා කය සන්තර්පනය කර ගැනීම සඳහා කෙතරම් පිටිවහලක් වේද? ශාකවල ප්‍රභාසංස්ලේෂණ ක්‍රියාවලියෙහි අතුරු ඵලයක් ලෙස නිපදවෙන $O_2$ (ඔක්සිජන්) වායුව සත්ත්ව සංහතියේ පණනල ගැටගසා ගැනීම සඳහා අතිශයින්ම ඉවහල් වේ.

එහෙත් වත්මන් ජනයා කෑ පතට මලපහ කරන සූනඛයන් මෙන් පරිසරයෙන්ම ප්‍රයෝජන ලබාගෙන පරිසරය දූෂණය කරනුයේ අති කුරිරු ලෙසය. මිනිසා ඇතුළු ලෝ සතගේ ජීවනාලිය වන ජල මාතාව ගෙන් මිනිසා හට හැකි වන්නේ (ප්‍රයෝජනය සඳහා) 0.003% වැනි සුළු ප්‍රමාණයකි. මිනිසා මිහිතලය මත සම්භවය වූ දා සිට අද තෙක්ම යැපෙනුයේ ජල



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මාතාව මගිනි. සිරිලක මිරිදිය ජල ප්‍රභවය වනුයේ වර්ෂාව වේ. වර්ෂාව ඇතිවීමට බලපාන ප්‍රධාන අංග වනුයේ උත්ස්වේදනය හා මිරිදිය සංචිත ස්ථාන වලින් ජලය වාෂ්ප වීමයි. වනාහරණය නිසා වර්ෂා සමයන්හිදී මඩ සහිත ජල ගැලීම් ඇතිවී මිරිදිය සංචිත ස්ථානයන් හට ගමන් කිරීමෙන් මඩ ගංගා වැනි මිරිදිය ස්ථානයන්හි පතුලෙහි තැන්පත් වේ. එවිට ගංවතුර වැනි විනාශකාරී ස්වභාවික විපත් ඇතිවේ. වන ආවරණයක් තිබීමෙන් වැසිදිය ක්‍රමවත්ව පොළෝතලයට පතිතවීම නිසා පොළෝතලය මත කානු ඇති නොවේ. තවද, ශාක පිහිටි බිම් කොටසක කොලරොඩු නිසා හිදුමස් තිබීමෙන් (පසු මතුපිට) ජලය භූගත ඒ ක්‍රමවත්ව මිරිදිය ස්ථාන වලට ලැබේ.

තවද, ගංගා ඇල දොල වැනි ස්ථාන වලට මලපහ, මූත්‍රා, තෙල් වැනි අප ද්‍රව්‍ය එක්කිරීමෙන් ජල මාතාව දූෂණය වේ. මෙම දූෂණ ක්‍රියාවලීන් තහනම් කිරීම සංවර්ධිත රටවල මේ වන විට ආරම්භ කොට ඇත.

ජල මාතාවගේ ගරුත්වය පළුදු කරන තවත් එක් අංගයකි, කෘෂි කටයුතු වලදී අපද්‍රව්‍ය බැහැර කිරීම. වල් ශාක නැසීමට යොදාගනු ලබන වල් නාශක හා කෘමීයන් නැසීමට ගනු ලබන කෘමි නාෂක අවසානයේදී බැහැර කරනුයේ ගංගා, ඇල දොල වලටය. විවිධ අම්ල වර්ග ජලයට එක් වීමෙන්ද මෙම ජලයෙහි උදාසීන බව ආම්ලික බවට පරිණාමය වේ. එවිට එම ජලය බීමට නුසුදුසුය. අපගේ අතීත රජදරුවන් ජලය රැස් කිරීමට යොදාගත්තා ලද වාරි කර්මාන්තය අද යොදාගන්නේ රථ සේදීමට හා සතුන් සේදීමටය. සත්ත්වයන් අතර උසස්ම මනසක් ඇති මිනිසා හට ඔහුගේ ජීවනාලිය වන ජල සම්පත විනාශයට වැනි දූෂිත ක්‍රියා කිරීමට තරමේ පහළ මට්ටමකට මන උසස් ජීවියාගේ මනස පැමිණියේ කෙලෙසදැයි මම නොදනිමි.

මිනිසා සහ සත්ත්වයන්ගේ පද්ධති ක්‍රියාකාරිත්වයට අවශ්‍ය වනුයේ වාතයයි. ($O_2$) මෙම වාතය අප ලබා ගන්නේ වායුගෝලයෙනි. කුරිරු දනගේ තවත් අනුවන ක්‍රියාවකි, වායුගෝලීය දූෂණය. අපගේ රත්නද්වීපය අපද්‍රව්‍ය බැහැර කිරීම අතින් සිටිනුයේ දුර්වල ස්ථානයකය. බොහෝවිට ලක් ජනයා සිදු කරන්නේ මෙම අපද්‍රව්‍ය පිලිස්සීමයි. එවිට කාබනික අපද්‍රව්‍ය දහනයවීම නිසා දිගුකල් පවත්නා කාබනික දූෂණ හෙවත් Presistent Oranic



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pollutions (POPS) සෑදේ. මෙම POPS වර්ග 12ක් සොයාගෙන තිබේ. ඩයොක්සින්, ෆියුරාන්, ඩී.ඩී.ටී. එවැනි POPS වර්ග කීපයකි. ක්ලෝරීන් අඩංගු රසායන භාවිතයෙන්ද මෙම POPS නිපදවේ. POPS වායුගෝලයට ගොස් ස්වසනය මගින් අපගේ සිරුරට ඇතුල්වේ.

මෙම POPS හේතුවෙන් ප්‍රතිශක්තිකරණය දුර්වලවීම, ප්‍රජනක පද්ධතියේ දුර්වලතා, අංගවිකල දරුවන් බිහිවීම වැනි දෑ සිදුවේ.

වායුගෝලීය දූෂණයේ ප්‍රධානතම හවුල්කරුවා හෙවත් හරිතාගාර වායූන් යනු අද මුළු ලොවම කතිකා කරන මාතෘකාවකි. කාබන්ඩයොක්සයිඩ් හා මීතේන් යනු ප්‍රධාන හරිතාගාර වායූන් වේ. ෆොසිල ඉන්ධන දහනය නිසා මෙම හරිතාගාර වායූන් නිපදවේ. මිහිතලය උණුසුම්වීම යනු හරිතාගාර වායූන් කරණ කොටගෙන වන සංසිද්ධියකි. පසුගිය අප්‍රේල් 22 දා පැවති ජගත් මිහිතල දිනයේදී ප්‍රධාන මාතෘකාව වූයේ මෙම හරිතාගාර වායූන් පිළිබඳවය. කාර්මික විප්ලවයෙන් පසු ලොව විශාලතම වායු දූෂකයා වනුයේ ඇමරිකාව වේ. 1996 වසර වන විටද එක් ඇමරිකානුවෙකු පිටකරන හරිතාගාර වායු ප්‍රමාණය කෙතරම්ද කිවහොත් ඉන්දියානු වැසියන් 19, පාකිස්ථානුවන් 30, ලාංකිකයන් 19, බෙංගාලීන් 107, භූතාන ජාතිකයින් 134, නේපාල වැසියන් 269 නිපදවන තරමේ හරිතාගාර වායු ප්‍රමාණයක් ඔහු නිපදවයි. අතීත රතු ඉන්දියානු නායක සියැටල් පැවසූයේ "මිහිතලය යනු අපගේ මාතාවයි" යනුවෙනි එහෙත් වත්මන් දනන් හට නම් එය නොගැලපේ වනු විනාශය නිසා හරිතාගාර වායු පාලනයද කල නොහැකි තත්වයක් උදාවී ඇත. ගමනාගමනය මගින් හරිතාගාර වායූන් නිපදවීමේ දායකත්වය 21% කි. 2020 වන විට වර්තමානයේ මාර්ගයන්හි ධාවනය වන මෝටර් රථ ප්‍රමාණය වන 300000000 ය පස් ගුණයකින් වැඩිවනු ඇත. එවිට හරිතාගාර වායු නිපැයුම කෙතරම් විය හැකිද?

මේ වන විට ගුවන් යානා මගින් හරිතාගාර වායු නිපැයීමේ දායකත්වය 2% කි. එම සංඛ්‍යාව 2015 වන විට දෙගුණයකින් වර්ධනය විය හැක.

ජීවයේ රැහැන හෙවත් ඕසෝන් ස්ථරය මාර මුඛය තෙක් ගෙනයාමේ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ප්‍රධාන වායුව නම් CFC ය. සුවඳ විලවුන් හා ශීතකරණ වැනිදෑ මගින් CFC පිටවේ. සොම්නසට කරුණක් නම් අප දේශයෙහි මෙම CFC මුදාහරින දෑ නම්කොට තිබේ. එහෙත් සයුරින් එතෙර දේශයන්හි කර්මාන්ත ශාලා මගින් පිටකරන විෂ වායූන් නිසා ඕසෝන් ස්ථරය විනාශ වීම තවදුරටත් නිමවී නැත.

ලෝ සත හට සෙත සලසන වායුගෝලය නම් දිව්‍ය පුත්‍රයාගේ සිරුර

පිරිසිදුව තබා ගැනීම ඔබේ හා මාගේ වගකීම වේ.

පාරිසරික දූෂණය මෙසේ සිදුවෙමින් ගිය තැන අනාගතයේදී සත්ත්ව සංහතිය අපමණ දුක් විඳීමට සිදුවෙනු නියතය.

අනාගත ලෝකයේදී මිනිසාට තමා අතීතයෙහි කළ පව්වල ඵල විඳීමට සිදුවෙනු ඇත. මිහිතලය උණුසුම් වීමෙන් ධ්‍රැවයන්හි හිම ද්‍රව වීම නිසා සිඳුතෙර ගොඩබිම ආක්‍රමණය කරනු ඇත. තවත් 50 000 000 ක ජනයා 2100 වන විට කුසගින්නෙන් පෙළෙන ජනයාට එක්වනු ඇත. දුගීන් හා ධනවතුන් එක්ව වාසය කිරීමෙන් ජීවිතේ කටුක බව මෙන්ම සාමූහිකත්වය නම් සුන්දරත්වයද විඳීමට හැකිවනු නියතය.

ජලාශ අපිරිසිදු වීමෙන් මත්ස්‍යයින් විනාශ වී එම විෂ හේතුවෙන් වසංගත රෝග බෝ විය හැක. පාරජම්බුල කිරණ මිහිතලය මත පතිත වීම නිසා සතුන් තැන තැන මැරී වැටී තිබෙනු දැකීමට හැකිවනු නියතය. දුදනන්ගේ පාපිෂ්ඨ සිතිවිලි හේතුවෙන් වර්ගවාදී අර්බුද පැණ නගිනු ඇත. මිනිසාගේ වත්මන් ක්‍රියා පිළිවෙත යහපත් නම් සුඛිත මුදිත අනාගතයකට උරුමකම් කීමට හැකිවනු ඇත.

පාපිෂ්ඨ වූ අනාගතයකට උරුමකම් නොකිම සඳහාත් සද්ධර්මයෙන් ආඪ්‍යවූ ජන දිවියක් ඇතිකරලීමටත් මෛත්‍රී බුදුන්වහන්සේගේ උත්පත්තියට කාලය එළඹ ඇත.

*කාලෝ අයංතේ මහාවීර !*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரவிக்கப்படுபவர்

# வேலுப்பிள்ளை சங்கரலிங்கம்

### வயலின் வித்துவான், திருகோணமலை.

திரு. வேலுப்பிள்ளை சங்கரலிங்கம் 1922ம் ஆண்டு வைகாசிமாதம் 22ம் திகதி பிறந்தார். ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கும் காலமிருந்தே இசையில் ஈடுபாடுடையவராக இருந்தார். பாடசாலை படிப்பின் பின் தனது உறவினரான சங்கீதவித்துவான் திரு. கே.கே. குமாரசாமி அவர்களிடம் இதனையடுத்து வயலின் இசை பயின்று வந்தார். 1938ல் நாகர்கோயில் சென்று வித்துவான் அருணாசல அண்ணாவியார் அவர்களுடன் 1945ஆம் ஆண்டுவரை குருகுலவாசம் செய்தார். 1945ஆம் ஆண்டிலிருந்து 1961ஆம் ஆண்டுவரை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் நிலை வயலின் விற்பனராக பணியாற்றியுள்ளார். திருகோணமலை சிவயோக சமாஜத்தின் வயலின் விற்பனராக பல நிகழ்ச்சிகளுக்கு வயலின் இசை வழங்கினார். அவ்வாறே திருகோணமலையில் இடம் பெற்ற அனேகமான கலை நிகழ்வுகளுக்கு வயலின் இஸ்சயை வழங்கி மக்களின் பாராட்டினையும், மதிப்பினையும் பெற்றுள்ளார். இவரின் சேவையைபாராட்டி சிவயோக சமாஜம் கலைமாமணிப் பட்டம் வழங்கி கௌரவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றும் இவர் சிறார்களுக்கும், மாணவர்களுக்கும் இசைப்பயிற்சியை வழங்கிக் கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவிக்கப்படுபவர்

# முது கலைஞர் திரு. த. சித்தி அமரசிங்கம்

திரு த. சித்திஅமரசிங்கம் 1937 ஜனவரி 5ந் திகதி திருகோணமலையில் பிறந்தார்.

தனது ஐந்தாவது வயதில் பாடசாலை நாடகமொன்றில் பாத்திரமேற்று நடித்தற்கூடாக, தனது கலைப்பயணத்தை ஆரம்பித்தார். 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனது பாடசாலை காலங்களில் நாடகம் நடிப்பு அதன் வெளிப்பாடு என்பவை தெளிவான உணர்வு நிலை இல்லாத அந்த வயதில் பல நாடகங்களில் நடித்ததனூடாக நாடக நடிப்பில் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது நடிப்பு மாத்திரமன்றி வில்லிசையிலும், தனக்கென ஒரு தனியான இடத்தைப் பெற்றுக் கொண்டார். இவ்வாறே எழுத்துறையிலும் சமகாலப்பகுதியில் சிறந்த எழுத்தாளராக நோக்கக் கூடியவகையில் பல நூல்களினூடாக தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார். 1972இல் ஈழத்து இலக்கியச்சோலை என்ற பெயரில் ஓர் வெளியீட்டகத்தை ஆரம்பித்து எழுத்தாளர்களின் படைப்புக்களை இதனூடாக வெளியீடு செய்து வருகின்றார். அதுமாத்திரமன்றி துறைகள்சார் திறனுடையவர்களை இனங்கண்டு பாராட்டி கௌரவப் படுத்தியுள்ளார்.

1952ஆம் ஆண்டு யாழ் என்ற சஞ்சிகை நூலை வெளியிட்டார். நாடகநூலின் இராவண தரிசனம், அச்சாக்குட்டி போன்ற நூல்களும் இவரது படைப்பால் உருவானது. இவர் கலை இலக்கிய திறமையினைப் பாராட்டி பின்வரும் பட்டங்கள் இவருக்கு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (இவரது ஓயாது கலை இலக்கிய சமூக பணிகளை செவ்வனே புரிந்து வருகின்றார்.)

இவரின் வில்லிசைத் திறனைப் பாராட்டி கலா வினோதன் என்னும் பட்டம் ரசிகர்களால் வழங்கப்பட்டது. இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூசன விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# අන්තෝනි පෙරේරාගේ
# රණසිංහ
# ආන්දන්කුලම

මොහු උපත ලැබුවේ 1956.09.27 වන දින ගෝමරන්කඩවල දීය. මැදවච්චිය රජයේ පාසලින් අධ්‍යාපනය ලැබූ මොහු, 1973 වර්ශයේ මැදවච්චිය වඩු පාසලෙන් අවුරුදු 03 ක වඩු කර්මාන්තය පිළිබඳ ඇති හැකියාව ප්‍රගුණ කරීමෙන් අනතුරුව ඉටි කොල සැරසිලි හා රුක් සිත් රූ කලාවට විශේෂ දක්ෂතාවයන් පෙන්නුම් කරන ලදී (විවිධ ලැලිවල චිත්‍ර ඇඳීම). දැනට නාවික හමුදාවේ සිවිල් අංශයේ පොම්ප ක්‍රියාකරු වශයෙන් සේවය කරන මොහු ප්‍රදේශයේ කැපී පෙනෙන විශේෂ දක්ෂතා වලින් හෙබි නිහතමානී පුද්ගලයෙකු බව පැවසීම ඉතා අගනේය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவிக்கப்படுபவர்

# பக்கீர்பாவா முகம்மது ஹனிபா

இசைத்துறை பாடகர்
கருமலையூற்று வீதி, வெள்ளைமணல்.

ஜனாப் பக்கீர்பாவா முகம்மது ஹனிபா 1954.0421 வெள்ளை மணலில் பிறந்தார். 1962ல் தனது கண்பார்வையை இழந்தார். இவர் இயற்கையில் இசை, ஞானம் படைத்தவர். இளமைக்காலங்களில் இசையைக் கேட்பது, ரசிப்பது, பாடுவது, போன்றவற்றில் மிகவும் ஈடுபாடுடையவராக காணப்பட்டார்.

இசைக் கருவிகளைத் தானாகவே இயக்கி பாடும் வல்லமையைப் பெற்றார். பல இசைக்கச்சேரியில் வாத்தியம் வாசித்தும், பாடல் பாடியுமுள்ளார். 1993ஆம் ஆண்டு காலம் சென்ற முன்னாள் இலங்கை ஜனாதிபதி மாண்புமிகு ஆர்.பிரேமதாச அவர்கள் எக்கோடியன் வாத்தியக்கருவி வழங்கி இவரைக் கௌரவித்தார். கடந்த 2005ஆம் ஆண்டு திருகோணமலை பட்டனமும், சூழலும் பிரேதேச செயலக முதியோர் தினவிழாவில், வாத்தியத்தை இசைத்து பாடல்கள் பாடி பார்வையாளர்களை கவர்ந்து பாராட்டினையும் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவு சாகித்திய விழா - 2006

## கட்டுரை, கவிதை, சிறுகதை போட்டிகளின் முடிவுகள்

01. கட்டுரை (பாடசாலை மட்டத்திலானது

### கனிஷ்ட பிரிவு

1ம் இடம் :- **ஜெப்ரி ஜெராட்லப்பன்**
தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
திருகோணமலை.

2ம் இடம் :- **செல்வி. இ. பிரவீனா**
தி/சென் மேரிஸ் கல்லூரி , திருகோணமலை

3ம் இடம் :- **சாமியா மௌனதி**
தி/சென் மேரிஸ் கல்லூரி , திருகோணமலை

### சிரேஸ்ட பிரிவு

1ம் இடம் :- **ஜீவானந்தன் கஜீபன்**
தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
திருகோணமலை.

2ம் இடம் :- **செல்வி சாமினி சுரேஸ்**
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி
திருகோணமலை

3ம் இடம் :- **செல்வி சஜினி யோகேஸ்வரன்**
தி/சென் மேரிஸ் கல்லூரி, திருகோணமலை

**அபிராமி சிவலோகநாதன்**
தி/சென் மேரிஸ் கல்லூரி, திருகோணமலை
(கட்டுரை சிரேஸ்ட பிரிவில் இருவர் மூன்றாம் இடத்தினை பெற்றவர்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கவிதை விமர்சனம்) - ஒருவர் மாத்திரமே போட்டியில் பங்கு பற்றியவர், பாடசாலை மட்டத்திலானது.)

**செல்வி. சீ. அச்சுதன்**
தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
திருகோணமலை.

(சிறுகதை விமர்சனம்) - ஒருவர் மாத்திரமே போட்டியில் பங்கு பற்றியவர், பாடசாலை மட்டத்திலானது.)

**செல்வி. சீ. அச்சுதன்**
தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
திருகோணமலை.

## சிறுகதை (திறந்த மட்டத்திலானது)

1ம் இடம் :- **திரு. தம்பு சிவசுப்பிரமணியம்**
153, கிறீன் வீதி, திருகோணமலை.

2ம் இடம் :- **ஹலீடா மஹ்ரூப்**
85, மூர்வீதி, திருகோணமலை

3ம் இடம் :- **எஸ். முபீனா**
118/10, மூர்வீதி, திருகோணமலை

## கவிதை (திறந்த மட்டத்திலானது)

1ம் இடம் :- **ஹலீடா மஹ்ரூப்**
85, மூர்வீதி, வீதி, திருக்கோணமலை.

2ம் இடம் :- **திருமதி. வி. அன்பழகன்**
23/2, முதியோர் இல்ல வீதி,
திருகோணமலை

3ம் இடம் :- **திருமதி. காந்தரூபி கணேஸ்**
இல. 62, வரோதயநகர், திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2006 ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල සඳහා ත්‍රිකුණාමලය නගර හා කඩවත් ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාශ මට්ටමින් පැවැත්වූ ගද්‍ය රචනා හා කෙටිකතා තරගයන්හි ජයග්‍රාහක/ ජයග්‍රාහිකාවන් පිළිබඳ විස්තර :-

ගද්‍ය රචනා:-

*කණිෂ්ඨ අංශය:-*

| ලබාගත් ස්ථානය | පාසැල | ශිෂ්‍ය/ශිෂ්‍යාවගේ නම |
|---|---|---|
| 1. | ත්‍රි/සිංහල මධ්‍ය මහා විද්‍යාලය | මෙත් අනුපම බෝගහවත්ත |
| 2. | ත්‍රි/නාලන්දා මහා විද්‍යාලය | එම්.ඊ.කේ. මධුවන්තිකා සිල්වා |
| 3. | ත්‍රි/නාලන්දා මහා විද්‍යාලය | එස්.බී.වානිකා මධුවන්ති |

ගද්‍ය රචනා:-

*ජ්‍යෙෂ්ඨ අංශය:-*

| ලබාගත් ස්ථානය | පාසැල | ශිෂ්‍ය/ශිෂ්‍යාවගේ නම |
|---|---|---|
| 1. | ත්‍රි/නාලන්දා මහා විද්‍යාලය | එම්.එම්.එන්. ජූලියට් සිරිවර්ධන |
| 2. | ත්‍රි/නාලන්දා මහා විද්‍යාලය | සනෝජා කල්පනි ජයසූරිය |
| 3. | ත්‍රි/නාලන්දා මහා විද්‍යාලය | ජේ.බී.කලිදු |

කෙටිකථා තරගය:-

| ලබාගත් ස්ථානය | ශිෂ්‍ය/ශිෂ්‍යාවගේ නම | ලිපිනය |
|---|---|---|
| 1. | ජී.ඩබ්.සසංකා චාමලී | 137,අභයාරාම මාවත, අභයපුර, ත්‍රිකුණාමලය. |
| 2. | එස්.එච්.මයුමි නිමාෂා නදීෂානි | 205,මහාමායාපුර, ත්‍රිකුණාමලය. |
| 3. | ඒ.එල්.ලංකා රුක්ෂානි විමුක්ති | අංක:1105, පාලයූත්තු, ත්‍රිකුණාමලය. |

පද්‍ය රචනා තරගය:-

| ලබාගත් ස්ථානය | ශිෂ්‍ය/ශිෂ්‍යාවගේ නම | ලිපිනය |
|---|---|---|
| 1. | එස්.එච්.මයුමි නිමාෂා නදීෂානි | 205,මහාමායාපුර, ත්‍රිකුණාමලය. |
| 2. | ජී.ඩබ්.සසංකා චාමලී | 137,අභයාරාම මාවත, අභයපුර, ත්‍රිකුණාමලය. |
| 3. | ඒ.ජී.හේවාවිතාරන | ත්‍රි/රාජකීය විද්‍යාලෝක ජාතික පාසැල. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச சாகித்திய விழா குழு - 2006

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திருமதி. ச. ஜலதீபன் (பிரதேச செயலாளர்) |
| செயலாளர் | :- | திருமதி ம. சத்தியபாமா (கலாசார உத்தியோகத்தர்) |
| பொருளாளர் | :- | திரு. அன்ரனி பற்றிக் (கிராம சேவை உத்தியோகத்தர்) |
| இணைப்பாளர் | :- | திரு. எஸ். மகேந்திரராஜா (மாவட்ட கலாசாரஉத்தியோகத்தர்) |

### பொதுக்குழு

| | |
|---|---|
| திரு. த. சிவசெந்தில்நாதன் | (கணக்காளர்) |
| திருமதி. மு. விஜயதாசன் | (திட்டமிடல் உதவிப்பணிப்பாளர்) |
| திரு. ந. சித்திரவேல் | (நிதி உதவியாளர்) |
| திருமதி. இ. பரஞ்சோதி | (பிரதமலிகிதர்) |

### நிதிக்குழு

| | |
|---|---|
| திரு. எஸ். சந்திரசேகரன் | (சமுர்த்தி உத்தியோகத்தர்) |
| திரு. ஆர். பார்த்தீபன் | (விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர்) |
| திரு. எஸ். அருந்தவச்செல்வன் | (கிராமசேவை உத்தியோகத்தர்) |
| ஜனாப். ராசிக்கீன் | (கிராமசேவை உத்தியோகத்தர்) |
| திரு. எஸ். ஸ்ரீகணேசலிங்கம் | (கிராமசேவை உத்தியோகத்தர்) |
| திரு. எஸ். சுதாகரன் | (கிராமசேவை உத்தியோகத்தர்) |
| திரு. எஸ். சுந்தரமகேசன் | (கிராமசேவை உத்தியோகத்தர்) |
| திரு. ரஞ்சித் பியசேன | (கிராமசேவை உத்தியோகத்தர்) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழு

திரு. அ. பரசுராமன் (ஓய்வு பெற்ற பரதி கல்விப் பணிப்பாளர்)

திரு. சி. மகேந்திரராஜா (மாவட்டகலாசார உத்தியோகத்தர்)

திரு. எஸ். சிவானந்தம் (கிராமசேவை உத்தியோகத்தர்)

திரு. எஸ். சித்திரவேல் (நிதி உதவியாளர்)

ஜனாப் A.S.M. யசீர் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்)

திரு. S.W. கருணதாச (கலைஞர்)

## நிகழ்ச்சி ஒழுங்கு அலங்காரக்குழு

திரு. என். நித்தியகுமார் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)

திரு. எம். கிருஸ்ணமூர்த்தி (தொழிநுட்ப உத்தியோகத்தர்)

திரு. K. சுரேன் (எழுதுவினைஞர்)

திரு. எஸ். சாந்தரூபன் (எழுதுவினைஞர்)

திரு. என். சதீஸ்கண்ணா (வெளிக்கள உத்தியோகத்தர்)

திரு. எஸ். வாமதேவன் (கிராமசேவை உத்தியோகத்தர்)

திரு. எஸ். தவராஜா (கிராமசேவை உத்தியோகத்தர்)

திரு. எஸ். மகேஸ்வரன் (கிராமசேவை உத்தியோகத்தர்)

திரு. எஸ். விக்னேஸ்வரன் (கிராமசேவை உத்தியோகத்தர்)

திரு. J.P. ஜோன்பிள்ளை (விளையாட்டுதுறை உத்தியோகத்தர்)

திரு. R. சோதிலிங்கம் (மனிதவள அபிவிருத்தி உதவியாளர்)

திரு. S. ரவீந்திரன் (நிகழ்ச்சிதிட்ட உதவியாளர்)

திருமதி. T. விஜேந்திரன் (எழுதுவினைஞர்)

## பரிசு, மற்றும் சான்றிதழ் குழு

திரு. என். ஜெயகாந்தன் (கிராம சேவை உத்தியோகத்தர்)

திரு. சு. பிரகலா (மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர்)

திரு. எஸ். புவிராஜசிங்கம் (விஞ்ஞான தெபழில்நுட்பத்துறை உதவியாளர்)

றீட்டா பெர்ணான்டோ (எழுதுவினைஞர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. என். நாளினி (எழுதுவினைஞர்)
செல்வி. T. சுலக்சினி (எழுதுவினைஞர்)
ஜனாப். முபாறக் (பிரதம எழுதுவினைஞர், காணி)
செல்வி. எஸ். ஸ்ரீஸ்கந்தகுமாரி (எழுதுவினைஞர்)
ஜனாப். M.A. காதர் பிரதம எழுதுவினைஞர், (ஓய்வூதியம்)

## வரவேற்புக்குழு

திரு. M. தர்மகுலசிங்கம் (கிராமசேவை உத்தியோகத்தர்)
திருமதி. P. இந்துமதி (பிரதம எழுதுவினைஞர்)
திருமதி. R. நித்தியலெட்சுமி (பிரதம எழுதுவினைஞர்)
திரு. L. சற்குணலிங்கம் (அபிவிருத்தி திட்ட உத்தியோகத்தர்)
திரு. எஸ். எஸ். சுதர்சன் (நிகழ்ச்சி திட்ட உதவியாளர்)
செல்வி. T. வசந்தாலக்சுமி (எழுதுவினைஞர்)
திரு. R. இராமச்சந்திரன் (கிராமசேவை உத்தியோகத்தர்)

## உபசரணைக்குழு

திருமதி. கே. காந்தரூபி (சமுர்த்தி முகாமையாளர்)
திருமதி. துரைநாயகம் (கிராமசேவை உத்தியோகத்தர்)
திருமதி. சகுந்தலாதேவி (கிராமசேவை உத்தியோகத்தர்)
திருமதி. என். சுதர்சினி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)
திருமதி. புஸ்பா (சமுர்த்தி முகாமையாளர்)
செல்வி. எஸ். சிவனேஸ்வரி (எழுதுவினைஞர்)
செல்வி. எஸ். பத்மராணி (எழுதுவினைஞர்)
செல்வி. K. கவிதா (எழுதுவினைஞர்)
செல்வி. எஸ். நிரஞ்சி (எழுதுவினைஞர்)
செல்வி. ஜீ. டிலானி (மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்)
திருமதி. ஜெயந்தி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)
செல்வி. K.தயானந்தி (நிகழ்ச்சி திட்ட உதவியாளர்)
திரு. எஸ். ஐங்கரன் (திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்)
ஜனாப். யுஸ்றி (வாழ்வாதார உத்தியோகத்தர்)திருமதி. திரு.
வி. விமலச்சந்திரன் (சமுர்த்தி உத்தியோகத்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமைச் சபதம்

- "அனைவரும் அலுவலகத்தில் ஒன்று கூடி எழுந்து நின்று எடுக்க வேண்டி கடமைச் சபதங்கள் இவையே!"

- "நாம் எல்லோரும் நல் ஊக்கத்துடனும், நல் ஆர்வத்துடனும் திறமையாகப் பணிபுரிவோம்."

- "எங்கள் மத்தியில் உறுதியும், ஊக்கமும், உற்சாகமும், மனத்தென்பும், மனமகிழ்வும் ஊற்றெடுத்து எமது சேவைத்திறனை மென்மேலும் மேம்படுத்தட்டும்."

- "நாங்கள் எல்லோரும் மனமகிழ்வுடனும், மனநிறைவுடனும் திறமையாகக் கடமையாற்றி, பெயர், புகழ் பெருவாழ்வு பெற்றிடுவோம்."

- "நாங்கள் எல்லோரும் முழு மனநல ஆரோக்கியத்துடனும் கடமை ஆற்றி உடல்நலமும் மனநலமும் பெற்றிடுவோம்."

- "இன்று எல்லோரும் எம்மைப் போற்றிப் புகழ்ந்து பாராட்டும் வண்ணம் எங்களுடைய முழுத்திறமையும், திறனும் பரிணமிக்கும்."

- "இன்று நலம் தரும் இன்மகிழ்நல வெற்றி எணணங்களை மட்டுமே நாம் சிந்திப்போம். நலம் தரும் விடயங்கள் பற்றியே உரையாடுவோம். இன்று நன்றே நடக்கும் நலமே பெருகும்."

- "இன்றே செய்வோம் அவற்றை நன்றே செய்வோம் என்ற கோதாவில் இன்றைய கருமங்கள் யாவற்றையும் இன்றே கற்றி இனிதே மகிழ்வோம்."

- "முடியாது, இயலாது, தெரியாது, புரியாது, நேரமில்லை என்ற சொற்களைப் பிரயோகிக்காது. முடியும், முயற்சிப்போம். தெரியும், இலகுவானது, சுலபமானது ஆகிய மகிழ்ச்சிதரும் கடமை வெற்றி வாக்கியங்களை மட்டும் இன்று பாவித்து உத்தம கடமைச் சூழலையும், உயர்ந்த சேவைத் திருப்தியையும் ஏற்படுத்தி, மகிழ்வுடனும், மகிழ்ச்சியுடனும் பணிபுரிவோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச கலாசார உத்தியோகத்தரும் - பிரதேச சாகித்திய விழா செயலாளருமாகிய

## திருமதி சத்தியபாமா மகேந்திரராஜா அவர்களின் நன்றியுரை

கலை, இலக்கியங்களே சமுதாயத்தின் விடிவிளக்காய் ஒளிர்கின்றன. காலம் காலமாக தொடர்ந்து வரும் மானிட சமுதாயத்தின் வாழ்க்கை முறைகளையும், பாரம்பரியங்களையும், மானிட விழுமியங்களையும், நாம் கலை இலக்கியங்களினூடாக காணக்கூடியதாக உள்ளது. கருத்தாளம் மிக்க சிந்தனைத் திறன் கொண்ட எண்ணக் கருக்களை கலை இலக்கியங்களாகப் படைக்கும் கர்த்தாக்கள் பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்களாவர். கலை இலக்கிய விழாக்கள் ஓரளவிற்கேனும், கலை இலக்கிய மேம்பாட்டிற்கும் உதவுகின்றது என்பதைக் குறிப்பிடலாம். இதனடிப்படையில் நடத்தப்படும் பிரதேச சாகித்திய விழாவிற்குஒத்துழைத்த அனைவருக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பிரதேச சாகித்திய விழாவினை நடத்துவதற்கும் தலைமை தாங்கி வழிநடத்திய திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலாளர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆலோசனை வழங்கிய கலாபூசணம் அ. பரசுராமன் அவர்கள் பிரதேச சாகித்திய விழா பாடசாலை மட்டத்திலான கட்டுரைப் போட்டிகளை நடாத்தி முடிக்க உதவிய திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர்கள் பங்கு பற்றிய மாணவர்கள், மற்றும் சிறந்த போட்டியாக நடத்தப்பட்ட கவிதை சிறுகதைப் போட்டிகளில் பங்கு பற்றியவர்களை போட்டி பெறுபேறுகளை நடுநிலை நின்று மதிப்பீடு செய்து உதவி வழங்கியவர்கள் இவ்விழாவின் பொருட்டு நிதி உதவி வழங்கிய திருகோணமலை SLRCS நிறுவனம், கலாச்சார அலுவல்கள் திணைக்களம், CHA நிறுவனம் திருகோணமலை. விழா மலருக்கு ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்தி வழங்கிப் பெருமைப்படுத்தியவர்கள் ஆக்கங்களை வழங்கியவர்கள் விழா மலருக்கான அட்டைப்படம் தயாரித்து வழங்கியவர் மலரைச் சிறப்புற அச்சிட்டு வழங்கிய றெயின்போ மினிலப் பதிப்பகம், விழாவை நடத்துவதற்கு மண்டபத்தை தந்துதவியவர்கள், கலைவிழாவிற்கு கலை நிகழ்ச்சிகளை வழங்கிய கலை நிறுவனங்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பங்குபற்றியவர்கள், விழாவிலே விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்த உயர் அதிகாரிகள், பெரியோர்கள் மற்றும் கலந்து கொண்ட பெருமக்கள் அனைவருக்கும் ஒலி, ஒளி அனைத்தும் தந்துதவியவர்கள் மற்றும் பல வகையிலும் உதவி செய்த அனைவருக்கும்.

நன்றி.

**திருமதி. சத்தியபாமா - மகேந்திரராஜா**
**கலாசார உத்தியோகத்தர்**
**பிரதேச செயலகம்**
**திருக்கோணமலை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org